# வைகறை வெளிச்சம்

விலை ரூ.20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 15 Issue - 01 ஜனவரி 2022 - ஜமாஆத்துல் அவ்வல் - ஜமாஆத்துல் ஆகிர் 1443




## அமெரிக்காவில் முஸ்லிம்/இஸ்லாமிய வெறுப்பிற்கு எதிராக சட்டம்

## காந்திஜியை காப்பாற்றிய முஸ்லிம்!

## காந்திஜி கொலையில் சாவர்க்கரும் - காங்கிரசும்

மோடி மறைத்த அவுரங்கசீப் வரலாறு

இந்திய நாகரீக வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்கு!

بسم الله الرحمن الرحيم

(பத்ரு களத்தில்) சந்தித்த இரு சேனைகளிலும் உங்களுக்கு ஓர் அத்தாட்சி நிச்சயமாக உள்ளது; ஒரு சேனை அல்லாஹ்வின் பாதையில் போரிட்டது; பிறிதொன்று காஃபிர்களாக இருந்தது; நிராகரிப்போர் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவோரைத் தங்களைப்போல் இரு மடங்காகத் தம் கண்களால் கண்டனர்; இன்னும், அல்லாஹ் தான் நாடியவர்களுக்குத் தன் உதவியைக் கொண்டு பலப்படுத்துகிறான்; நிச்சயமாக, (அகப்) பார்வையுடையோருக்கு இதில் திடனாக ஒரு படிப்பினை இருக்கிறது.(அல்குர்ஆன் 3:13)


**காந்திஜி கொலையில் சாவர்க்கரும் - காங்கிரசும்** **04**

**காந்திஜியை காப்பாற்றிய முஸ்லிம்! பகித் மியான் வரலாறு** **10**

**அமெரிக்காவில் இஸ்லாமோஃபோபியாக்கு எதிராக சட்டம்** **14**

- கம்யூனிஸ்டு ரஷ்யா 30 ஆண்டுகளுக்குப் பின் வெளிவந்த ரகசியம்! **20**
- மோடி மறைத்த ஔரங்கசீப் வரலாறு **26**
- இப்படியும் ஒரு மன்னரா? **34**
- சிலுவைப்போர் 2.0 **36**
- இந்திய நாகரீக வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்கு **46**
- உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும், வீழ்ச்சியும் **52**


## தொடர்கள்...


- பெண் ஒரு சுதந்திர நீதி - மகளிர் மன்றம் 29
- குளிர் காலத்தில் இதய நோயாளிகளின் கவனத்திற்கு - மருத்துவம் 40
- மனநலம் பேணுவோம் - குழந்தை வளர்ப்பு - 44
- பெற்றோர்களின் பாதுகாப்பு 54
- சித்தார்த் ஏன் ஷதாப் ஆனார்? இஸ்லாம் நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம் 56



ஜனவரி 2022 - ஜமாஅத்துல் அவ்வல் - ஜமாஅத்துல் ஆகிர் 1443

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,

தனி இதழ்: ரூ.20 | ஆண்டுச் சந்தா - உள் நாடு: ரூ.300 / வெளி நாடு: ரூ.3000.

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only

# காந்திஜி கொலையில்

# சாவர்க்கரும் - காங்கிரசும்



கோட்சே (காந்தியை கொன்றவன்)

மகாத்மா காந்திஜி பிறந்த நாள் அக்டோபர் - 2 (1869) இந்த நாளை காந்தி ஜெயந்தி என கொண்டாடுகின்றார்கள். ஆனால் காந்திஜி கொலை செய்யப்பட்ட ஜனவரி 30ஆம்(1948) நாளை, அத்துணை விமர்சையாக நினைவு கூறுவதில்லை. அதாவது ஏனையவர்களின் நினைவு நாளை, நினைவு கூறுவதைப்போல் நினைவு கூறுவதில்லை.

காரணம் காந்திஜியை கொலை செய்தவன் ஒரு இந்துத்துவவாதி! அதற்குப் பின்னால் இருந்து சதிசெய்து நிறைவேற்றியவர், சாவர்க்கர் என்ற இந்துத்துவ மூளை.

மக்கள் நீதி மைய்யம் என்ற கட்சியின் தலைவர் நடிகர் கமல்ஹாசனின் சொற்களால் சொன்னால் “இந்தியாவின் முதல் தீவிரவாதி ஒரு இந்து. முதல் தீவிரவாதச் செயல் காந்தி கொலை”. இதனை வெளிநாட்டு ஆய்வாளர்கள் "The Crime of the Century" இந்த நூற்றாண்டின் தலைமை குற்றம் என்கின்றார்கள்.

காந்திஜி கொலை செய்யப்பட்டப் பின்னணியைக் குறித்து நாம் பல கட்டுரைகளை “வைகறை வெளிச்சம்” வாசர்களுக்குத் தந்துள்ளோம். அதில் நாம் அண்மையில் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரைகள் - காந்திஜி கொலையில் சாவர்க்கர் தப்பியது எப்படி? என்பதை வாசகர்கள் படித்திருப்பார்கள் என்பதால் இந்த கட்டுரையில் வேறொரு ஆய்வை முன்வைக்கிறோம்.

தூக்கு மேடைக்கு முன் காந்திஜியைக் கொலைசெய்த கோட்சேயும், ஆப்தியும் எப்படி நடந்துகொண்டார்கள் என்பவையெல்லாம் வாசகர்களுக்குத் தரப்பட்டது. இத்தனையும் காந்திஜியின் கொலையுண்ட நாளை மக்களுக்குச் சொல்லவும், இந்த இந்துத்துவாவாதிகள் இந்த நாட்டில் செய்த கொலைபாதகங்கள் என்னென்ன? என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி மக்கள் மன்றத்தை விழிப்படையச் செய்திடத்தான்.

அத்தோடு நம் நாட்டின் விடுதலையில் முக்கியப் பங்கு வகித்த மகாத்மாகாந்தியின் மரணமும், வாழ்வும் மக்கள் மன்றத்தையும், இளைய தலைமுறையினரையும் சென்றடைந்திட வேண்டும் என்பதற்காகவும்தான்.

அதேபோல் காந்திஜி கொலையின் முழு பின்னணியையும் மக்கள் மன்றத்தில் இன்றும் முழுமையாக வெளியிடவில்லை என்பது எமது கருத்து. இதற்காக நாம் எடுத்துக்கொண்ட சிரமங்கள் சொல்லிமாளாது.

இதற்காக நாம் ஆயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்ட அடிப்படை ஆதாரங்களை ஆய்வுக்கு உட்படுத்தியபோது பல உண்மைகள் வெளிவந்தன.

அவற்றை, ஒவ்வொரு ஆண்டும் காந்திஜி கொலையுண்ட நாளில் வெளிப்படுத்தி வருகின்றோம். இவையெல்லாம் மேடைப் பேச்சாளர்களுக்கு பெரிதும் உதவியது என்பது உண்மை.இந்த உண்மைகள் காலங்கடந்தவை என எவரும் சொல்லிவிட முடியாது, காரணம் காலங்கடந்தேனும் வெளிப்படுகின்றனவே என்ற நிம்மதி நம் மக்களுக்கு உண்டு. எங்களை (வைகறை வெளிச்சம் ஆசிரியர் குழுவைப்) பொருத்தவரை காலங்கடந்தேனும் உண்மைகள் இன்றைய தலைமுறைக்குக் கிடைக்க வேண்டும். அவர்கள் இன்றைய இந்தியாவைப் புரிந்துகொள்ள மிகவும், அதிகமாகப் பயன்படும்.

“வரலாறு தெரியாதவர்கள் வரலாறு படைக்கவியலாது”. என்ற உண்மையை நாம் மறப்பதே இல்லை. இங்கே தரப்படுகின்ற தகவல்கள் நாம் ஏற்கனவே வெளியிட்டுள்ள காந்தி கொலை ஏன்? எப்படி...? சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம் என்ற நூலில் இடம்பெற்றவை.

**உளவுத்துறை என்ன செய்தது?**

ஆய்வு முடிவுகள் முதன்முதலில் காந்திஜியைக் கொலைசெய்திட சாவர்க்கர் உள்ளிட்டோர் ஆறு முறை முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஆறு முறை அவர்கள் செய்த முயற்சி பல அலம்பல்களையும் ஏற்படுத்தியது.

இப்படி முயற்சிகளைச் செய்து கொண்டிருப்பவர்கள் காந்திஜியைக் கொலை செய்துவிடுவார்கள் ஒரு நாளில் என்பது நமது உளவுத்துறைக்குத் தெரியாதா?

அவர்கள் இதுபற்றி தந்த தகவல்கள், தடுத்திட எடுத்திட்ட நடவடிக்கைகள் என்னென்ன? - தடுக்கவில்லை என்பதை நாமறிவோம்.

அப்படியானால் காந்தி கொலையில் உளவுத்துறையின் நிலைப்பாடென்ன?

காந்திஜி கொலை செய்யப்பட வேண்டும் என்பதாக இருந்ததா? ஏனெனில் ஜனவரி *17, 1948* இல் காந்திஜியைக் கொலை செய்ய வந்தக் கூட்டம் (அவர்களின் பெயர்கள் Boxல் உள்ளது) காந்தியை அன்றே கொலை செய்திட துப்பாக்கியையும், வெடிகுண்டுகளையும் கொண்டு வந்திருந்தது. கூட்டத்திற்கு கோட்சேதான் தலைவர்.

ஆனால் துப்பாக்கி வேலை செய்யவில்லை என்பதை முன் பரிசோதனையில் தெரிந்து கொண்டார்கள். ஒருவேளை கொண்டு வந்த வெடிகுண்டு வெடிக்காவிட்டால், காந்தியைக் கொலை செய்வது நிறைவேறாமல் போய்விடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டது.

ஆகவே வெடிகுண்டையும் சோதித்துப் பார்த்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தார்கள். வெடிகுண்டை தாங்கள் தங்கியிருந்த ஹோட்டலின் குளியல் அறையில் வைத்து சோதித்துப் பார்த்தார்கள். வெடிகுண்டு வெடித்து விட்டது. பெரும் சப்தத்துடன், புகையும் பெருக்கெடுத்து வந்தது. ஒரு பெரிய அலம்பல், அலறல் ஹோட்டலில் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்த ஹோட்டல் வெறிச்சோடிக் கிடந்தது, கண்டுகொள்வார் யாருமில்லை. வாகாக அனைத்தையும் மறைத்திட முடிந்தது.

மீண்டும் ஜனவரி 20இல் நல்ல துப்பாக்கி குண்டுகளுடன் வந்தார்கள். டெல்லியிலுள்ள பிர்லா மாளிகையில் காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டத்தில் வைத்தே அவரைக் கொலைசெய்திட வேண்டும் என முடிவுசெய்தார்கள். குண்டை எரிவது கொலையாளிகளின் நடுவனான மதன்லால் பேஷ்வாவின் பணி. பிரார்த்தனை கூட்டத்தில் குண்டை எறிந்தவுடன் புகைமண்டலம் கிளம்பும், புகை மண்டலத்தின் ஊடே காந்தியின் உடலின் மீது குண்டுகளை பாய்ச்சிவிட வேண்டும் கோட்சே, என முடிவு செய்தார்கள்.

மதன்லால் பேஷ்வா குண்டை எறிந்தார்கள். புகைமண்டலம் கூட்டத்தை மறைத்திடும் அளவில் எழவில்லை. அதனால் கோட்சே காந்திஜியைச் சுடவில்லை. சும்மா நின்றுவிட்டான்.

இவர்கள் காவல் துறையிடம் பிடிபட்டார்கள். சாவர்க்கரின் ஆட்கள்தாம் இவர்கள் என்பதை, இவர்களை விசாரித்த அதிகாரிகள் தெரிந்து கொண்டார்கள். இவர்கள் இந்து ராஷ்டிரா பத்திரிகையைச் சார்ந்தவர்கள் என்பதையும் விசாரித்துத் தெரிந்தார்கள்.

ஆனால் சந்தடியில்லாமல் விட்டுவிட்டார்கள். இந்து ராஷ்டிரா பத்திரிக்கை, சாவர்க்கர் தொடங்கி பின்னர் கோட்சே வகையறாக்களிடம் ஒப்படைத்தது.

உளவுத்துறை இவர்களைக் கண்காணித்திருந்தால், இவர்களின் அடுத்தடுத்த முயற்சிகளைத் தடுத்திருக்கலாம். காந்திஜியைக் காப்பாற்றி இருக்கலாம்.

இது அவர்களின் கடமை! அதை அவர்கள் ஏன் செய்யவில்லை? இதனால்தான் காந்தியின் கொலையை அனுமதிப்பது என்பது, உளவுத் துறையின் முடிவாக இருந்ததா? என்ற ஐயம் அனைத்து ஆய்வாளர்களுக்கும் எழுகின்றது.

**வல்லபாய் பட்டேல்**

அதேபோல் அந்தக் காலகட்டத்தில், உள்துறை அமைச்சராக இருந்தவர் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள். இந்திய மத்திய உளவுத்துறை, உள்துறை அமைச்சகத்தின் கீழ்தான் வருகின்றது. சர்தார் வல்லபாய் பட்டேல் இந்துத்துவ சிந்தனை மிக்கவர். அதை அவர் எங்கேயும் வெளிப்படையாகக் காட்டியதில்லை சொற்களால். ஆனால் செயலால் அவர் அதைப் பலமுறை காட்டியுள்ளார்.

பாபர் மஸ்ஜித் -இல் சிலை வைக்கப்பட்டது என்ற செய்தி பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களுக்குப் போய் சேர்ந்தவுடன், சிலையை அகற்றி விட்டு அதை மஸ்ஜித்-ஆக முஸ்லிம்களிடம் ஒப்படையுங்கள் என கடிதம் எழுதினார் பண்டித நேரு.அது நடக்கவில்லை.


சாவர்கர்

மீண்டும் முஸ்லிம்கள் அழுத்தம் கொடுக்கவே, நான் எழுதிய கடிதம் என்ன ஆனது எனக்கேட்டார் பிரதமர் நேரு. அதற்குக் கிடைத்த பதில், அதனை சர்தார் வல்லபாய் பட்டேல் பார்த்துக் கொண்டிருக்கின்றார், என்பதே!.

பின்னர் பாபரி மஸ்ஜித் பாதுகாப்பு என்ன ஆனது என்பதை நாமறிவோம். (விரிவான தகவல்களுக்குப் படியுங்கள் பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள்- "வேர்கள் பதிப்பகம்".)

அதுபோல ஒரு நாடகம்தான் காந்தி கொலையிலும் நடந்ததா...? என்றால் ஆமாம்!

இப்போது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு, பாஜீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள் வானளாவ சிலை வைத்ததற்கு இதுவும் ஒரு காரணமா ...?

**அடுத்து**

காந்தி கொலையை முதலில் விசாரித்த காவல்துறை அதிகாரி ஜாம்ஷட் நகர்வாலாவுடன் தான் தினமும் தொடர்பில் இருப்பதாக கடிதம் எழுதினார் வல்லபாய் பட்டேல். பிப்ரவரி 27,

# சாவர்க்கரின் சாயம் வெளுத்தது!

## குடியரசுத் தலைவரிடம் குமுறிய ஒரு சுதந்திரப் போராட்ட வீரர்

ஆகஸ்ட் 10 , குடியரசுத் தலைவர் மாளிகையின் தோட்டம் பரபரப்பாக இருந்தது. இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய மாவீரர்களை அழைத்து விருந்தளித்து, அவர்களைக் கௌரவப்படுத்தினார் குடியரசுத் தலைவர்.

கொல்கத்தாவிலிருந்து தினேஷ் தாஸ் குப்தா என்ற 92 வயது சுதந்திர போராட்ட வீரர் வந்திருந்தார். இவர் அந்தமான் சிறையில் 1933 முதல் 1938 வரை 5 ஆண்டுகள் சித்திரவதைப்பட்டவர். இவர் ஆங்கிலேயரின் சிட்டகாங்க் ஆயுதக் கிடங்கைக் கைப்பற்றிய குழுவில் இடம்பெற்றவர். இவர் சமீபத்தில் அந்தமான் சென்றிருந்தார்.அங்கு போர்ட் பிளேரில் தியாகிகள் பூங்காவைப் பார்வையிட்ட அவர், அதிர்ச்சியில் உறைந்து போனார். அங்கு வைக்கப் பட்டிருந்த தியாகிகள் சிலைகளோடு சாவர்க்கரின் சிலையும் வைக்கப்பட்டிருந்ததுதான் அவரது அதிர்ச்சிக்குக் காரணம்.

அங்கிருந்த 8 சிலைகளுக்குச் சொந்தக்காரர்களும் மிருகத்தனமான சித்திரவதைகளை அனுபவித்தனர். அவர்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்தனர். ஆங்கிலேயரிடம் அவர்கள் உயிர்பிச்சைக் கேட்கவில்லை. மாறாக, சாவைச் சலனமின்றி ஏற்றுக்கொண்டனர். ஆனால் சாவர்க்கரோ ஆங்கிலேயர்களுக்கு உதவுவதாக கடிதம் எழுதிக்கொடுத்தார். அதனால் அவரை விடுதலை செய்தனர்,

*1948*இல் இந்நாளில் பண்டித நேருவுக்கு எழுதிய கடிதத்தில், இப்படிக் குறிப்பிட்டார்.

I have kept myself almost in daily touch with the progress of the investigation regarding BAPU's assassination case.

(ஆதாரம் : Frontline - 11 January 2020, A. G. Noorani's article )

இப்படி எல்லா விவகாரங்களிலும் தான் பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறி பிரதமர் நேருவை வழிமறித்தார் சர்தார் வல்லபாய் பட்டேல்.

எல்லாம் தன்னுடைய பார்வையில் நன்றாகவே போய்க்கொண்டிருக்கின்றது என இடைமறிப்பார். இறுதியில் இந்துத்துவ சக்திகளைக் காப்பாற்றிடுவார். அப்படித்தான் சாவர்க்கரைக் காப்பாற்றி இருக்கின்றார். இது பிந்தைய நிகழ்வுகள் உணர்த்தும் உண்மை.

ஒருகட்டத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல் சாவர்க்கர் தான் காந்தி கொலையின் மூளை எனவும் சொன்னார். ஆனாலும் அவரைக் காப்பாற்றிடுவதில் வெற்றி கண்டார்.

சாவர்க்கரின் பங்கு பற்றி வல்லபாய் பட்டேல் இப்படிக் கூறினார் :

It was a fanatical wing of Hindu Mahasabha directly under Savarkar that hatched the conspiracy and saw it through

(ஆதாரம்:Frontline A. G. Noorani's Article january 11 2020, an updated version of December 31,2019 Article.)

ஆனாலும் சாவர்க்கர் தண்டனை பெறவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டார் சர்தார் வல்லபாய் பட்டேல்.

இன்றைய உள்துறை அமைச்சர் வல்லபாய்



வல்லபாய் பட்டேல்

பட்டேல் அவர்கள், இதை தன் வாழ்நாள் முழுவதும் ஒரு உத்தியாகவே கடைபிடித் திருக்கின்றார். அது முதலில் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்வது, பின்னர் நடைமுறையில் தான் விரும்புவது போல் நடப்பது. இதைத்தான் கொள்கை அளவில் ஒத்துக்கொள்வது ஆனால், நடைமுறையில் இல்லாமலாக்கிவிடுவது. - Concede in Concept Defeat in Detail என ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள்.

இதைத் தன் வாழ்க்கை முழுவதும் முஸ்லிம்களுக்கு எதிராகவும், இந்துத்துவாவிற்கு சாதகமாகவும் செய்திருக்கின்றார். நாடு விடுதலையடைந்து அரசியல் நிர்ணயச் சட்டம் வடிவமைத்துக் கொண்டிருந்தபோது சிறுபான்மையினர்களுக்கான ஆணையம் ஒன்று அமைப்பதில் அவர் என்னென்ன தகிடு தத்தங்களைக் கட்டவிழ்த்துவிட்டார் என்பதை

என்று கூறிய தினேஷ் தாஸ்குப்தா, "அந்தத் தியாகச் சீலர்களோடு சாவர்க்கரின் சிலையை வைத்தது,"

அவர்களையும் அவர்களது தியாகத்தையும் அவமதிப்பதாகும்" என்று காட்டமாகக் கூறினார்.

"நானும் சாவர்க்கரும் ஒன்றாகத்தான் சிறையில் அடைபட்டோம், நானும் விடுதலை செய்யப்பட்டேன். சாவர்க்கரும் விடுதலை செய்யப்பட்டார். இப்படியிருக்க சாவர்க்கர் எப்படி தியாகியாவார்?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

பிப்ரவரி மாதம் பாசிச பா.ஜ.க அரசு சாவர்க்கரின் உருவப்படத்தை பாராளுமன்றத்தில் வைத்தது. இந்தச் சிலையை வைத்ததற்கு ஒருவகையில் உதவியாக இருந்த குடியரசுத்தலைவர் மேல் தினேஷ் தாஸ் குப்தாவுக்கு கொஞ்சம் வருத்தம் இருந்தது.

ஆனால் அந்தமான் சென்றிருந்த பொழுது தியாகிகள் சிலைகளோடு சாவர்க்கரின் சிலையையும் பார்த்த பிறகுதான் தாஸ் குப்தாவுக்குப் பொறுக்கமுடியவில்லை. உடனே இதற்கு, தான் ஏதாவது செய்தாக வேண்டும் என்று முடிவெடுத்தார். அந்தச் சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தார். அப்பொழுதுதான் குடியரசுத் தலைவரிடம் இருந்து விருந்துக்கான அழைப்பு வந்தது. விருந்துக்கு வந்த தாஸ்குப்தா குடியரசுத் தலைவரிடம், தனது மனக்குமுறலைக் கொட்டித் தீர்த்தார்.

"என்னால் இதற்கெதிராக ஒன்றும் செய்ய முடியாது, ஏனெனில் என்னிடம் எந்த அதிகாரமும் இல்லை. என்னால் முடிந்ததெல்லாம் குடியரசுத் தலைவரிடம் தெரிவிப்பதுதான். அதனை நான் செய்துவிட்டேன்" என்று விரக்தியோடு கூறுகிறார் தாஸ் குப்தா.

அந்தமான் தலைநகர் போர்ட் பிளேரின் விமானநிலையத்திற்கு சாவர்க்கரின் பெயரைச் சூட்டியதைக் கவலையோடு குறிப்பிடும் இவர், இப்படிச் செய்தால் பின்னால் வரும் தலைமுறை யினருக்கு உண்மையில் என்ன நடந்தது என்று எப்படித் தெரியும்? என்று அப்பாவித்தனமாகக் கேட்கிறார். (11/08/2003 - The Hindu)

# காந்திஜி கொலையில் குற்றம் சுமத்தப் பெற்றவர்கள்

- நாதுராம் கோட்சே - வயது 37. ஆசிரியர் - இந்து ராஷ்டிரா பத்திரிக்கை.
- கோபால் கோட்சே - வயது 27, கோட்சேயின் உடன்பிறந்த சகோதரர். பூனாவிலுள்ள அரசு இராணுவ ஆயுதக்கிடங்கின் காப்பாளர்.
- நாராயண் அப்தி - வயது 34, இந்து ராஷ்டிரா பத்திரிக்கையை நடத்திய "பிரகாசம் லிமிடெட்" கம்பெனியின் இயக்குனர், உரிமையாளர்.
- விஷ்ணு கர்கரே - வயது 37, அஹமத் நகரில் உள்ள ஓர் ஹோட்டல் உரிமையாளர்.
- மடன்லால் பஃஹாவா - வயது 20, அஹ்மத் நகரில் உள்ள அகதிகள் முகாமில் அகதியாக இருந்தவர்.
- ஷங்கர் சிஸ்டாய்யா - வயது 27, வீட்டு வேலைக்காரன்,பூனாவில் வசித்தவர்.
- டாட்டாரியா பார்சூர் - வயது 49, குவாலியூரில் மருத்துவத்தைத் தொழிலாகச் செய்தவர்.
- விநாயக் சாவர்க்கர் - வயது 65, பாரிஸ்டர் பட்டம் பெற்றவர் அதாவது ஆங்கில நாடு சென்று பட்டம் பெற்றவர். தனவந்தர், சொத்துக்களுக்குச் சொந்தக்காரர், மும்பையில் வாழ்ந்து வந்தவர்.

இன்னும் மூன்று பேர் கங்காதார் காந்த்வந்தி,கங்காதார் ஜாதவ்,சூர்யதேவ் சர்மா ஆகியோர். இவர்கள் கடைசிவரை காவல்துறையிடம் சிக்காமல் தப்பித்து விட்டார்கள்.

A.G.நூரானி என்ற மூத்த வரலாற்றாசிரியர், சட்டவல்லுநர் தான் வெளியிட்ட "Muslims of India" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். விரிவஞ்சி அதனை இங்கே விட்டுவிடுகின்றோம்.

### மோரார்ஜி தேசாயும் (1896 - 1995) சாவர்க்கரும்

நம் நாட்டில் தொடக்கக் காலத்தில் அதாவது விடுதலை விளைந்து வந்த நாட்களில், காங்கிரஸ் கட்சியை இந்து மகா சபையைச் சார்ந்தவர்கள் அப்பிக் கொண்டார்கள். காங்கிரஸ் அவர்களை நம்பி நியாயமாக அரவணைத்துக் கொண்டது. அவர்கள் இந்துத்துவவாதிகளாகவே இருந்தார்கள். ஆனால் நேரு போன்றவர்கள் பேசிய மதச்சார்பின்மை கிஞ்சிற்றும் எடுபடவில்லை. பிற்றை நாட்களில் காங்கிரஸ் ஓர் இரவு நேர இந்துத்துவ கட்சியாக மாறி, இந்துத்துவா இந்த நாட்டில் வாழவும்,வளரவும் வழிவகுத்தது. கடைசியில் வீழ்ந்தது, பாசிஸ்டுகளின் கைகளில் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு! இப்போது இந்துத் துவாவிற்கு மத்தளம் தட்டிக் கொண்டிருக்கின்றது.

இப்படிப்பட்ட ஓர் இந்துத்துவ சிந்தனை கொண்ட ஒரு காங்கிரஸ்காரர்தான், மோரார்ஜி தேசாய். இவர் வாழ்வின் தொடக்கக் காலத்தில் குஜராத்தில் உள்ள கோத்ரா பகுதியில் முக்கிய அரசுப் பொறுப்பான (டெபுட்டி கலெக்டர்), துணை ஆட்சியர் பொறுப்பிலிருந்தார்.

அப்போது 1927-1928 இந்துத்துவவாதிகள் முஸ்லிம்களுக்கெதிராக அடிக்கடி கலவரங்களை நிகழ்த்தி முஸ்லிம்களை கொலை செய்து கொண்டிருந்தார்கள். அந்தக் கலவரங்களில், இந்துத்துவவாதிகளுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார் இந்த டெபுட்டி கலெக்டர் என்ற துணை ஆட்சியர். பதவியிலிருந்த மோரார்ஜி தேசாய் இவர் எந்த அளவுக்கு இந்துத்துவவாதிகளுக்கு துணைபோனார் என்றால் இவர் இந்துத்துவ வாதிகளுக்கு செய்த உதவிகளின் அடிப்படையில் ஒரு விசாரணை நடந்தது. விசாரணையின் முடிவில் மோரார்ஜி தேசாய் கலவரக்காரர்களுக்கு உதவியாக இருந்தார். பல முஸ்லிம் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் இந்துத்துவவாதிகளால் கொலை செய்யப்பட உதவி செய்தார் என்பது நிரூபணமாகிறது. அதனால் பதவியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டார்.

உடனேயே விடுதலைப்போர் வீரராக ஆனார். காங்கிரஸில் இணைந்தார் காலப்போக்கில் பிரதமர் இந்திரா காந்தியின் கீழ் துணை பிரதமராகவும் இருந்தார். இவர் காந்திஜி கொலை செய்யப்பட்டபோது மராட்டிய மாநிலத்தில்

அப்போது பாம்பே பிரசிடென்சியின்(Bombay Presidency) உள்துறை அமைச்சராக இருந்தார். இவரும் சாவர்க்கரைக் காப்பாற்றிடுவதில் மிகவும் அக்கறையுடன் செயல்பட்டார். சாவர்க்கர், காந்திஜி கொலை செய்யப்பட்ட பின்னணியில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார். அங்கிருந்து கொண்டு மன்னிப்புக் கடிதம் ஒன்றை எழுதினார். என்னை காந்திஜி கொலை வழக்கிலிருந்து விடுவித்து, சிறையில் இருந்து விடுவித்தால் நான் பொது வாழ்விலிருந்து விலகிக் கொள்வேன் என எழுதினார்.

இந்தக் கடிதத்தின் அடிப்படையில் அவரை சிறையிலிருந்து விடுவிக்கலாமா என்ற விவாதம் வந்தபோது சட்டமன்றத்தில் மோரார்ஜி தேசாய், சாவர்க்கரின் பழைய கருமங்கள் இப்போதைய பாவத்தைக் கழுவிவிடுகின்றது எனக் கூறினார்.

(The past Service offset by the present disservice - Front line : 28/03/2003)

அதாவது அப்போதைய மராட்டிய உள்துறை அமைச்சர் மோரார்ஜி தேசாயின் கருத்து சாவர்க்கரை காப்பாற்றுவதாகவே இருந்தது.

உள்துறையின் கீழ்தான் காவல்துறை வருகின்றது. மாநில உளவுத்துறையும் வருகின்றது.

மோரார்ஜி தேசாய் ஒரு பெரும் இந்துத்துவவாதி என்பதைப் பார்த்தோம். அவர் எப்படி இந்துத்துவத்தின் சிற்பிகளுள் ஒருவரான சாவர்க்கரை சதியில் - காந்திஜியை கொலை செய்த சதியில் சிக்கவைப்பார்.

பிற்றை நாள் விசாரணையில் காந்தியைக் கொலை செய்ய வேண்டும் என்பது ஒரு கொள்கையாக சிந்தனைப் போக்காக மாறியிருக்கின்றது. school of thought என தெரியவந்தது.

ஒரு மீளாய்வில் ஓர் உண்மைப் புலப்படும். அன்றைய ஒன்றிய அரசில், உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல் அறிவிக்கப்படாத ஓர் இந்துத்துவவாதி. அவர் காந்திஜி கொலை செய்யப்பட்ட இடத்தின் சகல அதிகாரி. அதே காலகட்டத்தில் மராட்டிய உள்துறை அமைச்சர் (பாம்பே பிராவன்ஸ் - Bombay Provence) ஒரு நிரூபிக்கப்பட்ட இந்துத்துவவாதி. இவர் கொலை செய்தவர்களின் இருப்பிடத்தின் ஆட்சியாளர். இவர்கள் எப்படி தங்கள் குரு சாவர்க்கரை கொலை சதியில் இணைக்க சம்மதிப்பார்கள். அதனால்தான் சாவர்க்கர் காப்பாற்றப்பட்டார்.

அன்றைய பிரதமர் பண்டித நேரு அவர்கள், காந்திஜியைக் கொலை செய்த சதிகாரர்களும் தண்டிக்கப்பட வேண்டும் என்றே விரும்பினார். ஆனால் சர்தார் வல்லபாய் பட்டேலைத் தாண்டி அவரால் எதுவும் செய்திட இயலவில்லை.

அன்றைக்கே இன்றைய பாசிஸ்டுகள் நேருவையும் அல்லது காந்திக்கு பதிலாக நேருவையும் கொலை செய்திருக்க வேண்டும் என கர்ஜிக்கின்றார்கள். இப்போதும் பேசி இருக்கின்றார்கள் அதே பாசிஸ்டுகள்.

சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு சீனாவில் சிலை வடித்து இங்கே வைத்து குதூகலிக்கின்றார்கள். இந்த நிகழ்வுகள் நம் கண்களைத் திறந்திட வேண்டும்.

**- MGM**

# இராஜினாமா - சர்தார் பட்டேல்


சர்தார் வல்லபாய் பட்டேல்தான் காந்திஜி கொலை செய்யப்படுவதற்கு முன், காந்திஜியைச் சந்தித்த கடைசி மனிதர். அப்போது, நேருவுக்கும், வல்லபாய் பட்டேலுக்கும் நடந்த சண்டையைத் தீர்த்து வைத்தார் காந்திஜி. காந்தியின் கடைசி உண்ணாவிரதத்தை வல்லபாய் பட்டேலும், நேருவும் முடித்துவைக்க வந்திருந்தனர்.

சந்திக்கும்போது கூட காந்திஜி, பிரதமர் நேருவுக்கும் உள்துறை அமைச்சர் (டெபுடி -துணை பிரதம அமைச்சர்) சர்தார் வல்லபாய் பட்டேலுக்கும் இடையே நடந்த சண்டையைத் தீர்த்து வைத்திட வேண்டியதிருந்தது. பட்டேல், தான் நேருவின் அமைச்சரவையிலிருந்து இராஜினாமா செய்யப்போவதாகக் கூறி காங்கிரஸ் கட்சிக்குள் குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். காந்திஜி இப்போது அப்படியொரு இராஜினாமா கூடாது, வேண்டாமென சமாதானப்படுத்தினார்.ஏனெனில் அப்போதுதான் விடுதலைக்குப்பின் முதல் அமைச்சரவை செயலில் வந்திருந்தது. பட்டேல் அவ்விடமிருந்து அகன்ற அரைமணிநேரத்தில் காந்திஜி கொலை செய்யப்பட்டார்.

காந்திஜியை பட்டேலின் உள்துறை அமைச்சகம் காப்பாற்றிட தவறிவிட்டது, என்று எல்லோரும் குற்றம் சாட்டினார்கள். இப்போதும் ஒரு இராஜினாமா கடித மிரட்டல்விட்டார் பட்டேல். ஆனால் இராஜினாமா செய்யவில்லை. ஹைதராபாத் சமஸ்தான பிரச்சனையில் நேரு, வல்லபாய் பட்டேலை "நீ ஒரு வகுப்புவாதி எனச் சாடினார்" பட்டேல் நேருவை "நீ ஒரு முஸ்லிம்" என பதிலுக்குப் பழித்தார். இந்தளவுக்கு ஒரு ஒத்துழையாதவரை துணை பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவும் கொண்டிருந்தார் நேரு.

நேருவை கவிழ்த்துவிட்டு பிரதமராக ஆகிட வேண்டுமென சர்தார் வல்லபாய் பட்டேல் முயற்சி செய்தார் என்றொரு குற்றச்சாட்டும் அவர் மீது அப்போது உண்டு!

- Source : **1.**“Patel a life” by Rajmohan Gandhi -1990. **2.** K. K. Nair - No Ill Will



# காந்திஜியை காப்பாற்றிய முஸ்லிம்!

# பக்த் மியானின் வரலாறு

1917ஆம் ஆண்டில், ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஏஜென்ட்டுகள், பல்வேறு ஆலைகளை இந்தியாவில் நிறுவிட முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். அத்தனையும் நமது இயற்கை வளங்களைச் சுரண்டும் திட்டங்கள்.

இந்த ஆங்கில தொழில் நிறுவனங்களுள் ஒன்றுதான் (Mothihari Ltd.,) மோத்திஹாரி லிமிட்டெட்.

மோத்தி ஹாரி என்பது அன்றைய இந்தியாவின் சம்பாரான்(Champaron) மாவட்டத்தின் தலைநகர்.

இது பீகார் மாநிலத்தில் இருக்கின்றது. இந்தப் பகுதியில் நிறுவப்பட்ட இந்த மோத்திஹாரி லிமிடெட் என்ற நிறுவனம் அவுரிச்செடியிலிருந்து "indigo"(நீலச்)சாயம் தயாரிக்கும் நிறுவனம். இப்படி தயாரிக்கப்படும் சாயம் துணிகளுக்கும், இதர பொருட்களுக்கும் சாயம்தர பயன்படுத்தப்படும்.

இந்தச் சாயம் தயாரிக்கும் தொழில் நிறுவனமான, மோத்திஹாரி நிறுவனம் (WS.IRVIN) இர்வின் என்ற ஆங்கிலேயனுக்குச் சொந்தமானது.

இதற்காகப் பல ஆயிரம் ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த ஆங்கில அரசு அனுமதி வழங்கியிருந்தது. இவன் அவுரிச் செடியை முளைவிக்க நம் நாட்டு விவசாயிகளின் நிலங்களைப் பெரிய அளவில் அபகரித்துவந்தான்.

அந்த நிலங்களில் வசித்த விவசாயப் பெருங்குடி மக்களை விரட்டினான். அவர்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த பூமியிலிருந்து அவர்களைப் பிடுங்கி வெளியே வீசிவிட்டதால், அந்த மக்கள் வசிக்கும் இடமின்றி,வாழ்ந்திட தொழிலுமின்றி வதைபட்டனர்.

இன்றைய நாட்களில், நமது சுதந்திர இந்தியாவில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special Economic zones) என்ற பெயரில் குடிமக்களை அவர்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த பூமியிலிருந்து விரட்டுகின்றார்கள் அல்லவா அதுபோலத்தான் அன்று பீகார் மாநிலத்தின் சம்பாரான் பகுதியில் Ws.இர்வின் செய்து கொண்டிருந்தான்.

மக்களின் இந்த ஓலம் காந்திஜியின் காதுகளில் எட்டியது, காந்திஜி அவர்கள் அந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்து, அதை மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். அந்த மக்களை அன்றைய ஆங்கிலேயனின் ஆட்சிக்கு எதிராகவும், இர்வினுக்கு எதிராகவும் அணி திரட்டினார். இதனால் இர்வின் காந்தியின் மீது கோபம் கொண்டான். கோபம் கொலைவெறியாக மாறியது.

ஆங்கிலேயன் இர்வின், காந்திஜியையும் கொலை செய்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தான். அதற்கான வழிகளை ஆராய்ந்தான்,ஒரு வழியைக் கண்டுபிடித்தான்.

அது காந்திஜி சம்பாரான் வரும்போது அங்குள்ள மக்கள் காந்திஜியை வரவேற்று விருந்தும் தந்திட தயாரானார்கள். அந்த விருந்து நிகழ்ச்சியை காந்திஜி அவர்கள் ஓர் சமபந்திபோஜனம் என்றாக்கினார். அதாவது அனைத்துத் தரப்பு மக்களோடும் உண்பது என்றாக்கினார்.விருந்துக்கு தேவையான ஏற்பாடுகள் நடந்தன.அதாவது சமபந்தி போஜனத்திற்குத் தேவையான ஏற்பாடுகள் நடந்தன.

காந்திஜிக்குப் பிடித்த உணவைத் தயாரிக்க "பக்த் மியான்" என்ற சமையல்காரனை சம்பாரான் மக்கள் நியமித்தார்கள். சம்பாரான் வட்டாரத்தில் கீர்த்திமிக்க சமையல்காரராக இருந்தார் பக்த் மியான். அத்தோடு அவர் விடுதலைப்போரில் மிகுந்த ஆர்வம் கொண்டவராகவும், காந்திஜியின் மீது அன்பு கொண்டவராகவும் இருந்தார்.

விருந்துண்ண வருபவர்களுக்கும், காந்திஜிக்கும் பக்த்மியான்தான் சமைக்கப் போகின்றார் என்பதை தனது ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்டான் Ws. இர்வின்.

பக்த் மியானை அணுகி காந்திஜிக்குத் தரும் பாலில் விஷம் கலந்திட வேண்டும் என்றும், அதன் மூலம் காந்தியைக் கொலைசெய்ய வேண்டும் என்றும் அதற்கு, தான் மிகப்பெரிய சன்மானம் தருவதாகவும் பேரம் பேசினான்.

பேரத்திற்கு பக்த் மியான் ஒத்துக்கொள்ளவில்லை, மிரட்டினான் இர்வின். தான் அந்தப் பகுதியில் தனக்கு எதிராகக் கிளர்ந்தவர்கள் பலரைக் கொலை செய்திருப்பதாகவும், பக்த் மியான் சொல்வதைக் கேட்கவில்லை என்றால் கொலை செய்துவிடுவேன் அது தனக்கொன்றும் பெரிய வேலை இல்லை என்றும் மிரட்டினான். பக்த் மியான் அதற்கும் அஞ்சவில்லை உணவில் விஷம் கலக்கும் வேலையைத் தான் செய்யமுடியாது என சொல்லிவிட்டார்.

கொலைகாரன் இர்வின் காந்திஜியை கொலை செய்துவிடுவதில் மிகுந்த வெறியோடு இருக்கின்றான் என்பதை அறிந்த பக்த் மியான் அவனுடைய திட்டத்தை காந்திஜி அவர்களின் தோழர்களிடமும், காந்திஜியை வரவேற்கத் தயாராக இருந்த அனைவரிடமும் சொல்லி விட்டார். அதாவது அனைவரையும் உஷார் படுத்திவிட்டார்.

காந்திஜியை வரவேற்கத் தயாராக இருந்தவர்களில் டாக்டர்.இராஜேந்திர பிரசாத் அவர்களும் ஒருவர். இவர் பின்னாளில் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக ஆனார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பீகார் மாநிலத்தின் சம்பாரான் மாவட்டத்தைச் சார்ந்தவர்.

பக்த் மியான் மேற்கொண்ட இடைவிடாத பிரச்சாரத்தால் காந்திஜி பாதுகாக்கப்பட்டார். அங்குள்ள மக்கள் இர்வினுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள்.

இதற்காக - அதாவது காந்திஜியின் உணவில் விஷம் கலந்திட மறுத்ததற்காகவும், இர்வினின் திட்டங்களை வெளிப்படுத்தியதற்காகவும் பக்த் மியான் மிகப்பெரிய விலையைத் தந்திட வேண்டியதாயிற்று.

பக்த் மியான் கைவசமிருந்த எல்லா விளை நிலங்களையும் அன்றைய (1917) ஆங்கில அரசின் உதவியோடு இர்வின் கையகப்படுத்தினான். அவரை கைது செய்து கொடுமையாகச் சித்திரவதைச் செய்தான். பக்த் மியான் மீது பொய் வழக்குகளைப் புனைந்து சிறையில் அடைத்தான்.

அவருடைய குடும்பம் சிதறுண்டது. அவர்கள் தங்களது பிறந்த வீட்டைத் துறந்து அதாவது சம்பாரானை விட்டு இதர இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றார்கள். பக்த் மியான் பஞ்சையரானார். உடுத்த உடை கூட இல்லை என்ற நிலையில் சில கிழிசல்களோடுதான் சிறையிலிருந்து வெளியே வந்தார். அப்படி ஒரு பைத்தியக் காரனைப் போல் அவர் அலைந்து கொண்டிருந்த போதுதான் அது நடந்தது.

**1950ஆம் ஆண்டு முதல் குடியரசு தலைவர் டாக்டர். இராஜேந்திர பிரசாத்**

1947இல் இந்தியா ஆங்கிலேயர்களிடம் இருந்து விடுதலை அடைந்தது. முதல் குடியரசு தலைவராக பீகாரைச் சேர்ந்த இராஜேந்திர பிரசாத் அவர்கள்



பக்த் மியான் அவர்களின் பேரன் (கையில் புகைப்படத்தை வைத்திருப்பவர்)

பொறுப்பேற்றார்கள். 1948இல் மகாத்மா காந்தியை சங்கப் பரிவாரத்தைச் சார்ந்த நாதுராம் கோட்சே கொலை செய்தார்.

1950ல் குடியரசு தலைவர் டாக்டர். இராஜேந்திர பிரசாத் அவர்களுக்கு, அவருடைய (பீகார்) வீட்டிலிருந்து ஒரு செய்திவந்தது. அது அவருடைய உடன் பிறந்த சகோதரர் பிரசாத் வர்மா உடல் நலமில்லாமல் இருக்கிறார் என்பதே அது.

சகோதரனை கண்டுவர இரயில் மூலம் குடியரசு தலைவர், சம்பாரான் மாவட்டத்திற்குப் புறப்பட்டார். அவர் மோத்திஹாரி இரயில் நிலையத்தில்தான் இறங்கி தன்னுடைய இல்லம் சென்றிடவேண்டும். இந்த மோத்திஹாரி இரயில் நிலையம்தான் சம்பாரானின் முக்கிய இரயில் நிலையம். இந்த இடத்தின் பெயரால்தான் ஆங்கிலேயன் இர்வின் அவுரிச்செடி வளர்த்து சாயம் எடுக்கும் நிறுவனத்தை தொடங்கிட இருந்தான்.

1950இல் முதல் குடியரசு தலைவர் டாக்டர். இராஜேந்திர பிரசாத் மோத்திஹாரி இரயில் நிலையம் வந்துசேர்ந்தார் தன் தமையனை தரிசிக்க. இரயில்நிலையத்தில், குடியரசுத் தலைவரை வரவேற்க ஏராளமான முக்கியஸ்தர்கள் வந்திருந்தனர்.


இரயிலில் இருந்து இறங்கி இந்த முக்கியஸ்தர்களை சந்தித்துவிட்டு இரயில் நிலையத்திலிருந்து வெளியே வந்த குடியரசு தலைவரின் கண்களில் கிழிந்த உடையுடன் நின்றுகொண்டிருந்த பக்த் மியான் யதார்த்தமாகப் பார்வையில் பட்டுவிட்டார்.

குடியரசு தலைவர் டாக்டர். இராஜேந்திர பிரசாத் ஓர் ஏவலனை அனுப்பி பக்த் மியானை அழைத்துவரச் சொல்லவில்லை. அவரே சென்று பக்த் மியான் அவர்களைக் கட்டித்தழுவினார்.

ஏன் இந்தக் கோலம், என்றார். பக்த் மியான் தன் நிலையைச் சொன்னார். உடனேயே குடியரசுத் தலைவர் அந்தப்பகுதி மாவட்ட ஆட்சியரை அழைத்து 50 ஏக்கர் நிலத்தை பக்த் மியான் அவர்களுக்கு உடனேயே தந்திட வேண்டும் என ஆணையிட்டார்.

அத்துடன் அவருக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் ஒன்றையும் தந்திட வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

நீண்ட நாட்களாகியும் மாவட்ட ஆட்சியரால்



இராஜேந்திர பிரசாத்

அந்த 50 ஏக்கர் நிலத்தை கண்டுபிடிக்க இயல வில்லை. வருடங்கள் கழிந்தன பக்த் மியான் மூத்த மகன் முஹம்மத் ஜான் அன்சாரியுடன் தன் கடைசி நாட்களைச் செலவிட்டார்.

பக்த் மியானின் மூத்த மகன் சம்பாரான் மாவட்டத்தின் எல்லையிலுள்ள சிஸ்வா அஜ்காரி கிராமத்தில், எல்லையில் வாழ்ந்து கொண்டிருந்தார். 1957இல் அவர் இறந்தார். அவர் உயிரோடு இருந்தவரை அவருக்கு எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை.

தொடர்ந்து பக்த் மியானின் மூத்தமகன் முஹம்மத் ஜான் அன்சாரி தன் தந்தைக்கு குடியரசு தலைவர் தந்த வாக்குறுதியின் நிலையைக் குறிப்பிட்டு குடியரசுத்தலைவர் உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும் கடிதம் எழுதினார்.

கடிதத்தின் நகல் மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர், தான் நிலத்தைக் கண்டுபிடித்துக் கொண்டிருப்பதாக பதில் சொன்னார்.

1968இல் 24 ஏக்கர் நிலத்தை கண்டுபிடித்து விட்டதாகவும், முதல் குடியரசு தலைவர் வாக்களித்த 50 ஏக்கர் நிலத்திற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்றும் கடிதம் எழுதினார்.

இந்த 24 ஏக்கரையும் பக்த் மியானின் வாரிசுகளுக்கு பதிந்து தந்துவிடுவதாகக் கூறினார். ஆனால் அந்த 24 ஏக்கரும், வனத்துறை தங்களுக்கு மிகவும் முக்கியமானவை என்றும், இன்னும் சொன்னால் அந்த வனத்துறையின் நிலம்தான் அந்த 24 ஏக்கரும் எனக் கூறிவிட்டார்கள்.

இந்த அரசுகள் நமக்குப் பயன்தந்திட மாட்டா என்பதை உணர்ந்த பக்த் மியானின் பிள்ளைகள் ஹரியானா மாநிலம் சென்று கூலியாட்களாக உழைக்கத் தொடங்கினார்கள். வரலாற்றில் காணாமல் போய்விட்டார்கள்.

இந்த மொத்த வரலாற்றையும் ஹிந்துஸ்தான் டைம்ஸ் என்ற டெல்லி ஆங்கில நாளிதழ் சிறப்புக் கட்டுரையாக 60 ஆண்டுகளுக்குப் பின் வெளியிட்டது. அப்போது அது அன்றைய குடியரசு தலைவர் பிரதீபா பாட்டீலின் பார்வையில்பட்டது. அவருடைய செயலாளர் ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிக்கைக்கு பதில் ஒன்றை அனுப்பினார். அதில், “மேன்மைமிகு குடியரசு தலைவர் அவர்கள் உங்கள் கட்டுரையை கன்னுற்றார்கள். பக்த் மியானின் குடும்பத்திற்கு தேவையான நிவாரணங்கள் மேற்கொள்ளப்படும்,” என்று அந்த பதிலில் கூறியிருந்தார்.

இதனிடைய இந்த விவகாரத்தைக் கூர்ந்து கவனித்துவந்த, இடைவிடாமல் கடிதங்களை எழுதிக் கொண்டிருந்த பக்த் மியானின் மூத்த மகன் முஹம்மத் ஜான் அன்சாரி இறந்துவிட்டார்.

பிரதிபா பாட்டீலின் நடவடிக்கையின் கீழ் வெறும் ஆறு (6) ஏக்கர் நிலம் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கும், பக்த் மியானின் குடும்பத்திற்கு கிடைத்தது. இந்த ஆறு ஏக்கர் நிலத்தில் வீடுகட்டி மொத்த குடும்பமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

மீண்டும் விவசாயத்தை நோக்கி திரும்பி இருக்கின்றார்கள். இந்த ஆறு ஏக்கர் நிலத்தின் நடுவே ஓர் ஆறும் ஓடுகின்றது. இந்த மொத்த விவகாரத்தையும், வரலாற்றையும் "Main stream" என்ற ஆங்கில சஞ்சிகை வெளியிட்டது. அதை Scroll என்ற ஆவண ஏடும், Radiance வார ஏடும் வெளியிட்டன.

ஆனால் பக்த் மியான் ஆங்கில ஏகாதிபத்தியத்திடம், 1918இல் இழந்தது 64 ஏக்கர் நிலம். காந்தியைக் காப்பாற்றிட அவர் தந்த விலை அது தகுதியானது. இன்று காந்தியைக் கொன்றவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், இந்த ஆறு ஏக்கர் நிலத்தையும் "Disputed Property" சர்ச்சைக்குரிய இடம் என்றாக்கினார்கள். ஆனால், லாலு நித்திஷ் குமார் அரசு அதை முற்றாக நிராகரித்தது.

அண்மையில் காந்திஜியின் சம்பாரான் வருகையின் 100 ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள்(1917 April 15 - 2017April 15) நடைபெற்றன. அதில் பக்த் மியானின் குடும்பத்தினர் அனைவரும் கண்ணியப் படுத்தப்பட்டார்கள்.

**அடிக்குறிப்பு :**

பக்த் மியனின் துணிச்சல் மிக்க செயலையும்,அவர் தன்னைக் காப்பாற்றியதையும் காந்திஜி எங்கேயும் குறிப்பிடவில்லை என்பது, பீகார் மாநிலத்தின் குறிப்பாக சம்பாரான் மாவட்டத்து மக்களின் மனக்குமுறல். ஆனால், “விடுதலைப் போரில் சம்பாரான் மக்களின் பங்கு” என்றொரு தொகுப்பு 40 ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்டது. அதில் பக்த் மியான் காந்திஜியைக் காப்பாற்றியது, அதில் அவருக்கு ஏற்பட்ட இழப்புகள் எல்லாம் மிகவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்த ஆவணத்தை மையப்படுத்தியே பல்வேறு பத்திரிகைகளும் அவ்வப்போது கட்டுரைகளை எழுதின.

காந்திஜியின் சம்பாரான் வருகையின் 100 ஆண்டு பற்றி சிறப்புக் கட்டுரைகளை எழுதிய ஹிந்தி ஏடுகள் அனைத்தும் பக்த் மியானை மையப் படுத்தியே தங்கள் ஆக்கங்களை வெளியிட்டன.

source :

Scroll. April17,2017

Radiance - April 30 - 6 May 2017.

Hindustan Tamil/Mainstream.

***- MGM***




# அமெரிக்காவி
# முஸ்லிம்/இஸ்
# எதிரா

உலகில் இஸ்லாத்திற்கெதிரான நடவடிக்கைகளில், பிரச்சாரத்தில் முன்னிலையில் நிற்பது அமெரிக்கா. இது ஐரோப்பிய நாடுகளுக்கு தலைமையேற்று நிற்பது வெறும் பிரச்சாரத்தோடு நிற்கவில்லை. பல போர் திட்டங்களை வகுத்து அறிவிக்கப்படாத போர் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கின்றது அமெரிக்கா.

இந்தப் போரில் (NATO) நேட்டோ நாடுகள் எனச் சொல்லப்படும் 57 நாடுகளில், 51 நாடுகளை துணைக்கு அழைத்துக்கொண்டு, இந்தப் பெரும்போரை நடத்திக் கொண்டிருக்கின்றது அமெரிக்கா! டேவிட் செல்போண் என்பவர், மூன்றாம் உலகப்போர் தொடங்கி நடந்து கொண்டிருக்கின்றது, என தன்னுடைய "இஸ்லாத்தோடு சண்டையிட்டுத் தோற்றம்" (Loosing Battle with Islam) என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

ஆனாலும் அமெரிக்கா கோடிக்கணக்கான டாலர்களை அள்ளிக்கொட்டி, இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்த்தது. இதற்காக ஆயிரக்கணக்கான அறக்கட்டளைகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் இவையெல்லாம் தொடர்ந்து இஸ்லாமோஃபோபியாவை வளர்த்துக் கொண்டிருக்கின்றன.

அவர்களே ஒத்துக்கொண்டது போல, ஒரு சாதாரண குடிசைத் தொழிலாகத் தொடங்கப்பெற்ற இஸ்லாமோஃபோபியா இப்போது மிகப் பெரிய ஆலைகளாக ஆலவிருட்சமாக வளர்ந்துள்ளன. இதற்காக, இஸ்லாமோஃபோபியாவை வளர்ப்பதற்காக பல லட்சம் டாலர்களை நன்கொடையாக அள்ளிக் கொட்டிக் கொண்டிருக்கின்றன.




# ...ில் ...ஸ்லாமிய வெறுப்புக்கு ...கச் சட்டம்

சிலபல கார்ப்பரேட்டுகள், தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியையே தருகின்றன. பலநாடுகளில் (Corporate Spending for Social Cause) பெரிய நிறுவனங்கள் தங்கள் இலாபத்தில் ஒரு பகுதியைச் சமுதாய நலன்களுக்காகச் செலவு செய்திட வேண்டும். அந்தப் பணத்தை அதாவது இலாபத்தின் பங்கை, இந்த இஸ்லாத்தை வெறுக்கும் பிரச்சாரத்தை வளர்க்கும், நிறுவனங்களுக்குத் தருகின்றன. இதனை ஐரோப்பிய நாடுகள் நியாயமான செலவு (Legitimate Spending) எனச் சொல்லுகின்றது. அந்தக் கம்பெனிகளின் கணக்குகளை ஏற்றுக்கொள்கின்றன.

இப்படிப் பணத்தைக் கொட்டி வளர்த்த இஸ்லாமியப் பிரச்சாரம் இன்று நேற்றல்ல, இஸ்லாம் இந்த மண்ணில் காலூன்றிய நாள் முதலே நடக்கின்றன. குறிப்பாக இஸ்லாமிய ஆட்சித் தலைவர் கலீபா உமர் பின் அல் கத்தாப் அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஜெருசலம் அவர்களிடத்திலே, கிறிஸ்தவ பாதிரியார் சோஃபத்நிஸ் அவர்களால் ஒப்படைக்கப்பட்ட காலத்திலிருந்தே தொடருகின்றது.

முதல் சிலுவைப்போரை (1095-1247) நடத்துவதற்காக முஸ்லிம்கள் மீதும், இஸ்லாத்தின் மீதும் கட்டவிழ்த்துவிடப்பட்ட பொய்கள், அதில் ஏற்பட்ட தோல்விகளைத் தொடர்ந்து, இன்னும் வேகமாகக் களைகட்டிய வெறுப்புகள், அவிழ்த்து விடப்பட்ட பொய்கள், 1453இல் கான்ஸ்டாண்டி நோபிளை முஸ்லிம்கள் வெற்றி கண்டபின் வெள்ளை கிறிஸ்தவ உலகில் ஏற்பட்ட விரக்திகள், அந்த விரக்தியின் வெளிப்பாடாய் வெறுப்புப் பிரச்சாரங்கள், ஆயுதந்தாங்கிய ஆக்கிரமிப்பு இஸ்லாத்தின் பூமிகளில், பின் முஸ்லிம்களுக் கிடையில் மூட்டிவிடப்பட்ட சண்டைகள், "Default Wars" எனப் பெயர் வைத்து, முஸ்லிம்களைவிட்டே முஸ்லிம்களைப் பிணமாக்கி வேடிக்கை பார்த்த நிலை.

இதை வைத்துக்கொண்டு முஸ்லிம்களிடையே வளர்த்த விரக்தி! பின்னால் இருக்கும் சதியைப் புரிந்து கொள்ளாமல், முஸ்லிம்களே முஸ்லிம்களைத் திட்டித் தீர்த்தது. இப்படி இஸ்லாமோஃபோபியா கொடிகட்டிப் பறந்தது.

அமெரிக்கா இதற்கு விதிவிலக்கல்ல. அமெரிக்க முஸ்லிம்களும் மிகவும் அதிக அளவில் பாதிக்கப்பட்டார்கள்.

9/11 என்று அடையாளப்படுத்தப்படும் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப்பின், முஸ்லிம்கள் மீது மிகப்பெரிய தாக்குதல்கள் நடந்தன. அவற்றை "Hate Crimes" வெறுப்பால் ஏற்பட்ட குற்றங்கள் எனப் பதிவுசெய்தார்கள். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை; என்பதே முஸ்லிம்களின் குற்றச்சாட்டு. முஸ்லிம்கள் இந்த 9/11 தாக்குதலுக்கு எந்தவிதத்திலும் காரணமல்ல. இஸ்லாமும் இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களும், இதுபோல அப்பாவி மக்களின் உயிரைப் பறிக்க அனுமதிக்கவில்லை. அப்பாவி மக்களின் உயிரைப் பறிப்பவர்களுக்கு ஏராளமான தண்டனைகள் காத்திருக்கின்றன மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் என்பதை நிதானமாக ஆனால் நிரந்தரமாக பிரச்சாரம் செய்துகொண்டே இருந்தார்கள்.

முதலில் 10 % அமெரிக்கர்கள் மட்டுமே முஸ்லிம்களின் கூற்றை நம்பினார்கள். பெரும்பாலோர் மறுத்தார்கள். முஸ்லிம்கள் மீதும், இஸ்லாத்தின் மீதும் வெறுப்பை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் - இந்த வெறுப்பு தொழிற்சாலையின் முதலாளிகளும், பங்குதாரரர்களும் கடுமையாக முஸ்லிம்களை எதிர்த்தார்கள். வேகமான பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டார்கள்.

இப்போது - அதாவது தாலிபான்களின் வெற்றிக்குப் பின்னர், மொத்த அமெரிக்கர்களும் அவர்களுக்குத் துணையாக வந்த ஐரோப்பிய நாடுகளின் மக்களும் அதை நம்பிடவில்லை.

இந்நிலையில் சரியான நேரத்தில் அன்புச் சகோதரி இல்ஹாம் உமர் இன்னொரு சகோதரியுடன் இணைந்து ஒரு சட்ட முன்வரைவை அமெரிக்காவின் நாடாளுமன்றத்தில் 14.12. 2001இல் கொண்டுவந்தார்.

இந்த சட்ட முன்வரைவு உலகெங்கும் வியாபித்துள்ள இஸ்லாமோஃபோபியாவுக்கு எதிரானது. இன்னும் ஒருபடி மேலே சென்று சொன்னால் உலகெங்கும் வியாபித்து நிற்கும் இஸ்லாமோஃபோபியாவை தடுக்கும் இல்லை இஸ்லாமோஃபோபியாவை எதிர்த்து போரிடும் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார்.

இந்த சட்டத்தை, முதலில் அமெரிக்க அதிபர், குடியரசு தலைவர் ஜோபிடன் பார்வைக்கு கொண்டு சென்றார்கள். அவர் அதற்கான பச்சைக் கொடியை காட்டினார். இதனால் நாடாளுமன்றத்தில் 212 வாக்குகள் பெற்று(219 இல்) சட்டமானது.சட்டம் (H.R.5665) அந்தச் சட்டத்தின் பெயர்: (Combat International Islamophobia Act) உலக இஸ்லாமிய வெறுப்பிற்கு எதிரான சட்டம்.

முதலில் அமெரிக்க நாடாளுமன்றத்தின் மக்களவை என அறியப்படும், பிரதிநிதிகளின் அவையில் (House of Representatives) அறிமுகப் படுத்தப்பட்டு வெற்றி பெற்றது. அடுத்தநாள் அமெரிக்க நாடாளுமன்றத்தின் மாநிலங்களவை என அறியப்படும் (Senate) செனட்-ல் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் வாங்கிய அடி, இவ்வளவு ஆழமாக அமெரிக்காவில் வேலை செய்யும் என யாரும் எதிர்பார்க்கவில்லை. அல்ஹம்துலில்லாஹ்!

### அமெரிக்க முஸ்லிம்களின் முன்மாதிரி

அமெரிக்காவில் வாழ்ந்திடும் முஸ்லிம்கள், இந்தியாவில் வாழும் முஸ்லிம்களைப்போல் அல்லது அதிலும் சற்று அதிகமாகவே, இஸ்லாமோஃபோபியாவுக்கும், உடல் ரீதியான தாக்குதலுக்கும் ஆளானார்கள். டிரம்ஃப் அதிபராக இருந்த நாட்களில் அவர்கள் எதிர்கொண்ட இன்னல்களுக்கு அளவே இல்லை.

டிரம்ஃபின் காலத்தில் பத்து நாளைக்கு ஒரு சட்டம். “ஷரீயாவுக்கு எதிராக”, முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களுக்கு எதிராக சட்டங்கள் இயற்றப்பட்டுக் கொண்டேயிருந்தன.

தாங்கொண்ணா தாக்குதல்களை எல்லாம் தாங்கிக்கொண்டு, இறந்தவர்கள் போக உயிரோடு இருப்பவர்கள் முஸ்லிம்கள் மீது நடக்கும், தாக்குதல்கள் அனைத்தையும் தவறாமல் பதிவு செய்தார்கள்.

இலக்கியங்களில் எப்படி இஸ்லாமிய வெறுப்பு விரவி விடப்படுகின்றது, கல்விக்கூடங்களில், கல்லூரிகளில் எப்படி இஸ்லாத்தை வெறுக்கும், எதிர்க்கும் பாடங்கள் கற்றுக் கொடுக்கப் படுகின்றது, ஊடகங்களில் எப்படி இஸ்லாமிய வெறுப்புப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது,

காட்சி ஊடகங்களில், சினிமாக்களில் எப்படி இஸ்லாமோஃபோபியா - இஸ்லாமிய எதிர்ப்பு வளர்க்கப்படுகின்றது என்பதையும் விபரமாக சேகரித்து அமெரிக்கர்களிடையே பிரச்சாரம் செய்தார்கள்.

"(CAIR -Council for American Islamic Relations)" அமெரிக்காவின் இஸ்லாமிய உறவுகளுக்கான




குழுமம் என்ற அமைப்பு இதில் முன்னணியில் நிற்கின்றது. அதன் பணிகள் பல முறை அமெரிக்க ஆட்சியாளர்களால் கெடுபிடிகளுக்கு ஆளாக்கப்பட்டது. அந்த "அலுவலகத்தின் கடைசி காகிதம்" வரை கண்காணிக்கப்பட்டது. எந்த ஒளிவும் மறைவுமில்லாமல் அரசாங்கத்திடம் அனைத்தையும் காட்டினார்கள். ஆனால் தகவல்கள் சேகரிப்பதில் (Data Collection) கிஞ்சிற்றும் அவர்கள் தளர்வு காட்டிடவில்லை.

அதேபோல் அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தி (Scrutiny) அதிகார வட்டத்திடம் தருவதிலும் எந்தத் தளர்வையும் காட்டிடவில்லை.

CAIR-ன் அறிக்கைகள் பலவற்றையும் குறிப்பாக, அதன் இஸ்லாமியப் பிரச்சாரம் குறித்த வெள்ளை அறிக்கை ஒன்றை "வளரும் இஸ்லாம் அலறும் ஐரோப்பா" என்ற அட்டைப்படக் கட்டுரையாக வைகறை வெளிச்சம் இதழில் இடம்பெறச் செய்தோம்.

CAIR - என்ற அமெரிக்காவின் இஸ்லாமிய உறவுகளுக்கான குழுமத்தின் அறிக்கைகள் பலவற்றை மையப்படுத்தி, கட்டுரைகள் பலவற்றை "தி ஹிந்து" ஆங்கில நாளிதழில் ஹஸன் சரூர் என்ற பிரபல்யமான ஆங்கில எழுத்தாளர் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றில் பலவற்றை நான் "வைகறை வெளிச்சம்" இதழில் இடம்பெறச் செய்துள்ளேன். அல்ஹம்துலில்லாஹ்!

CAIR ஐ போல் பல தன்னார்வக் குழுக்கள் இதே வேலையைச் செய்து வருகின்றன. இப்படி சேகரித்த தகவல்களை அமெரிக்காவின் அதிகார வட்டத்திற்குக் கொண்டு சென்றார்கள். அமெரிக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் கொண்டு சென்றார்கள். தன்னார்வலர்கள், மனித உரிமை குழுக்கள், ஊடகங்கள் (Media Houses) அதில் கருத்துக்களைப் பரிமாறிடுவோர் இவர்களின் பார்வைக்கும் கொண்டு சென்றார்கள்.

ஒரு பெரிய விழிப்புணர்வை அந்த மக்களிடையே வளர்த்தார்கள். இதன் பயனாக அவர்கள் அமெரிக்க மக்களின் கருத்தை, ஒட்டுமொத்தமாகத் தலைகீழாகப் புரட்டிப் போட்டார்கள்.

அமெரிக்காவில் அவர்கள் அள்ளிக்கொட்டிய உழைப்பு அகிலமெல்லாம் இஸ்லாமோஃபோபியா- இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் வெறுக்கும் பிரச்சாரத்தை கண்காணிக்கும் சிறப்பு தூதர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த சிறப்பு கண்காணிப்பாளரை செயலில் கொண்டு வந்த சட்டம் தான் 'Combat Islamophobia Act.'

### இந்த சட்டம் என்ன செய்யும்?

இந்த சட்டத்தின்கீழ் ஒரு Envoy என்ற சிறப்புத் தூதர் செயலில் வருவார்.

அவர் உலகெங்கும் நடக்கும் இஸ்லாத்திற்கு எதிரான எல்லா வெறுப்புப் பிரச்சாரத்தையும் கண்காணிப்பார்.

அது குறித்து ஆண்டறிக்கையை தயார் செய்வார். அதனை மதச்சுதந்திரம் குறித்த அறிக்கையோடு மக்கள் மன்றத்தில் வைப்பார்.

பின்னர் உலகெங்கும் இஸ்லாமோஃபோபியாவிற்கு எதிராக சட்டங்களை உலக நாடுகள் இயற்றிட வழிவகுக்கும்.

இதில் பள்ளிக்கூடங்களில் படித்துத்தரப்படும் பாடங்களில் முஸ்லிம்களின் மீதும், இஸ்லாத்தின் மீதும் எப்படி வெறுப்புகள் வளர்க்கப்படுகின்றன என்பதும் கண்காணிக்கப்படும்.

வெறுப்புப் பேச்சுகளைப் பேசிடுவதால் ஏற்படும் கலவரங்கள், அதனால் ஏற்படும் சேதங்கள் இவையும் கண்காணிக்கப்படும்.

இது "Islamophobia Incitement" அதாவது இஸ்லாமிய வெறுப்பால் தூண்டப்பட்ட கலவரங்கள் என்ற தலைப்பின் கீழ் கண்காணிக்கப்படும்.

அமெரிக்காவில் ஏற்கனவே சர்வதேச மத சுதந்திரச் சட்டம் 1998 என்றொன்று இருக்கின்றது. இந்தச் சட்டத்தின் பிரிவு(VIII)102(b)(1)Aஇன் கீழ் வெளியிடப் படும் வருடாந்திர அறிக்கையில், இந்த இஸ்லாமிய வெறுப்பு குறித்து அறிக்கையும் அங்கம் வகிக்கும்.




இந்தச் சட்டத்தோடு இஸ்லாமோ ஃபோபியா சட்டமும் இணைந்து செயல்படும்.

சுருக்கமாகச் சொன்னால் ஆண்டுதோறும் அமெரிக்கா வெளியிடும் மத சுதந்திர அறிக்கையில் இஸ்லாமோஃபோபியா பற்றியவையும் இடம்பெறும்.

இந்த சிறப்பு தூதர் அதாவது இஸ்லாமிய வெறுப்புப் பிரச்சாரத்தை எதிர்க்கும் சட்டம் உருவாக்கப்படும், இந்த சிறப்பு தூதர் இதர அரசாங்கங்கள், அந்தந்த நாடுகளில் செயல்படும் அரசு சாராத அமைப்புகள், இயக்கங்கள் இவற்றோடும் தொடர்புகொண்டு தகவல்களைச் சேகரிப்பார்.

**A.** இதில் இஸ்லாமோஃபோபியாவால் ஏற்படும் வன்முறைகள் பற்றி எந்த அளவுக்கு விபரமாகத் தகவல்கள் சேகரிக்க முடியுமோ அந்த அளவுக்குத் தகவல்களைச் சேகரிக்க வேண்டும் எனவும் இந்தச் சட்டம் வலியுறுத்துகின்றது.

முஸ்லிம் சமுதாயத்தின் மீது கட்டவிழ்த்திடப் படும் வன்முறைகள், அவர்களின் மஸ்ஜித்கள், அவர்களின் சமுதாய நிறுவனங்கள், கல்விக் கூடங்கள், கப்ரிஸ்தான் ஆகியவற்றின் மீதும் நடக்கும் தாக்குதல்களும் கண்காணிக்கப்படும்.

### மீடியோக்கள் என்ற ஊடகங்கள்

**B.** ஊடகங்கள் அவை அரசு ஊடகங்களாக இருந்தாலும், தனியார் ஊடகங்களாக இருந்தாலும் அவற்றால் விளம்பப்படும் இஸ்லாமிய வெறுப்பு, முஸ்லிம் வெறுப்பு ஆகியவற்றையும் கண்காணிக்க வகை செய்யப்படுகின்றது.

ஊடகங்களால் விதைக்கப்படும் இஸ்லாமிய வெறுப்பின் பின்னணியில் எழும் வகுப்புக் கலவரங்கள், அவற்றால் ஏற்படும் பாதிப்புகள் இவையும் கண்காணிக்கப்படும்.

**C.** அதேபோல் அரசாங்கங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் - முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் கலவரங்களை அடக்க எடுக்கும் நடவடிக்கைகள்.

அதேபோல் இஸ்லாம்/முஸ்லிம்கள் மேல் நடக்கும் வெறுப்புப் பிரச்சாரத்தை முற்றாகத் துடைத்தெறிந்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் அவை பற்றிய தகவல்கள்.

**D.** முஸ்லிம்களின் மதச் சுதந்திரத்தை பாதுகாக்க இயற்றப்பட்ட சட்டங்கள்.

**E.** அதேபோல் அரசுகள், இஸ்லாத்தின் மீதும்,முஸ்லிம்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்படும் வெறுப்புப் பிரச்சாரத்திற்கு எதிரான "Anti - Bias" பிரச்சாரங்கள், சகிப்புத்தன்மையை உருவாக்கிடும் கல்வி இவற்றிற்கு ஏற்பாடு செய்திருந்தால் அவை,பற்றிய விரிவான தகவல்கள்.

### முடிவுரை


அமெரிக்கா தன்னை உலகின் தலைவன் என எண்ணிக்கொண்டு தனது செயல்பாடுகளை 1952 முதலே வடிவமைத்து வந்தது. வருகின்றது. ஆனால் உலகிலேயே அதிகமாக போர்களை நடத்தி மனிதர்களைக் கொன்று குவித்த நாடும் அமெரிக்காதான். இதனால் உலகின் மிகப்பெரிய மனித உரிமை ஆர்வலர் நியோம் சோம்ஸ்கி அவர்கள் "Rouge State" என அமெரிக்காவை அழைத்தார். உலகெங்கும் சென்று பிரச்சாரங்களைச் செய்தார்.

இஸ்லாமோஃபோபியாவை உலகெங்கும் உருவாக்கி வியாபிக்கச் செய்ததும் அமெரிக்காதான். இஸ்லாம் வெறுக்கத்தக்க ஒரு கொள்கை. அதை வெறுக்கக் கற்றுக்கொள்ள வில்லை எனில், அது உலகைத் தன்வயப்படுத்திடும். அது நடந்துவிட்டால் மனித உரிமைகளுக்கோ எந்த உத்திரவாதமுமில்லை. இதைத் தொடர்ந்து பிரச்சாரம் செய்தது. அதேபோல் முஸ்லிம்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள், இல்லையேல் அவர்கள் உலகை அழித்துவிடுவார்கள் எனப் பிரச்சாரம் செய்தது.

தன்னுடைய பொய் பிரச்சாரத்தை உண்மைப்படுத்த அது தனது உளவுத்துறையை ஏவி உலகெங்கும் வெடிக்கச் செய்த குண்டுகள், கொலை செய்த அப்பாவி மக்கள் ஏராளம்,ஏராளம்.

உலகில் ஒவ்வொரு பகுதியிலும் குண்டுகள் வெடிக்கும் போதும், அவற்றின் பின்னணியை நாம் நமது வைகறை வாசகர்களுக்குத் தந்துள்ளோம்.

இத்தனை நாளாய் செய்த வினைகளை,



Joe Biden

ஆப்கானிஸ்தானில் அல்லாஹ்வை மட்டுமே நம்பிநின்ற மக்கள் தந்த அடியினால், உணர்ந்துள்ளது அமெரிக்கா!

NEO. Cons - NEO Conservatives என்ற புதிய பழமைவாதிகள் தந்த அத்தனை திட்டங்களும் வற்றிப்போய் அமெரிக்காவின் இந்த மாற்றம், அதன் இஸ்லாமிய வெறுப்பை காலமெல்லாம் கவனித்தும், படித்துக் கொண்டும், அதனை எதிர்த்துக் கொண்டும், எழுதிக் கொண்டும் இருந்த நமக்கும், நமது வாசகர்களுக்கும் பேர் அதிர்ச்சி!

**இது எத்தனை நாள் நீடிக்கும்?**

இந்தச் சட்டம் எத்தனை நாடுகளைத் திருத்தும் என்பவற்றை காலம்தான் கணிக்கவேண்டும்.

**அடுத்த நடவடிக்கை!**

உலகெங்கும் குண்டுகளை வைத்து அனைத்தத் தரப்பாரையும் கொலை செய்தது. பழியை முஸ்லிம்கள் மீது போட்டது. உலகெங்கும் முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு பெரும் அறிவிப்பைச் செய்தது. அதற்குப் பெயர் (War on Terror) தீவிரவாதத்திற்கு எதிரான போர் எனப் பெயர் வைத்தது.

உலகின் எந்தப் பகுதியிலும் ஓரிரு நாடுகள் கூடினால் உடனேயே முதல் வாக்குறுதி, தீவிரவாதத்திற்கு எதிரானதாக இருந்தது.

உலகில் நடந்த ஒப்பந்தங்களில் முதல் ஒப்பந்தம் தீவிரவாதத்திற்கு எதிரான ஒப்பந்தமாகவே இருந்தது.

இப்படி இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் பழிசுமத்திய அமெரிக்கா இப்போது ஆப்கானிஸ்தானிடம் அடைந்த தோல்விக்குப் பிறகு உணர்ந்துள்ளது. இனி ஒவ்வொரு நாட்டிலும் இஸ்லாமோஃபோபியாவுக்குச் சட்டம் இயற்றிட அமெரிக்கா வகை செய்யவேண்டும்.

இதற்கு முன் தீவிரவாதத்திற்கெதிராக ஒரு சட்டம் வேண்டும் என்பதில் அமெரிக்காவே முன்னணியில் நின்று ஐக்கிய நாடுகள் சபையில் ஓர் தீர்மானம் நிறைவேற்றியது. இதனால் உலகின் ஒவ்வொரு முக்கிலும் தீவிரவாதத்திற்கு எதிராக ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இந்தியாவில் பொடாவும் (POTA), பின்னர் ஊபாவும் (UAPA) வந்தது. (Prevention of Terrorism Act & Unlawful Activities Prevention Act )

அதுபோல் உலகெங்கும் இஸ்லாமோஃபோபியாவுக்கு ஒரு சட்டம் கொண்டு வர அமெரிக்கா முன்னணியில் நிற்கவேண்டும்.அதை ஐக்கிய நாடுகள் சபை வழி நிறைவேற்றிட வேண்டும்.


**படிப்பினை**

அமெரிக்க முஸ்லிம்கள் அத்தனை இன்னல் களுக்கிடையேயும் அத்தனை தாக்குதல் களுக்கிடையேயும் அடர்ந்து வந்த சட்டங் களுக்கிடையேயும் தவறாமல் Data Collection என்ற தகவல் சேகரிப்பில் மிகவும் கவனமாக இருந்திருக்கின்றார்கள். சாதித்துமிருக்கின்றார்கள்.

முஸ்லிம்களில் 70% பேர் இஸ்லாமோஃபோபியாவுக்கு ஆளாகியுள்ளார்கள். ஆனாலும் தளராமல் தகவல்களைத் திரட்டி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள்.

இதுபோன்ற நடவடிக்கைகளை உலகிலேயே அதிகமாக வெறுப்புப் பிரச்சாரத்தை எதிர்கொண்டு, அழிவுகளுக்கு ஆட்பட்டு நிற்கும் இந்திய முஸ்லிம்கள் செய்திட முன்வந்திட வேண்டும்.

**MGM**



# ஆப்கானிஸ்தான் முஜாஹித்களும் ரஷ்ய ஆட்சியாளர்களும்

## கம்யூனிஸ்ட் ரஷ்யா 30 ஆண்டுகளுக்குப்பின் வெளிவந்த உண்மைகள்

அன்று ரஷ்யப் பேரரசு ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது. ஆப்கானிஸ்தானை அரை நொடியில் கையகப்படுத்தி எங்கள் செங்கொடியைப் பறக்கவிடுவோம் என முண்டா தட்டியது. அன்றைக்கு இருந்த இரண்டு வல்லரசுகளில் ஒன்று ரஷ்யா. அப்போது அது (USSR) United Soviet Socialist Republic ஒன்றிணைந்த சோவியத் பொதுவுடைமை குடியரசு.

பத்து ஆண்டுகள் ஆப்கானிஸ்தானில் எல்லா கபளீகரங்களையும் செய்தது ரஷ்யா. அப்பாவி மக்களை முடிந்தமட்டும் வேட்டையாடியது. அங்கே அல்லாஹ்வை மட்டுமே நம்பி நின்ற முஜாஹித்கள் தந்த, இழப்புகளைத்தாளாமல் அசிங்கப்பட்டு, அங்கிருந்து வெளியேறியது.

அப்போது அதாவது 1989 முதல் 1991 வரைக்கும் நடந்த நிகழ்வுகளில், ரஷ்ய வல்லரசு உடைந்தது என்றுதான் வெளி உலகத்திற்குத் தெரியும். ஆனால் அதன் வீழ்ச்சியின் முழு வரலாறும் நமக்கு வந்து கிடைத்திடவில்லை.

உண்மைகள் காலம் தாழ்த்தியேனும் வெளியேவரும் என்ற அடிப்படையில், இப்போது சோவியத் ரஷ்யா வீழ்ந்து 30 ஆண்டுகளுக்குப் பின்னர் பல தகவல்கள் வெளியே வந்துள்ளன. இதை அன்று ரஷ்யாவின் தோல்விக்குத் தலைமை தாங்கிய, மைக்கே கோர்பசெவ் தனது நினைவலைகளில் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் மிகவும் முக்கியமானது, சோவியத் ரஷ்யாவிலிருந்து பல பகுதிகள் விடுதலையைத் தேடியது. கம்யூனிசம் இனி உதவாது என அதைத் தூக்கிப்போட்டது.

1991ல் கொடியின் வர்ணத்தை மாற்றினார்கள். வெள்ளை - நீலம் - சிவப்பு என மாற்றம் பெற்றது. அதற்கு முன்னர் இருந்த கொடியிலிருந்து மாறுபட்டது. இது கம்யூனிச காலத்திற்கு முன்னால் இருந்த கொடி என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா கம்யூனிசத்தின் பிடியிலிருந்து வீழ்ந்துவிடாமலிருக்க பழைய கோர்பசெவ் - ன் ஆட்சியைக் கவிழ்க்க கம்யூனிஸ்டுகள் ஓர் ஏற்பாடு செய்தார்கள். அவர்களால் முடியவில்லை. இப்படி ரஷ்யா அல்லோல கல்லோலப்படவே அவர் டிசம்பர் 8,1991ல் இராஜினாமா செய்தார்.

USSR என்ற ஒன்றுபட்ட சோவியத் ரஷ்யா உடைந்து Common Wealth of Independent States என்றானது.

அதாவது பல நாடுகளின், எல்லாவிதத்திலும், சுதந்திரம்பெற்ற நாடுகளின் குழுமம் என்றானது.

**அணு ஆயுதங்கள்**

இதில் மிகவும் வேதனையானது என்னவெனில் ரஷ்யாவின் மொத்த அணுசக்தியின் இருப்பிடமான, கசகஸ்தான் தனிநாடாக ஆகிப்போனது.

அங்கு அணு ஆற்றலின், திறமைமிகு விஞ்ஞானிகளாக இருந்தவர்கள், முஸ்லிம்கள். அவர்கள் ஒருபோதும் தாங்கள் முஸ்லிம்கள் என்ற எண்ணத்தோடு வாழ்ந்ததில்லை. அவர்கள், தங்களைப் பிறவி கம்யூனிஸ்டுகள் என்ற எண்ணத்திலும், சிந்தனையிலும் வாழ்ந்தார்கள்.

கம்யூனிஸ்ட் ரஷ்யாவைப் பலப்படுத்திடவே அவர்கள் அணு ஆயுதங்களை மேற்கொண்டார்கள், சாதித்தார்கள்.

ஆப்கானிஸ்தானோடு மோதிய 10 ஆண்டுகளாக அவர்கள், முஜாஹித்களின் கதைகள், வீரம், தியாகம் இவற்றைக் கேட்டுக்கேட்டு தாங்களும் முஸ்லிம்கள் தாம் என்பதை உணர்ந்தார்கள். இப்போது ரஷ்யாவின் முழுமையான வீழ்ச்சியும், ரஷ்ய தலைவர்கள் இனி கம்யூனிஸம் கதைக்குதவாது என கம்யூனிசத்தை தூக்கி வீசியதும், இவர்கள் தங்களின் மார்க்கத்தை நோக்கி நகர்ந்திடும் வாய்ப்பை பெற்றார்கள்.


ரஷ்யா வல்லரசாக இருந்தபோது, அவர்களுக்கு இந்த வாய்ப்பு இருந்திடவில்லை.

அப்போது (1991) ரஷ்யாவின் அணு ஆயுத வலிமை பறிபோய்விட்டது. அது முஸ்லிம்களின் கைகளில் கிடைத்திடும் வாய்ப்பிருக்கின்றது என்றெல்லாம் பதறினார்கள் ரஷ்யர்கள்.

தங்கள் பரம்பரை எதிரியான அமெரிக்காவை அழைத்து, இந்த அணு ஆயுத விஞ்ஞானிகளை நீங்கள் அழைத்துக் கொள்ளுங்கள் அல்லது கொன்றுவிடுங்கள் என்று கூறினார்கள்.

பின்னர் யார் கொலை செய்தார்கள் என்பது தெரியாமல் பல விஞ்ஞானிகள் கொலையும் செய்யப்பட்டார்கள். இதனை நாம் நமது வாசகர்களுக்கு "வைகறை வெளிச்சம்" இதழ் வழி தந்திருக்கின்றோம். ஆனால் கஸகஸ்தான் - பிலாதல் ஆகிய இரண்டும், தங்களிடமிருந்த ரஷ்யாவின் அணு ஆயுதங்களை, 1996ல் ஒப்படைத்தன.

தன்னுடைய நினைவுகளில் நான் இராணுவத்தைப் பயன்படுத்தி ரஷ்யாவின் உடைவைக் காப்பாற்றிடலாம், என முயற்சி செய்யவில்லை என்பதற்கும் பதில் சொல்லி இருக்கின்றார் கோர்பசெவ்.




நான் நமது இராணுவத்தைக் கூர்ந்து கவனித்தபோது அது கொள்கை அளவில் பிளந்து கிடந்தது என்பதைக் கண்டேன். அவர்கள் பொதுவுடைமைக் கொள்கையை தூக்கிப்பிடிக்கும் மனநிலையில் இல்லை. ஆகவே அவர்களை நாம் களத்தில் இறக்கினால் "ஓர் சிப்பாய் கலகம்" ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

மக்களும் பொதுவுடைமையில் நம்பிக்கை இழந்திருந்தார்கள். அவர்களில் பலர் கிளர்ச்சியில் ஈடுபடவும் தயாராக இருந்தார்கள். இந்த வகையில் இராணுவத்தை இறக்கினால் பெரிய அளவில் "உயிர்ச் சேதங்கள்" ஏற்படும் இதனாலும் அவர்கள் நான் இராணுவத்தை இறக்கிடவில்லை எனக் கூறியுள்ளார்( தன் நினைவலையில்).

**சோவியத் அதிபர் சொன்ன புதிய கொள்கை**


கம்யூனிசத்திற்குப் பதிலாக கோர்பசெவ் அவர்கள் இரண்டு புதிய கொள்கைகளை அறிமுகம் செய்தார்.

1.பிரஸ்தோரிக்கா (மறு உருவாக்கம்)

2. கிளாஸ் நோஸ்ட் (வெளிப்படைத்தன்மை)

பிராஸ்தோரிக்கா என்பதற்கு பொருளாதார சுதந்திரம் - எல்லாமே அரசுதான் என்பதிலிருந்து விடுதலை. அதாவது ஆக்கப்பட்டவை அனைத்தும் அரசுக்கே சொந்தம், அரசு பங்கிட்டுத் தருவதைப் புசியுங்கள் என்பதிலிருந்து விடுதலை.

கிளாஸ் நோஸ்ட் என்பதன் பொருள் வெளிப்படைத்தன்மை. அதாவது ரஷ்யாவின் உள்



இமாம் கொமைனி(ரஹ்)

*என்ன நடக்கின்றது என்பது ஒரு பெரும் காலகட்டம் வரை உலகில் யாருக்கும் தெரியாது.*

*ரஷ்ய அரசு என்ன அறிவிக்கின்றதோ அதுவே ரஷ்ய மக்களுக்கும், உலக மக்களுக்கும் செய்தி. இதைத்தான்* (Iron Curtain) *இரும்புத்திரை என்பார்கள்.*

*இதிலிருந்தும் ரஷ்யா விடுதலை அடைந்தது. கிளாஸ் நோஸ்ட் மூலம் எல்லாம் "வெளிப்படை" என்றானது. இதன் மூலம் 74 வருட கம்யூனிஸ ரஷ்யாவின் வரலாறு ஓர் முடிவுக்கு வந்தது. வேறுதிசையில் பயணிக்கத் தயாரானது.*

**இமாம் கொமைனியின் கடிதம்**

*இப்படி ரஷ்யா கம்யூனிசத்தின் வீழ்ச்சிக்குப்பின் எந்தத் திசையில் பயணிக்க வேண்டும் எனத் தடுமாறிக் கொண்டிருந்த நிலையில்தான், இமாம் கொமைனி(ரஹ்) அவர்கள் இஸ்லாத்தின் பக்கம் கம்யூனிஸ்ட் ரஷ்யாவை அழைத்தார்கள். விரிவான ஒரு கடிதத்தை எழுதி ஏழுபேர் கொண்ட ஓர் குழுவிடம் கொடுத்து அனுப்பிவைத்தார்கள்.*

**இமாம் கொமைனியின் கடிதம் சுருக்கம்**

கம்யூனிஸ்ட் ரஷ்யாவின் தலைவர் கோர்பசெவுக்கு அழுத்தம் திருத்தமாக ஓர் செய்தியைச் சொன்னார்கள் ; அது, இறைவன் இருக்கின்றான். அவன் ஒருவன், அவனே அகிலங்களின் அதிபதி. இந்த இறைவன் நமது வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டியிருக்கின்றான். அதைப்போல் நாட்டின் நிர்வாக முறைகளுக்கும் நிறைவாகவே வழிகாட்டியிருக்கின்றான். இந்த இறைவனை ஏற்றுக்கொள்ளுங்கள் இந்த இறைவனை - இருக்கின்ற இறைவனை இல்லை என மறுத்ததே உங்கள் கொள்கையின் வீழ்ச்சிக்கும் தோல்விக்கும் காரணம். அதேபோல் ரஷ்யா இராணுவ ரீதியாகத் தோற்றதற்கும் இதுவே காரணம்.

உங்களைத் தோற்கடித்த, ஆப்கானிஸ்தான் முஜாகித்களின் வெற்றிக்குக் காரணம், அவர்கள் இறைவனை ஏக இறைவனை மட்டுமே நம்பி அவனுக்காகவே உங்களை எதிர்த்துப் போர் புரிந்ததே காரணம். அவர்களிடம் வேறு எந்த பலமும் இருக்கவில்லை என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

ஆகவே அல்லாஹ்வையும், அவனது அறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள். இந்த உலகிலும் இறப்பிற்குப் பின்னால் வரும் மறுஉலகிலும் வெற்றி பெறுவீர்கள்"

*இந்தக் கடிதம் அப்போது உலகெங்கும் உலா வந்தது. ஆக சோவியத் ரஷ்யாவுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டோம்.*

*அல்ஹம்துலில்லாஹ்!*

With inputs from : Deccan Chronicle 26/12/2021

- **MGM**


ஐந்தாம் பதிப்பு

"ஆப்கானிஸ்தான் வல்லரசுகளின் கப்ரிஸ்தான்" கல்லறை / சவக் (குழி)




₹140

8072773868

20 வருடங்கள் (2001-2021) ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து அங்கிருந்த வளங்களைச் சுரண்டிவிட்டு, அப்பாவி மக்களை [Civilians] லட்சக்கணக்கில் கொன்று குவித்துவிட்டு, ஐந்து லட்சம் குழந்தைகளையும் கொன்றுவிட்டு (இது 2015 வரை உள்ள கணக்கு) மார்த்தட்டியது அமெரிக்கா. ஆனாலும் வீழ்ந்து போனது.

# கும்பல் வன்முறைக்கு எதிராக ஜார்க்கண்ட் மாநில அரசு



மத்தியில் பாஜக தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்த 2014 முதல் வட மாநிலங்களில் கும்பல் படுகொலை என்று ஊடகங்களால் அழைக்கப்படும் ஒருவித வன்முறை வெறியாட்டம் அரங்கேறி வருகிறது..

மாட்டிறைச்சி பெயரால், பசு கடத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டில், இரயில் பயணங்களில் கும்பலாக சூழ்ந்து கொண்டு ஜெய் ஸ்ரீராம் சொல்ல வற்புறுத்தி படுகொலை செய்யப்பட்ட அப்பாவிகளின் எண்ணிக்கை நூறைத் தாண்டும்..

அஹ்லாக், பெஹ்லுகான், ஜுனைதீன் என்று கும்பல் தாக்குதலில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு உரிய நிவாரணங்கள் கிடைக்காத நிலையில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் மத்திய மாநில அரசுகளின் பாதுகாப்பில் வலம் வரும் அவலம் தொடர்கிறது.

இத்தகைய கும்பல் பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் வகையில் ஜார்க்கண்ட் மாநில அரசு சட்டப்பேரவையில் மசோதா நிறைவேற்றியுள்ளது.

"The Prevention of Mob Violence and Mob Lynching Bill 2021" என்ற மசோதா டிசம்பர் மாதம் 22ம் தேதி பாஜகவின் பலத்த எதிர்ப்புக்கிடையில் ஜார்க்கண்ட் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

மசோதாவை தாக்கல் செய்து ஜார்க்கண்ட் மாநில உள்துறை அமைச்சர் ஆலம்கீர் ஆலம் பேசும் போது

“இந்த மசோதா ஜார்க்கண்ட் மாநிலத்தில் அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள உரிமைகள் மூலம் மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வழிவகை செய்வதோடு, கும்பல் தாக்குதல் வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கும் வகையில் உள்ளது.”

கும்பல் தாக்குதலில் ஈடுபடும் நபர்கள் சட்டத்தின் மூலம் அபராதத்துடன் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் முதல் அதிகபட்சமாக ஆயுள் தண்டனை விதிக்கும் வகையில் மசோதா அமைந்துள்ளது.

கும்பல் வன்முறையில் பாதிக்கப்படும் நபர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சையும், பலியானவர்களின் குடும்பத்தினருக்கு உரிய நிவாரணங்கள் வழங்கவும் மசோதா வழிவகை செய்கிறது" என்று ஆலம்கீர் ஆலம் விளக்கினார்..

ஜார்க்கண்ட் மாநில முதல்வர் ஹேமந்த் ஷோரண் இந்த மசோதாவின் மீதான விவாதத்தில் பேசும் போது, 2019ல் மாநில அரசு பதவிக்கு வந்த பிறகு நடைபெற்ற கும்பல் படுகொலைகளை பட்டிய லிட்டதோடு அப்பாவி மக்களைப் பாதுகாப்பது மாநில அரசின் கடமை என்றும் கூறினார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மட்டும் இதுவரை 53 கும்பல் தாக்குதல்கள் நடைபெற்றதாகவும் அதில் 33 நபர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்றும், கும்பல் வன்முறைக்கு முடிவுகட்டவும், மேலும் தொடராமல் இருக்கவும் இந்த மசோதா நிறைவேற்றுவது தேவை என்றும் பேசினார்..

பாரதீய ஜனதா கட்சி சட்டமன்ற குழு தலைவர் சி.பி.சிங் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த போதும் வாக்கெடுப்பில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் மசோதா நிறைவேறியது..

மாநில ஆளுநர் கையெழுத்திடுவதின் மூலம் மேற்கு வங்காளம், ராஜஸ்தான் மாநிலங்களை தொடர்ந்து கும்பல் வன்முறைக்கு எதிராக சட்டமியற்றும் மூன்றாவது இந்திய மாநிலம் எனும் பெருமை ஜார்க்கண்ட் பெறுகிறது...



**குளச்சல் ஆசிம்**

# திருச்சியில் மஸ்ஜிதுகளில் தொழுகைக்கு வருபவர்களை கெடுபிடிகளுக்கு உள்ளாக்கும் உளவுத்துறை



திருச்சியில் மஸ்ஜித்களில் தொழுகைக்கு வருபவர்களையும், அவர்களின் வாகனங்களையும், செல்போனில் புகைப்படம் எடுத்து அந்த ஊர் மக்களிடமே காட்டி இவர்களைத் தெரியுமா எனக்கேட்டு புரளிகளைப் பரப்பிவருகின்றனர் உளவுத்துறையைச் சார்ந்த ரவி ராஜன் என்பவரும் சுரேஷ் என்பவரும்.

இதில் மிகப்பெரிய வேதனை என்னவெனில், திருச்சி முஹல்லாக்களைச் சார்ந்தவர்களிடமே மஸ்ஜிதில் தொழ வரும் அதே முஹல்லாவாசிகளின் புகைப்படங்களை செல்போனில் காட்டி இவரைத் தெரியுமா எனக் கேட்டுள்ளார்கள். ஆத்திரமடைந்த முஹல்லாவாசிகள், "முஸ்லிம்களுக்கு எதிராக இப்படியெல்லாம் செயல்பட வேண்டாம். இது உங்கள் வேலை இல்லை" எனச் சொல்லி அனுப்பியுள்ளார்கள். இதனை பெரும்திரள் மக்கள் வழி அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல மக்கள் முடிவு செய்தனர்.

பின்னர், இப்போதைய திமுக ஆட்சி முஸ்லிம்களின் ஆதரவோடு நடக்கும் ஆட்சி. சிறுபான்மை முஸ்லிம்களின் அல்லல்களையெல்லாம் புரிந்து கொண்ட ஆட்சி! இந்த ஆட்சியை எப்படியேனும் சிறுபான்மையினருக்கு எதிராக திருப்பிட வேண்டும் என உளவுத்துறை மும்முரமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்பதை உணர்ந்த மக்கள், ஆட்சிக்கு எதிராக எதையும் செய்ய வேண்டாம். ஆட்சியாளர்களின் பார்வைக்குக் கொண்டு செல்வோம் என முடிவு செய்தனர். உரிய அதிகாரிகள், ஆணையங்கள் இவற்றில் புகார் செய்துள்ளனர்.

**- திருச்சியிலிருந்து நமது நிருபர்.**

**முஸ்லிம்களின் கவனத்திற்கு**

ஊருக்கு ஊர் ரவிராஜன்களும், சுரேஷ்களும் இருக்கின்றனர். அதனால் இந்தச் சதி ஊருக்கு ஊர் நடந்து கொண்டிருக்கின்றது என்பதை நாம் ஏற்கனவே "கிளப் ஹவுஸ்" வழி அறிவுறுத்தி யுள்ளோம். தமிழகத்தில் சிறுபான்மையினர் நல அரசு ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது என்பதை உணர்ந்து, நமது ஆதங்கங்களை அரசின் பார்வைக்குக் கொண்டு வரலாம். நிவாரணங்களைப் பெறலாம்.

இப்போது இருக்கும் நமது முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போதே, NIA என்ற தேசிய புலனாய்வு முகமைக்கு எதிராக நமது கூட்டமைப்பு தந்த

தரவுகளின் அடிப்படையில் அறிக்கைவிட்டவர்.

“உளவுத்துறை சிறுபான்மை முஸ்லிம் இளைஞர்களுக்கு எதிராக செயல்படுகின்றது” என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

அதைப்போலவே அவருடைய தந்தை கலைஞர் அவர்களும் சிறுபான்மையினருக்கு ஆதரவாக இருந்தார்கள். குறிப்பாக நமது மனித நீதிப் பாசறை சார்பில் முதல்வராக இருக்கும்போது பலமுறை சந்தித்திருக்கின்றோம். பல நிவாரணங்களைப் பெற்றிருக்கின்றோம் என்பது நினைவு கூறத்தக்கது.



"NIA-இன் கெடுபிடிகளின் போது, எதிர்க்கட்சித் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்தபோது"

NIA என்ற தேசிய முகவாண்மை குறித்து அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிக்கை, நீதிமன்றத்தில் நடந்த விடா “முயற்சி” இவற்றால் ஐந்து முஸ்லிம்கள் “அப்பாவிகள்” என்று விடுதலை செய்யப்பட்டார்கள். இன்னொரு முறை, நான் அவரை சந்தித்தபோது இந்த விபரத்தை அவருடைய பார்வைக்கு கொண்டு சென்று நன்றி சொன்னபோது - “நீங்கள் தந்த தரவுகளை நன்றாக ஆய்வுக்கு உட்படுத்திய பின்னரே அறிக்கைவிட்டேன்” என்றார்.

அவர் இப்போது முதல்வர். இவற்றை நாம் மனதில் கொள்ள வேண்டும்.



NIA வுக்கு எதிராக ஸ்டாலின் அறிக்கை

தேசிய புலனாய்வு முகமையை, மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு தனது கட்சி அரசியல் லாபத்திற்காகப் பயன்படுத்துவதற்கு, தி.மு.க. சார்பில் கடும் கண்டனம் தெரிவிப்பதோடு;

அதிமுக அரசு இது குறித்து மத்திய அரசுக்கு உரிய முறையில் தீவிர அழுத்தம் கொடுத்து - தேசியப் புலனாய்வு முகமை தமிழகத்தில் அரசியல் லாபத்தை மனதில் வைத்து, தலையிடுவதற்கும் - ஏதுமறியாத அப்பாவி இஸ்லாமிய மக்களை துன்புறுத்துவதற்கும், கடும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்

மு.க.ஸ்டாலின் அறிக்கை

வருமான வரித்துறை, அமலாக்கத்துறை, சி.பி.ஐ. போன்ற சுதந்திரமாகச் செயல்பட வேண்டிய அமைப்புகளை "அரசியல் மயமாக்கியது" போல், அவற்றின் தொடர்ச்சியாக, "பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள" அமைக்கப் பட்டுள்ள தேசிய புலனாய்வு முகமையை, மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு தனது கட்சி அரசியல் லாபத்திற்காகப் பயன்படுத்துவதற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடும் கண்டனம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு என்று தனியாக ஒரு பிரிவு டி.ஜி.பி. அலுவலகத்தில் இருக்கிறது. அதற்கு டி.ஐ.ஜி தலைமையில் ஒரு தனி அதிகாரியும் இருக்கிறார். துணை பிரிவுகளும் இருக்கின்றன. "க்யூ பிராஞ்ச்" என்று சொல்லப் படுகின்ற அந்தப் பிரிவு மாநில அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இயங்கி வருவது மட்டுமின்றி - மாண்புமிகு முதலமைச்சரின் நேரடிக் கட்டுப் பாட்டில்தான் உள்ளது.

ஆனால் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தத் துறையையும் மீறி- தேசியப் புலனாய்வு முகமையை தமிழகத்தில் பல்வேறு மாவட்டங் களுக்கும் அனுப்பி அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை குறிவைத்து- இஸ்லாமிய சமுதாய மக்கள் அனைவரையும் பயங்கரவாதிகள் போல் சித்தரிக்கும் அபாயகரமான போக்கை மத்திய பா.ஜ.க. அரசு உடனடியாகக் கைவிட வேண்டும். பயங்கரவாதம் எந்த மதத்தின் நெறிகளுக்கும் ஏற்புடையதல்ல. எந்த மதமும் அதை ஆதரிக்கப் போவதுமில்லை. சிறுபான்மையினர் உள்ளிட்ட அனைத்து மதத்தினரிடமும் அத்தகைய உயர்ந்த ஒருமைப்பாட்டு உணர்வும், சிறப்பான நாட்டுப் பற்றும் தழைத்தோங்கி இருக்கிறது என்பதை மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு புரிந்து கொண்டு- அனைத்து மதத்தினரும் நாட்டின் மீது கொண்டுள்ள அந்த மாறாப்பற்றுதான் இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு மாபெரும் வலிமை சேர்த்துக் கொண்டிருக்கிறது என்பதை மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு முதலில் உணர வேண்டும்.

தமிழகத்தில் பா.ஜ.க. எப்படியாவது காலூன்றி அரசியல் செய்ய விரும்பினால்- மக்களின் மேலான ஆதரவைப் பெறுவதற்கு நேர்மையான ஜனநாயக வழிகள் பல திறந்தே இருக்கின்றன. அதை தவிர்த்து, சிறுபான்மை சமுதாயத்தினரை ஒட்டுமொத்தமாக பயங்கரவாதிகளாகச் சித்திரித்து, அதன்மூலம் பா.ஜ.க.வை விதைக்கலாம் என்ற நோக்கில், தமிழகத்தில் தேசியப் புலனாய்வு முகமையை பயன்படுத்துவதும் - மாநில அரசுக்கே தெரியாமல் கைது நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் - ஒரு மத்திய அரசுக்கு எவ்விதத்திலும் அழகல்ல. தமிழகத்தில் உள்ள அதிமுக அரசும் இந்த அதிகார துஷ்பிரயோகத்தைக் கண்டு கொள்ளாமல், எவ்வித முணுமுணுப்பும் இன்றி, அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது பொறுப்புள்ள, மாநில அரசுக்குரிய அடிப்படை இலக்கணமும் அல்ல! பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் அனைத்துக் கட்சிகளும் ஒரே அணியில் நின்று ஆதரவளித்துக் குரல் கொடுக்கும் போது, அந்த ஒற்றுமையைத் தவறாக எண்ணி, தனது அரசியல் லாபத்திற்காக பா.ஜ.க. பயன்படுத்திட எத்தனிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே அதிமுக அரசு இது குறித்து மத்திய அரசுக்கு உரிய முறையில் தீவிர அழுத்தம் கொடுத்து - தேசியப் புலனாய்வு முகமை தமிழகத்தில் அரசியல் லாபத்தை மனதில் வைத்து, தலையிடுவதற்கும் - ஏதுமறியாத அப்பாவி இஸ்லாமிய மக்களை துன்புறுத்துவதற்கும், கடும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில், தேசியப் புலனாய்வு முகமை, அரசியலுக்காக பயன்படுத்தப்படுவது தொடர்ந்தால், பாராளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் உரிய வகையில் கடுமையான முறையில், ஜனநாயக வழிகளில், எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்று அறிவித்திட விரும்புகிறேன்.

07

நமது சந்திப்பிற்கு பிறகான ஸ்டாலின் அவர்களின் அறிக்கை

### குறிப்பு

இதுபோல் உங்கள் பகுதியில் ஏதேனும் நடந்தால், நீங்கள் அதை அரசின் பார்வைக்கும், வைகறை வெளிச்சத்தின் பார்வைக்கும் கொண்டு வந்திடுங்கள்.

### வாசகர்கள்

“காவல்துறை ஊழல் மயமானது முஸ்லிம்களுக்கு எதிரானது” என்பது மூன்று DGPக்கள் என்ற Director General of Police எடுத்த முடிவு. இதனை ஓர் அறிக்கையாக அன்றைய ஒன்றிய அரசிடம் தந்தார்கள். இதில் நமது தமிழகத்தில் DGP யாக இருந்த “இராமானுஜம்” அவர்களும் ஒருவர்.

இந்த அறிக்கையை மையமாகக் கொண்டு கட்டுரை ஒன்றை “வைகறை வெளிச்சம்” நவம்பர் ***2014***ல் வெளியிட்டோம், அதனைப் படிக்கவும்.

### கடந்த ஆட்சிக்காலத்தில்

Anti Minority Sentiment சிறுபான்மையின முஸ்லிம்களுக்கு எதிரான மனநிலையைக் கொண்டவர்கள் காவல்துறையில் பல பதவிகளில் அமர்த்தப் பட்டுள்ளார்கள். இதை நாம், “வைகறை வெளிச்சம்” இதழ்களில் குறிப்பிட்டு வருகின்றோம். அரசின் பார்வைக்கும் கொண்டு சென்று வருகின்றோம்.

இதுபோன்ற தகவல்களை, அரசின் பார்வைக்கும், வைகறை வெளிச்சத்தின் பார்வைக்கும் கொண்டு வரும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்!

**-MGM.**



# மோடி மறைத்த
# அவுரங்கசீப் வரலாறு

*2013*ஆம் ஆண்டு ராய்ட்டர் செய்தியாளர்கள் உடனான சந்திப்பின் போது நான் ஒரு ஹிந்து தேசியவாதி என்று முழங்கினார் ஆர்.எஸ்.எஸ் மூத்த உறுப்பினர் மோடி. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் பிரதமராக இருந்தாலும் "இந்தியாவில் இந்துக்களும் முஸ்லிம்களும் எதிர் எதிர் துருவங்கள், அவர்களுக்குள்ளே பிரிவினை நிலவிக் கொண்டே இருக்கும்" என்னும் இந்துத்துவாவின் சித்தாந்த நிலைபாட்டை வாய்ப்பு கிடைத்தால் அவர் வலியுறுத்திக் கூறிட தவறுவதே இல்லை.

வாரணாசியில் நடைபெற்ற காசி விஸ்வநாதர் ஆலய விரிவாக்க திறப்பு விழாவின்போது *(13* டிசம்பர் *2021)* ஹிந்துக்களை தூண்டிவிடும், பிளவுபடுத்தும் கருத்தையே மொழிந்தார்.

"படையெடுப்பாளர்கள் இந்த நகரத்தைத் தாக்கி அழிக்க முயற்சித்தனர். ஔரங்கசீப்பின் அராஜகங்களை வரலாறு கண்டது. வாள்முனையில் நாகரீகத்தை மாற்ற முயன்றவர்கள், மதவெறி மூலம் கலாச்சாரத்தை அழிக்க முயன்றவர்களை வரலாறு கண்டது. ஆனால் இந்த நாட்டின் மண், உலகில் மற்ற பகுதிகளை விட வேறுபாடானது. ஒரு ஔரங்கசீப் இருந்தால், சிவாஜியும் இருப்பார்..." என்றார்.

*1669* ஆம் ஆண்டு அவுரங்கசீப் உத்தரவின்படி காசி விசுவநாதர் கோவிலின் பெரும்பகுதி இடிக்கப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டு மதுரா கேசவா கோவில் இடிக்கப்பட்டது. இடித்ததற்கு மதச்சாயம் பூசி பிரச்சாரம் செய்பவர்கள் அதே அவுரங்கசீப், பிராமண பூசாரிகளை பாதுகாத்ததையும், கோவில்களுக்கு நிலங்கள் வழங்கியதையும் மக்களிடம் எடுத்துக் கூறுவதில்லை. Aurangzeb: The Man and Myth என்ற புத்தகத்தில் ஆத்ரே துருஸ்கே (Audrey Truschke) இதனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூர் கோவில் விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று அதிகாரிகளுக்கு *1659* ஆம் ஆண்டு உத்தரவிட்டிருந்தார் அவுரங்கசீப். கங்கை நதிக்கரை ஓரத்தில் வாழ்ந்த துறவி பகவந்த்

கோசைனின் பாதுகாப்பை உறுதி செய்தார். பக்திமான்களாக வாழக்கூடிய பிராமணர்களுக்கும், சன்னியாசிகளுக்கும் வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்வதற்கு வாரணாசியில் நிலங்களை ராம்ஜிவன் கோசைன் என்பவருக்கு வழங்கினார். சிவனடியார்களிடமிந்து (சைவ மத குருமார்கள்) அநியாயமாக பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களை அவர்களிடமே ஒப்படைத்தார். ஹிந்து இசத்தையும் அதனைப் பின்பற்றுவோரையும் எப்படி அவுரங்கசீப் நடத்தினார் என்பதற்கு மேற்கண்ட உதாரணங்களின் வழி விவரிக்கிறார் ஆத்ரே துருஸ்கே.

மோடி இதையெல்லாம் வாரணாசி மக்களுக்குக் தெரிவிக்க மாட்டார். ஏனெனில் கோயில்களை இடித்தார்கள், இந்துக்களை மதம் மாற்றினார்கள் என்று கூறியே அரசியல் நடத்த வேண்டியுள்ளது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா அதன் பிரதமர் மோடி, ஜனநாயக விழுமியங்களான வேற்றுமையில் ஒற்றுமை காணும் காரணிகளை விவரிக்காமல் பிளவுபடுத்தும் கருத்தை முன்வைப்பது இந்தியாவிற்கு உகந்தது அல்ல.

ஹிந்து தேசியவாதிகளின் தலைமைக்கு இந்தியா சென்றபின் ஜனநாயக விழுமியங்களை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறது. எனவே உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா என்று கூறி மக்களை ஏமாற்ற வேண்டாம். அப்படி ஒரு மாயையை நாமே உருவாக்க வேண்டாம். ஏனெனில் அவர்களே இந்தியா இந்துத்துவாவை முன்நோக்கி செல்லும் நாடு என்று தான் அவ்வப் பொழுது பேசியும் நிரூபித்தும் கொண்டிருக்கிறார்கள்.

**60 ஆயிரம் கோயில்கள் இடிக்கப்பட்டனவா?**

முஸ்லிம்களின் ஆட்சியின் போது 60,000 கோயில்கள் இடிக்கப்பட்டன என்பதே ஹிந்து வலதுசாரிகளின் பிரச்சாரம். வரலாற்றாசிரியர் ரிச்சர்ட் ஈட்டன் ஆய்வின்படி 80 கோயில்களே இடிக்கப்பட்டன. ஷாஜகான் ஆட்சியின்போது ஒரே நேரத்தில் இடிக்கப்பட்ட பல கோயில்களின் எண்ணிக்கையை ஒன்று என்று பதிவு செய்ததற்காக

ரிச்சர்ட் ஈட்டனின் கணக்கு தவறு என்றும் கூறப்பட்டது.

இதனைக் குறித்து அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு "சேதப்படுத்தப்பட்ட கோயில்களின் எண்ணிக்கையை துல்லியமாக கணக்கிட முடியாது. ஏனெனில் நமக்குக் கிடைக்க கூடிய ஆதாரங்கள் ஒரு ஜிக்சா புதிரை (Jigzaw) போன்றது. அதனைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான 30-50 சதவீத பகுதிகள் நம்மிடம் இல்லை, விடுபட்டுள்ளன. முஸ்லிம்களின் ஆட்சி குறித்து முழுமையான வரலாறு இல்லை. இடிக்கப்பட்ட கோவில்களின் எண்ணிக்கை 80 என்ற கணக்கு தெளிவான ஆதாரங்களின் அடிப்படையிலானது" என்றார்.

எண்ணிக்கை எவ்வளவு என்பதை விடுங்கள். இடிக்கப்பட்ட கோயில்களின் எண்ணிக்கையை விட அவுரங்கசீப்பால் பாதுகாக்கப்பட்ட கோயில் களின் எண்ணிக்கை அதிகம் என்னும் ஆத்ரே துருஸ்கேவின் கூற்று மிகச் சரியானது. அவுரங்கசீப் வரலாற்றை, நேரிய முறையில் அணுகினால் அவரின் நடவடிக்கை எதற்காக என்பது புரிந்திடும். ஆட்சிகளை கவிழ்த்திடும் அல்லது அதற்கு எதிராக செயல்படும் மையங்களாக கோவில்களை பயன்படுத்தும்போது முஸ்லிம் ஆட்சியாளர்கள் அதை தாக்கியுள்ளார்கள்.

பெரும்பாலும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் கோவில்கள் ஆட்சிக்கவிழ்ப்பு மையங்களாக பயன்படுத்தப்பட்ட போதெல்லாம் அப்படித்தான் நடந்து கொண்டார்கள் என்றில்லை.

அவுரங்கசீப்பின் கட்டுப்பாட்டிலிருந்த சிவாஜி தப்பிப்பதற்கு உதவி செய்தார்கள் என்று காசி விஸ்வநாதர் கோவில் பிராமணர்கள் குற்றம் சாட்டப்பட்டார்கள். அவுரங்கசீப்பிற்குப் போட்டியாக நின்ற அவரின் சகோதரர் தாரா சிகோவினால் பாதுகாக்கப்பட்டு வந்தது மதுரா கோவில்.

கடந்தகால நிகழ்வுகளை விடுங்கள். 1984ல் அமிர்தசரஸ் பொற்கோவிலில் ஆயுதம் ஏந்திய போராளிகள் பதுங்கியிருந்தபோது இந்திய ராணுவம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லையா?

1995ல் காஷ்மீர் சராரே ஷரீஃப் தர்காவில் இந்திய ராணுவத்திற்கும் போராளிகளுக்கும் சண்டை நடந்தபோது என்ன நடந்தது? இரண்டு நிகழ்வுகளிலுமே வழிபாட்டுத் தலங்கள் மிகுந்த சேதம் அடைந்தன.

உண்மையில் அவுரங்கசீப் மதவெறியர் என்றால் அவருடைய அவையில் உயர்ந்த பொறுப்பில் ஹிந்துக்கள் வீற்றிருக்க முடியுமா? வரலாற்று ஆசிரியர் எம்.அதால் அலியின் கணக்கின்படி அக்பர் அவையில் உயர் அந்தஸ்தில் இருந்த ஹிந்துக்களின் சதவிகிதம் 22.5 அதுவே 1707ல் அவுரங்கசீப்பின் இறுதிக்காலத்தில் 31.6 சதவீதமாக அதிகரித்து இருந்தது.

அவுரங்கசீப்பின் நம்பிக்கைக்குரியவர்கள், அதிகாரமிக்கவர்கள் பட்டியலில் சந்தர்பன் பிராமண், ராஜா ரகுநாத் ஆகியோர்களும் உண்டு.

ஆனால் இன்றோ மோடி அமைச்சரவையில் இருக்கும் முஸ்லிம்களின் சதவிகிதம் 1.28.

முஸ்லிம் ஆட்சியாளர்கள் மட்டும்தான் இந்தியாவில் இப்படி நடந்து கொண்டார்களா?

பிரதிகார பேரரசுகள் (Piratiharas), பல்லவர்கள், சந்தேலர்கள் (Chandela) ராஷ்டிரகூடர்கள் (Rashtrakuta), பாண்டியர்கள் இன்னும் பல அரசுகள் கோவில்களின் மீது தாக்குதலைத் தொடுத்துள்ளனர்.

எதிரி நாட்டினரால் பராமரிக்கப்பட்டு வந்த சிலைகளை களவாடிச் சென்றுள்ளனர். இந்தியாவின் ஒரு பகுதியை ஆண்டவர்கள் மற்றொரு பகுதிக்கு படை எடுக்கும்போது அல்லது அவர்கள் எதிரிகளுடன் மோதும்போது இதுபோன்ற தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால் முஸ்லிம்களை மட்டும் தனிமைப்படுத்தி அழித்திட வேண்டும் என்ற கொள்கையை உடையவர்களே வரலாற்றை மறைத்து பிரச்சாரம் செய்கின்றனர்.

புத்த மதம் எவ்வாறு இந்தியாவிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டது என்பதை நம் பாடப் புத்தகங்களில் சேர்ப்பார்களா? பிராமணர்களாலும் அவருடைய ஆதரவாளர்களாலும் புத்த மதத்தைப் பின்பற்றியவர்கள் வேட்டையாடப்படவில்லையா? சித்திரவதைகள் செய்யப்பட்டு நாக்குகள் பிடுங்கப்பட்டு கொல்லப்பட்டனர். புத்த மடாலயங்கள் தகர்க்கப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்டன. DN.ஜா-வின் புத்தகமான Against the Grain, கியோவான்னி வெரார்தியின் (Giovanni Verardi) hardship and downfall of Buddhism in India என்ற புத்தகமும் புத்த மடாலயங்கள் அழிக்கப்பட்ட அல்லது இந்துக் கோயில்களாக மாற்றப் பட்ட பட்டியலைத் தருகின்றன.

பிரிட்டிஷ் இயற்பியலாளர் பிரான்சிஸ் புச்னன் புத்த கயாவிற்கு 1811இல் சென்றபோது அங்கே உயிர்தப்பி வாழ்ந்த ஒரு புத்த துறவியைக் கண்டார். அந்த மாநிலத்தில் ஹிந்துக்களால் கையகப்படுத்தப் பட்ட புத்தமத புனித இடங்களைப் பற்றிய குறிப்பையும் அவர் கொடுத்துள்ளார் என்று குறிப்பிடுகிறார் வெரார்தி.

பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் இடம் எங்களுக்கு சொந்தம். அதில் சமரசத்திற்கு இடமில்லை என்று கூறியவர்கள் மஹாபோதி கோவில் விவகாரத்தில் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை பாருங்கள். தற்போது மகாபோதி கோவில் வளாகத்தை இந்துக்களும் பௌத்தர்களும் சேர்ந்து நிர்வகிக்கின்றனர். பௌத்தர்களுக்கு இடத்தை கொடுக்கவில்லை.

பாபரி மஸ்ஜித் விவகாரத்துடன் ஒப்பிடும்போது மகாபோதி கோவில் வளாகத்தில் சங்கரமட இந்துக்கள் பௌத்தர்களுடன் இணங்கிப் போவதை சகிப்புத்தன்மை என்பதா அல்லது இந்தியாவில் மதத்தின் பெயரால் நடக்கும் அநீதிக்கு சிறந்த உதாரணம் என்பதா? அவுரங்கசீப் காலத்தில் நடந்த சில சம்பவங்களை கூறி வரலாற்று பின்னணியை மறைத்துக் கூறுவதன் மூலம் வாக்குகளை அறுவடை செய்திட முடியும். தேர்தலில் வெற்றி பெற முடியும். ஆனால் இந்த சம்பவங்களைக் கூறி உலகத்திற்கு பாடம் எடுக்க முடியாது. இந்தியா தங்களுடைய பகுதிகள் என்று கூறும் இடங்களை ஆக்கிரமித்துள்ள சைனாவை பயந்து பின்வாங்கவும் செய்யமுடியாது.

தகவல்கள் ஆதாரம் | Mid-day 20 December 2021

**அபூஹாசின்**






# பெண் ஒரு சுதந்திர நீதி!

இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்)அவர்களுக்கு முந்தைய காலகட்டத்தில், பெண்கள் ஆண்களையே சார்ந்து வாழ்ந்திட வேண்டியவர்களாக இருந்தார்கள்.

அதாவது அவர்கள் ஆண்களைச் சாராமல் தங்களைக் காப்பாற்றிட இயலவில்லை. இஸ்லாம் வந்த பின்னர்தான், பெண்கள் சுதந்திரமாக தங்கள் தனித்துவத்தோடு வாழ்ந்திட முடிந்தது.

- அவள் வியாபாரம் செய்யலாம்.
- அவள் அவளுடைய பெயரிலேயே ஒப்பந்தங்களைச் செய்திடலாம்.
- அவள் வாக்குறுதிகளை வழங்கலாம், தானாகவே அவற்றை நிறைவேற்றலாம்.
- வாக்குறுதிகளை ஏற்கலாம். மீறுவோர் மீது அவள் நடவடிக்கைகளை எடுக்கலாம்.
- தான் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றிட அவளே பொறுப்பு.
- தாய் என்னும் நிலையிலும்,
- மகள் என்னும் நிலையிலும்,
- சகோதரி என்னும் நிலையிலும் அவள் சொத்துக்களில் பங்குபெறலாம்.

பங்கு வைத்துப் பிரித்திடாத தந்தை, சகோதரன், கணவன் ஆகியோரின் சொத்துக்களிலுள்ள பங்கு அவளை வந்து சேரும். அவற்றைப் பெறும் உரிமை அவளுக்குண்டு.

இந்த நிலை,சொத்துக்களில் பங்கு பெறும் நிலை இஸ்லாத்திற்கு முந்தைய காலகட்டத்தில் அதாவது அல்லாஹ்வின் அறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் காலகட்டத்திற்கு முன் எந்த மதத்திலும், எந்தச் சட்டத்திலும்,எந்தச் சமூக காலகட்டங்களிலும் இருந்ததே இல்லை. உலகின் ஒரு பகுதியில் அவளுக்கென ஓர் ஆன்மா இல்லை என்ற நிலையே இருந்தது.

அவள் தனது துணையைத் தானே தெரிந்தெடுத்திடலாம்.

இஸ்லாத்தின் வருகைக்குப் பின், திருமண வயதை எட்டிவிட்ட ஒரு பெண்ணை, கட்டாயப்படுத்தி ஒரு கணவனிடம் திணித்திடக்கூடாது. அவளுடைய அனுமதி இல்லாமல் அவளை திருமணம் செய்து தந்திடக்கூடாது.இயலாது!

செல்வத்தைப் பொருத்தவரை அவளுடைய செல்வங்களை அவளே வைத்துக்கொள்ளும் உரிமையும் அவளுக்குண்டு.

அவள் விரும்பினால் மட்டுமே அவளிடம் இருந்து அவள் செல்வத்தைப் பெற்றிட இயலும். அல்லாதபோது அவளே அவற்றின் அதிபதி.

நீ என் மனைவி ஆகவே உன்னிடம் இருக்கும் செல்வத்தை எனக்குத் தா, எனக் கேட்கும் உரிமை கணவனுக்கில்லை. அதைப் போலவே ஏனைய உற்றார் உறவினர்களுக்குமில்லை.

இறைவன் கூறுகின்றான் :

“ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்ததில் உரிய பங்குண்டு பெண்களுக்கு அவர்கள் சம்பாதித்ததில் உரிய பங்குண்டு.ஆகவே அல்லாஹ்விடம் அவன் அருளைக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருள்களையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.” (அல்குர்ஆன் 4 :32)

அத்தோடு பாகப்பிரிவினைகளிலும் அவளுக்குப் பங்குண்டு.

அல்லாஹ் அறிவிக்கின்றான் :


“பெற்றோரோ,நெருங்கிய உறவினர்களோ விட்டுச்சென்ற சொத்தில் ஆண்களுக்குப் பாகமுண்டு, அவ்வாறே பெற்றோரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் பாகமுண்டு, அச்சொத்திலிருந்து குறைவாக இருந்தாலும் சரி,அதிகமாக இருந்தாலும் சரியே! இது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்ட பாகமாகும்.” (அல்குர்ஆன் 4:7)


இப்படி 1400 ஆண்டுகளுக்கு முன்னரே பெண்களுக்குச் சொத்தில் பங்கு வழங்கப் பட்டிருந்தது, இஸ்லாத்தில். இன்று சில நாடுகளில் இந்த உரிமை வழங்கப்படுகின்றது அவர்கள் தாங்கள்தாம் இதன் முன்னோடி என்கின்றனர். இன்னும்,இன்றும் உலக நாடுகள் பலவற்றில் இந்த உரிமைப் பெண்களுக்கு வழங்கப்படவில்லை. அவர்கள் இந்த உரிமையைப் பெறுவதற்கு பல்வேறு தளங்களிலும் போராடி வருகின்றார்கள்.

முஸ்லிம் பெண்கள், கொடிபிடிக்காமல், கோஷம் போடாமல், இந்த உரிமையைப் பெற்றுக் கொண்டார்கள்.இந்த உரிமை அல்லாஹ் இட்டக் கட்டளை.

இன்ஷா அல்லாஹ் தொடரும்.

**எம்.ஜி.எம்**






# பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள்
# முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

**ஜெய்ப்பூர் (ராஜஸ்தான்)குண்டுவெடிப்பு வழக்கு 2008**

ஜெய்ப்பூர் குண்டுவெடிப்பின் போது விஜய் என்ற ரிக்ஷா தொழிலாளி காயமடைந்தான். அவனை போலீஸார் விசாரணை செய்தபோது, குண்டுவெடிப்பு நடந்த இடங்களில் ஒன்றிற்கு அருகில் வசிக்கும் மீனா என்ற பெண் ஒரு புது சைக்கிளை (வெடிகுண்டுகளுடன்) கொடுத்தார். அதனை குண்டுவெடிப்பு நடந்த இடமான ஹவா மஹால் அருகில் நிறுத்தச் சொன்னார். அதற்குக் கூலியாக ஒரு லட்ச ரூபாயை அளித்தார் என்றும் போலீஸாரிடம் கூறினான். அதே நாள் மாலையில் ஆஜ்தக் என்ற தொலைக்காட்சி அவனிடம் (விஜயிடம்) பேட்டி கண்டது. இவன் ஆஜ்தக்கிற்கு அந்த நிகழ்வுகள் எப்படி நடந்தது என்று பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தபோதே இவனை போலீஸார் அந்த ஸ்டூடியோவிலிருந்து வேறு இடத்திற்கு கொண்டு சென்றனர். முதலில் வந்த செய்திகளின்படி மீனா என்ற பெண்ணை போலீஸார் தீவிரமாக தேடினர். (ஆதாரம்: மில்லிகெஜட்,1-15 ஜீன் 2008). ஆனால் அதன்பிறகு விஜயைப் பற்றியோ மீனாவைப் பற்றியோ எந்த ஒரு செய்தியுமில்லாமல் போனது மிகவும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது.

**கான்பூர் (உ.பி)குண்டுவெடிப்பு வழக்கு 2008**

கான்பூர் (உ.பி) குண்டுவெடிப்பிற்குத் தேவையான தயாரிப்புகளை (அதாவது வெடி பொருட்களை கொண்டு குண்டுகள்) தயாரித்தபோது ராஜீவ்மிஸ்ரா மற்றும் பூபிந்தர் சிங் என்ற இரண்டு பஜ்ரங்தள் தொண்டர்கள் இறந்துபோனார்கள். இந்த குண்டுகள் வெடித்தவுடன் பத்திரிகையாளர்களை சந்தித்த காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், விசாரணையில் இது ஒரு மாபெரும் குண்டுவெடிப்பிற்கான தயாரிப்பு என தெரிய வருகிறது என்றார். அங்கு என்னென்ன (குண்டுகள் தயாரிப்பிற்கான)வெடி பொருட்கள் பெருமளவில் சிக்கின என்பதை விட்டுவிட்டு ஒரு டைரியும் கையால் வரைந்த வரைபடமும் அதுவும் சிறுபான்மையினர் அதிகமுள்ள ஃபெரோசாபாத் பகுதியில் கைப்பற்றப்பட்டதாக போலீஸார் அறிவித்தனர். (ஆதாரம் : அவுட்லுக் செப்.2008, கம்யூனிஸம் காம்பாட் செப்.2008)

குண்டுவெடிப்பின்போது இறந்துபோன இரண்டு பஜ்ரங்தள் தொண்டர்களும் இரண்டு மாதங்களாக (இந்த குண்டுவெடிப்பு நடக்கும் வரை) மும்பையைச் சேர்ந்த இரண்டு பேர்களுடன் அடிக்கடி செல்போனில் பேசி வந்ததாக சிறப்பு அதிரடிப்படையினர் தங்களது புலனாய்வில் தெரிவித்தனர். (ஆதாரம் : தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, மும்பை,29.08.08)

மும்பையைச் சேர்ந்த இரண்டு பேரும் பேசிய

சிம்கார்டுகள் போலியான பெயர்களில் வாங்கப்பட்டவை என்பதைக் கூட போலீஸார் கண்டுபிடிக்கவில்லை என்பது பிறகுதான் தெரியவந்தது. தொலைதொடர்பு பதிவுகளை (சிடிஆர்)ஐ வைத்து அவர்களை போலீஸார் எளிதாக பிடித்திருக்கலாம். ஆனால் இந்த குண்டுவெடிப்பின் மூளையான அவர்களிருவரையும் போலீஸார் கண்டுபிடிக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பது அப்பட்டமாக தெரிந்தது.

### ஜெர்மன் பேக்கரி வழக்கு (புனே)2010

இந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களும் தீர்ப்பும் தெரிவிப்பது என்னவென்றால், இந்த குண்டுவெடிப்பை நிகழ்த்த செல்போனை ரிமோட் கண்ட்ரோலாக உபயோகித்திருக்கிறார்கள் என்பது தடய அறிவியலாளர்களின் கருத்தாக இருக்கிறது.

குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்படி உபயோகப் படுத்தப்பட்ட சிம்கார்டுகள் ஏர்டெல் கம்பெனியைச் சேர்ந்தவை. ஆனால் இதை மேற்கொண்டு எந்த விசாரணையும் செய்யாமல் விட்டுவிட்டனர். ஏற்கனவே 2009 ஆகஸ்ட் மாதம் நடந்த மட்காவ்ன் (கோவா) குண்டுவெடிப்பில் தொடர்புடைய சனாதன் சன்ஸ்தா என்ற அமைப்பைச் சார்ந்த சாரங் குல்கர்னி என்பவன் தான் இந்த குண்டுவெடிப்பை நிகழ்த்தியிருக்கலாம் என்று என்.ஐ.ஏ (தேசிய புலனாய்வு நிறுவனம்) மற்றும் ஏடிஎஸ் (தீவிரவாத தடுப்பு குழு) சந்தேகிப்பதாக மராத்தி டெய்லி, கோவா பதிப்பு மே 5, 2010 இல் வெளியிட்டுள்ளது. இச்செய்தியை மராட்டிய தீவிரவாத தடுப்பு குழு தலைவர் கே.பி.ரகுவன்ஷியும் உறுதி செய்துள்ளார்.

ஜெர்மன் பேக்கரி குண்டுவெடிப்பு நடப்பதற்கு முன்பு தொடர்ச்சியாக இரண்டு மாதங்களாக சாரங் குல்கர்னி, புனே சிவாஜி நகரைச் சேர்ந்த பிராமண மதவாத தலைவர் ஒருவரோடு தொடர்பு கொண்டிருந்தான் என்பது குண்டுவெடிப்பு புலனாய்வின் போது தெரியவந்தது. சாரங் குல்கர்னியும் அவன் கூட்டாளிகளும் 12வெடிகுண்டுகள் தயாரித்து அதில் 5ஐ மட்டும் கோவா குண்டுவெடிப்பில் உபயோகித்துவிட்டு மீதி 7ஐ கைவசம் வைத்திருக்கிறார்கள். இது மிக முக்கியமான குறிப்பிடத்தகுந்த ஆதாரம். இந்த வழக்கிலும் சரி வேறு வழக்குகளிலும் சரி இந்த ஆதாரத்தைத் தீவிரவாத தடுப்பு குழு எடுத்துக் கொள்ளவேயில்லை. வழக்கம்போல ஹிமாயத் பேக் என்ற முஸ்லிமை வைத்து இது முஸ்லிம்களால் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு என்ற தோற்றத்தை மத்திய உளவுத்துறை (ஐபி) மற்றும் தீவிரவாத தடுப்பு குழு உருவாக்கியது.

அதுமட்டுமல்லாமல் ஹிமாயத் பேக்கின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் சில பொய்யான ஆதாரங்களை சமர்ப்பித்து செசன்ஸ் நீதிமன்றத்தில் தூக்கு தண்டனையும் வாங்கித் தந்தது தீவிரவாத தடுப்பு குழு (ஏடிஎஸ்). ஆனால் இதனை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாமல் ஹிமாயத் பேக்கை விடுதலை செய்தது. சாரங்குல்கர்னியை லாவகமாக தப்பிக்க வைத்தனர் மத்திய உளவுத்துறை (ஐபி)யும் தீவிரவாத தடுப்பு குழுவு(ஏடிஎஸ்)ம்.

### ஜாவேரி பஜார் (மும்பை) குண்டுவெடிப்பு வழக்கு 2011

2011,ஜூலை 13ஆம் தேதி நடந்த ஜாவேரி பஜார் குண்டுவெடிப்பிலுள்ள இரண்டு முக்கியமான ஆதாரங்களான செய்திகள் 16 ஜூலை, 2011 அன்று மராத்தி டெய்லி லோக்மாட், புனேயில் வெளியானது.

1.8698525934 என்ற செல்போனிலிருந்து பாகிஸ்தானிற்கு OK என்ற குறுஞ்செய்தி அனுப்பப்பட்டிருப்பதை ஏடிஎஸ் (தீவிரவாத தடுப்பு குழு)கண்டுபிடித்தது. விசாரணையின்போது அந்த எண் புல்தானா மாவட்டத்திலுள்ள சிகாலி தாலுகாவில் கோத்ரி கிராமத்தைச் சேர்ந்த ஷெல்கே என்பவனுடைய நம்பர். இவனுக்கு இரண்டு மகன்கள். மூத்த மகன் எம்.ஐ.டி.சி (அவ்ரங்காபாத்) பகுதியிலுள்ள வாலஞ்ச் என்ற இடத்தில் ஒரு மோட்டார் சைக்கிள் கம்பெனியில் வேலை பார்க்கிறான்.

இரண்டாவது மகன் பானு தாஸனுடைய நண்பன் நிர்மாலி. இந்த நிர்மாலி சாராயம் குடித்த போதை மயக்கத்தில் குறுஞ்செய்தியை அனுப்பினானாம்!

குண்டுவெடிப்பிற்கும் இதற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று தீவிரவாத தடுப்பு குழு (ஏடிஎஸ்) தலைவர் ராகேஷ் மரியா கூறியது விந்தையிலும் விந்தை.

2.அதே செல்போனிலிருந்து "தானே" மாவட்டத்திலுள்ள உல்லாஸ் நகர் காவல் நிலையத்திற்கு குண்டுவெடிப்பு நடப்பதற்கு முன்பும் பின்பும் அழைத்திருக்கிறார்கள். இந்த அழைப்பு எம்.ஐ.டி.சி (அவ்ரங்காபாத்) பகுதியிலுள்ள வாலஞ்ச் என்ற இடத்திலிருந்து வந்தது என்று ஒரு நபரையும் பிடித்தனர். அந்நபர்

தனக்கு கண்தெரியாத ஒரு சகோதரர் இருப்பதாகவும் அவருக்கு அடிக்கடி யாருக்கேனும் போன் செய்யும் பழக்கம் இருப்பதாகவும் தெரிவித்தார். உடனே போலீஸ் அந்த கண்தெரியாத நபரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த இரண்டு போன் சம்பவங்களுக்கும் ஷெல்கே மற்றும் நிர்மாலிக்கும் உள்ள தொடர்பு அப்பட்டமாக தெரிந்தும் தீவிரவாத தடுப்பு குழுவினர் (ஏடிஎஸ்) ஒரு போதைக்காரனையும், குருடரையும் குற்றவாளிகளாக்கியது ஆச்சர்யத்திற்குள்ளாக்கியது.

உண்மையான குற்றவாளிகளை வேண்டுமென்றே தப்பவைத்து விட்டது. குண்டு வைத்த குற்றவாளிகள் பயங்கரவாதிகளா? அல்லது அவர்களை தப்பவைக்க திட்டமிட்ட தீவிரவாத தடுப்பு குழுவினர் (ஏடிஎஸ்) பயங்கரவாதிகளா? என்ற கேள்வி இங்கு எழ வைக்கின்றது.

வழக்கம்போல மராட்டிய தீவிரவாத தடுப்பு குழுவினர் (ஏடிஎஸ்) பட்கல் என்று அழைக்கப் படக்கூடிய யாஸின் பட்கல், ரியாஸ் பட்கல் உட்பட 11 முஸ்லிம்களை கைது செய்து முதல் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்தது. வாசிம் என்பவனை தேடப்படும் குற்றவாளியாக அறிவித்தது.

டெல்லி சிறப்பு காவல்துறை ஜும்மா மசூதியைச் சேர்ந்த ஆஜாஸ் ஷேக் என்ற முஸ்லிமை 2010 டெல்லி குண்டுவெடிப்பு வழக்கில் சேர்த்தது. இந்த ஆஜாஸ் ஷேக்தான் வாசிம் என்று தீவிரவாத தடுப்பு குழு (ஏடிஎஸ்)ஜாவேரி பஜார் குண்டு வெடிப்பு வழக்கிலும் சேர்த்தது. 2015 பிப்ரவரியில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் 2018ஆம் ஆண்டு வரை வாசிம்தான் ஆஜாஸ் ஷேக் என்பதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படாததால் குற்றம் நிரூபிக்கப்படவில்லை. எனவே, தன்னை இந்த வழக்கில் இருந்து விடுவிக்கும்படி ஆஜாஸ் ஷேக் 2018 செப்டம்பரில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். (ஆதாரம் : புனே மிர்ரர் டைம்ஸ் ஆஃப் இந்தியா குரூப்), 27 செப்டம்பர்,2018)

### புனே ஜனகலி மகாராஜ் ரோடு தொடர் குண்டுவெடிப்பு 2012

2012ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1ஆம் தேதி புனே ஜனகலி மகாராஜ் ரோட்டில் தொடர் குண்டுவெடிப்பு நடந்தது. பல்கந்தா ராவ் சவுக் என்ற இடத்தில் தயானந்த் பாவ்ராவ் பாட்டீல் (34) என்பவன் பையில் குண்டுகளை எடுத்து வந்தபோது வெடித்ததில் காயமடைந்தான். இவன் கர்நாடகா பீடாரைச் சேர்ந்தவன்.2009 ஆம் ஆண்டு புனே வந்த இவன் புனேயிலிருந்து 20 கிலோமீட்டர் தள்ளியுள்ள ஊரலிகாஞ்சன் என்ற இடத்தில் தங்கியிருந்தான். புனே இந்து அடிப்படைவாத அமைப்பான படிட் பவான் சங்கட்னாவின் முன்னாள் தலைவன் சிவாஜி சவானின் கடையில் வேலை செய்து வந்தான். (புனே மிர்ரர், 3 ஆகஸ்ட், 2012)

தொடரும்...




இந்த புத்தகம் இரண்டு முக்கியமான விஷயங்கள் நம் ஜனநாயகத்திற்கு மிக மோசமான அச்சுறுத்தல்களாக இருப்பதை பற்றி பட்டயங்கூறுகிறது. ஒன்று ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையின் வானளாவிய அதிகாரம் மற்றொன்று ஐ.பி என்ற மத்திய உளவுத்துறைக்கும் தவறான அழிவுக் கொள்கைகளைக் கொண்ட வலது சாரி தீவிரவாத குழுக்களுக்கும் இடையிலான சாத்தானிய உறவு. இவை இரண்டும் தான் இப்புத்தகத்தின் முக்கிய நோக்கம்.

~~₹220~~ ₹150 தள்ளுபடி விலையில்!



# இப்படியும் ஒரு மன்னரா.....!

கி.பி 1530இல் ஆப்கானிஸ்தானையும் இந்தியாவின் சில பகுதிகளையும் ஆண்டு கொண்டிருந்தார் ஒரு மன்னர் .வரலாற்றில் இவரைப் போல நீதத்தை கடைபிடித்த ஒரு மன்னரை பார்ப்பது அரிது.

அவர்தான் மன்னர் ஷேர் கான்.மன்னர் ஷேர்கானது படை ஒன்று அவரது நாட்டின் எல்லையில் உள்ள மலைக்கு மேல் போர் திட்டங்களை வகுப்பதற்கு முகாம் இட வேண்டியத் தேவை ஏற்பட்டது.ஆனால் அந்த மலையின் மீது தான் ஒரு சிறிய கூரையின் கீழ் ஓர் ஏழை குடும்பம் வாழ்ந்து கொண்டிருந்தது.

ஆனால் படைக்கோ, போர் திட்டங்களை வகுப்பதற்கு அந்த இடம் ஏற்ற இடமாக தென்பட்டது. எனவே அந்தக் கூரையை நீக்குவதற்கு தயாரானது படை, கூரையை நீக்கிவும் செய்தது.

அந்த ஏழைக் குடும்பமும் வேறுவழியின்றி இடமாறியது குடிசையை அகற்றிய பின்னர், அந்த குடும்பம் மலையிலிருந்து தட்டையான சமவெளியில் குடியேறியது, மலை உச்சியில் வாழ்ந்து பழகிய அந்த ஏழைக்கு மலையின் சமவெளியில் வாழ்வது மிகுந்த சிரமமாய் இருந்தது

எனவே மன்னர் ஷேர் கானிடம் சென்று இராணுவம் அகற்றிய தனது வீட்டைப் பற்றி புகார் அளிக்கச் சென்றார்.அரண்மனைக்குச் சென்று மன்னர் எங்கே என வினவினார்.

மன்னர் சிறுவர்களோடு விளையாடிக் கொண்டிருக்கிறார் என பதில் வந்தது.தனது சாதாரண கோலத்தை நிதானித்து கேலி செய்கிறார்கள் போல என விளங்கிக் கொண்டார்.எனவே மீண்டும் மற்றொரு நபரிடம் கேட்டார்.அதே பதில் வந்தது.பின்னர் சிறுவர்களோடு மன்னர் விளையாடிக் கொண்டிருந்த மைதானத்திற்குச் சென்றார். அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் அனைவரும் உயர்தரமான ஆடையை அணிந்திருந்தார்கள். மன்னர் அந்த சிறுவர்களோடு விளையாடுவதையும் கண்டார்.அந்த சிறுவர்கள் யாரென வினவினார் அவர்களெல்லாம் அனாதை முஸ்லிம் குழந்தைகள் என்று பதில் வந்தது ஆனால் அவர்களது உடையைப் பார்த்தால் அவ்வாறு தெரியவில்லையே என்றார்.

இந்த பிரதேசத்தில் வாழும் அனாதை பிள்ளைகள் சாதாரண பிள்ளைகளை விட உயர்தரமான ஆடையை அணிய வேண்டும் என்பது மன்னர் ஷேர்கானது உத்தரவு.

கேட்டதும் மகிழ்ச்சியுற்ற அந்த வறியவர் இந்த நீதிமானிடம் தனக்கு நிச்சயம் தீர்வு கிடைக்கும் என நம்பினார்.

விளையாடி முடித்து வந்த மன்னரிடம் அதிகாரி விரைந்து தங்களைப் பார்க்க ஒரு மனிதர் சிறிது நேரமாகவே

காத்துக்கொண்டிருக்கிறார் என்றவுடன் ஏன் அவர் வந்ததுமே என்னை அழைத்திருக்கலாமே வந்தவர் ஏதேனும் சிரமத்தின் காரணமாக வந்திருந்தால்... என்றுக் கூறி அதிகாரியைக் கடிந்தார் மன்னர்.சரி பேசி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை என்று கூறி வறியவர் காத்திருந்த இடத்திற்கு மன்னரே சென்றார்.

அந்த வறியவருக்கு முன் அடக்கமாக நின்று நான் உங்களது பணியாளன் ஷேர் கான் உங்களுக்கு ஏதேனும் அநீதி இழைக்கப்பட்டு விட்டதா இப்பொழுதேக் கூறுங்கள் என மன்னர் வினவ வறியவர் பேசத் துவங்கினார் நாவுத் தடுமாறியது.எந்த தயக்கமும் வேண்டாம் கூறுங்கள் தங்களது பிரச்சினையை என்றார்.

ஒருக்கால் உங்களது உரிமையை நான் பறித்திருந்தால் அதற்கு என்னை நீங்கள் பழி வாங்குவதற்கு முழு உரிமையும் உண்டு என்றார்.

நடந்ததைக் கூறினார் வறியவர்.

அல்லாஹ்வின் நல்லடியாரே உங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு வெகுசீக்கிரம் தீர்வு கிடைக்கச் செய்வது என் பொறுப்பு உங்களது பறிக்கப்பட்ட உரிமை உங்களைத் தேடிவரும் கவலைப்படாதீர்கள்.

பிறகு மன்னர் ஷேர் கான் அந்த வீட்டை தகர்த்த படைத் தளபதிக்கு தக்க தண்டனையைக் கொடுத்து இராணுவ முகாமை அகற்றக் கூறி ஒரு அற்புதமான வீடு அந்த வறியவருக்கு கட்டித் தரப்படவேண்டும் என கட்டளைப் பிறப்பித்தார்.வந்ந வறியவர் மனநிறைவோடு மன்னருக்கு நன்றிச் செலுத்தினார்.அப்பொழுது மன்னர் கூறினார் எனக்கு நன்றி செலுத்தாதீர்கள் உங்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட உரிமையை மீண்டும் உங்களிடமே சேர்த்தியிருக்கிறேன்.

இந்தச் செல்வங்கள் அனைத்தும் என்னுடையதோ எனது தந்தையுடையதோ அல்ல மாறாக அல்லாஹ்வுடையது அதனை ஏழை எளிய மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கு அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டுமே நாங்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக

மறுமையில் ஒரு ஏழைக்கு இழைத்த அநீதி எனக்கும் என் இறைவனுக்கும் மத்தியில் திரையாக உருவாவதை விட எதிரியிடம் தோற்று கைதியாக சரணடைந்து வேட்டை விலங்குகளுக்கு இரையாவது சிறந்தது...........

அரபி மூலம்:தாரிகுல் இஸ்லாம் ஃபில் ஹிந்து

**தமிழில்:**

**மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**





# CRUSADE 2.0 BY JOHN FEFFER

**The west Resurgent War on Islam**

# சிலுவைப் போர் 2.0

**மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்**




இன்றைய நாள்களில் மேலைநாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095ல் தொடங்கி 1274ல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது.

சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991ல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.



இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

# ஹபீப் போர்கிபாவின் சதி



மாணவர்கள், இளைஞர்கள், பாட்டாளி வர்க்கத்தினர், பெண்கள், பொதுமக்கள் என்று துனீஸியாவே, இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்ட இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தின் பின்னால் அணிவகுத்து நின்றது. துனீஸியாவில் சகல போகங்களோடும் ஆட்சி நடத்தி வந்த ஹபீப் போர்கிபா தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும் அல்லது தனது பரிவாரத்தோடு ஆட்சி பீடத்தைக் காலிசெய்திட வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டது. இதைத்தவிர இன்னொரு மாற்றுவழி இல்லை என்ற நிலை உருவானது.

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்கள் சிறையிலே பட்ட சித்ரவதைகள், அந்தச் சித்திரவதைகளை இன்முகத்தோடு எதிர்கொண்ட விதம், இவையெல்லாம் அவர்கள் இந்த உலகில் இஸ்லாத்திற்காகவே வாழும் உண்மையான இஸ்லாமியவாதிகள் என்பதைக் எடுத்துக்காட்டின. இனியும் இவர்களை உயிரோடு விட்டுவைத்தால் நமது ஏகபோக,சுகபோக வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்துவிடும் என்பதை மிகத் தெளிவாகவே உணர்ந்தார் ஆட்சியாளர் ஹபீப் போர்கிபா.

ஆகவே இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களைப் பூண்டோடு ஒழித்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தார்.

மக்களின் இதயத்திலே இடம் பெற்றுவிட்ட ஓர் இஸ்லாமிய திருக்கூட்டத்தை அழித்துவிடுவது என்பது அத்தனைச் சுலபமான பணியல்ல. இதற்கு உரியதொரு உபாயம் தேடியலைந்தார் ஹபீப் போர்கிபா.

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களைக் கொலை செய்வதாக இருந்தால் அது நியாயப்படுத்தப்பட்ட ஒரு கொலையாகத்தான் இருந்திட வேண்டும் என முடிவு கட்டினார். அவர்களின் மொழியில் சொல்வதானால் அது ஒரு நீதிமன்றக் கொலை (Judicial Murder) ஆகத்தான் இருக்க வேண்டும்.

இல்லையேல் பின்னாலே பெருகி வரும் மக்கள் பிரளயத்தை அடக்கிட முடியாது. ஆகவே இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களை எப்படிக் காரணம் கற்பித்துக் கொலைசெய்வது என்பதற்கான திட்டத்தை, தன்னுடைய மேலை நாட்டு எஜமானர்களோடு அமர்ந்து தயாரித்தார் ஹபீப் போர்கிபா.

இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்ட அந்தக் கொள்கைத் தங்கங்களைக் கழுவேற்றும் பொறுப்பை, ஜெய்னுல் ஆப்தீன்பென் அலீ ஏற்றுக்கொண்டார். இவர் அக்டோபர் 1987 வரை துனீஸியாவின் பாதுகாப்பு அமைச்சராகவும், உள்துறை அமைச்சராகவும் இருந்தவர். 1987, அக்டோபர் 2ம் நாள் துனீஸியாவின் பிரதம அமைச்சராக ஹபீப் போர்கிபாவால் நியமிக்கப்பட்டார்.

பிரதம அமைச்சர் ஜெய்னுல் ஆப்தீன் அமெரிக்காவின் அடிவருடி. அமெரிக்காவிலேயே இராணுவப் பயிற்சி முதல் அனைத்துப் பயிற்சியையும் பெற்றவர்.

எங்கே தங்களுடைய உல்லாச வாழ்வு ஒரு முடிவுக்கு வந்துவிடுமோ என அஞ்சிய இவர்கள் இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களை வன்முறையாளர்கள் எனப் பிரச்சாரம் செய்யத்

தலைப்பட்டனர். அத்தோடு இவர்களை ஈரானின் கைக்கூலிகள் என்றொரு வதந்தியை எந்த முகாந்தரமுமின்றி நாடு முழுவதும் பரவச் செய்தார்கள்.

துனீஸியாவிலுள்ள வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் எல்லாவற்றையும் முடுக்கிவிட்டு இந்தப் பிரச்சாரத்தை முழுவேகத்தில் செய்தனர்.

இந்தப் பிரச்சாரம் ஏறத்தாழ ஆறுமாத காலம் அங்கிங்கெனாதபடி எங்கும் ஒலித்துக்கொண்டே இருந்தது. இந்தப் பிரச்சாரத்தின் அடிப்படையில் இஸ்லாமியவாதிகளைக் கொலை செய்யும் ஏற்பாடுகள் ஆரம்பமானது.

1987ம் ஆண்டு ஆகஸ்டு மாதம், ஆட்சியாளர்களுக்குத் தங்கள் திட்டத்தை நிறைவேற்றிட அழகியதொரு வாய்ப்பும் கிடைத்தது.

1987ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் இரண்டாம் நாள், துனீஸியாவில் சில உல்லாச விடுதிகளில் சில வெடிகுண்டுகள் வெடித்தன. இந்த வெடிகுண்டுகள் உல்லாச விடுதிகளைத் தகர்த்துத் தரைமட்டமாகின.

இந்த வெடிகுண்டு சம்பவத்திற்கான பொறுப்பை அப்படியே இஸ்லாமிய இயக்கத்தவர்கள் மீது போட்டனர் ஆட்சியாளர்கள்.

தொலைக்காட்சி ,வானொலி, பத்திரிகை அனைத்தும் உல்லாச விடுதிகளை இஸ்லாமிய இயக்கத்தவர்களே தகர்த்தனர் என மூச்சுவிடாமல் பிரகடனம் செய்தன.

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களின் ஒழுக்க சீலங்களை நன்றாய் அறிந்திருந்த ஓரிரு பத்திரிகைகள் "இது அபாண்டம்" என தங்கள் அதிருப்தியை வெளியிட்டன. உடனே இந்தப் பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டன.

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்கள் வன்முறையாளர்கள் என்ற அடிப்படையில் நடைபெற்ற பிரச்சாரத்தின் அடிப்படையில் எழுச்சி இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். சிறைச்சாலைகளில் கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இருந்தால் குற்றம், நின்றால் குற்றம், வலித்தால் குற்றம், பசித்தால் குற்றம் என்ற அடிப்படையில் அந்தக் கொள்கைக் கோமேதகங்கள் குற்றம் சுமத்தப்பட்டு, கொட்டடிகளில் சித்திரவதைச் செய்யப்பட்டனர்.

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்கள் தங்கள் இயக்கத்தை ஆரம்பித்த அன்று முதலே தங்களுக்கும் வன்முறைக்கும் எந்தத் தொடர்புமில்லை. வன்முறை எங்கள் வழியுமல்ல என்று அழுத்தந்திருத்தமாகச் சுட்டிக்காட்டி வருகின்றனர். இவர்கள் கொண்ட கொள்கையில் மலைகுலைந்தாலும், நிலைகுலையாமல் நின்றவர்கள். இவர்களின் கொள்கைப் பிடிப்பை, நேர்மையை, கட்டுப்பாட்டை மக்கள் நன்றாக அறிவார்கள்.

ஆகவே இந்த இயக்கத்தவர்கள் மீது ஆட்சியாளர்கள் இட்டுக்கட்டிய பழிகளை மக்கள் நம்பிடத் தயாராக இல்லை. இந்த அபாண்டத்தின் அடிப்படையில் இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்கள் கைது செய்யப்படுவதையும், சித்திரவதை செய்யப்படுவதையும் மக்கள் விரும்பவில்லை. எதிர்த்துக் குரல் கொடுத்தனர்.

ஆனாலும் எழுச்சி இயக்கத்தவர்களை கைதுசெய்து சித்ரவதைச் செய்யும் படலம் தொடரவே செய்தது.

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்கள் வீண்பழிக்குள்ளாக்கப்படுவதையும் அடிப்படையில் அவர்கள் சிறைபிடிக்கப்பட்டு சித்ரவதைச் செய்யப்படுவதையும் கண்டு மனம் பொறுக்காமல் துனீஸியாவில் இயங்கிக்கொண்டிருந்த பிறிதொரு அமைப்பான இஸ்லாமிய ஜிஹாத் இயக்கம் உல்லாச விடுதிகளைத் தகர்த்தது நாங்கள்தான் என அறிக்கை விட்டது.

இஸ்லாமிய ஜிஹாத் இயக்கமும், ஹபீப் போர்கிபாவின் ஆடம்பர வாழ்க்கை, இஸ்லாமிய எதிர்ப்புப் போக்கு ஆகியவற்றை வன்மையாகக் கண்டித்து வந்தது.

இந்த உல்லாச விடுதிகள் உடைக்கப்பட்டபோது ஹபீப் போர்கிபா தன்னுடைய 84 வது பிறந்தநாளை வெகு ஆடம்பரமாகக் கொண்டாடிக் கொண்டிருந்தார். விழா என்ற பெயரில் துனீஸிய மக்களின் பணம் தண்ணீராய் தாரை வார்க்கப்பட்டுக் கொண்டிருந்தது.

ஆனால் அதேசமயம், ஒருவேளை சோறின்றி ஒரு பெரும் கூட்டம் மரணத்தோடு போராடிக் கொண்டிருந்தது.

வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சில உல்லாச விடுதிகள் ஹபீப் போர்கிபாவின் சொந்த ஊரான "மொனஸ்டிரி" என்னும் இடத்தில் இருந்தவை. இந்த உல்லாச விடுதிகள் மேலை நாட்டுப் பாணியில் எல்லா சல்லாபங்களையும் சப்ளை செய்து கொண்டிருந்தன.

இவற்றையெல்லாம் கண்டிக்கும் முகமாகத்தான் நாங்கள் உல்லாச விடுதிகளைத் தகர்த்தோம் என அறிக்கைவிட்டனர் இஸ்லாமிய ஜிஹாத் இயக்கத்தைச் சார்ந்தவர்கள்.

ஒருபுறம் இஸ்லாமிய ஜிஹாத் இயக்கத்தவர்கள் நாங்கள் தான் உல்லாச விடுதிகளைத் தகர்த்தோம் என அறிக்கை விடுகின்றனர். இன்னொருபுறம்

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்கள் எங்களுக்கும், வன்முறைக்கும், குறிப்பாக இந்த உல்லாச விடுதி தகர்ப்பிற்கும் எந்தத் தொடர்புமில்லை என அறிக்கை விட்டுக்கொண்டே இருந்தனர்.

எனினும் இஸ்லாமிய ஜிஹாத் இயக்கத்தவர்களை கைது செய்யாமல் இஸ்லாமிய எழுச்சி இயக்கத்த வர்களை சிறை பிடித்துக் கொடுமைப்படுத்தி வந்தார் ஹபீப் போர்கிபா.

**ஏன்?**

இதற்கான காரணத்தை ஆங்கில ஏடு ஒன்று இப்படிச் சுட்டிக்காட்டுகின்றது :

"The Tunisian rulers do know that the ITM was not involved in the bomb attacks and they also know that this Islamic Movement has not been acting on Tehran's orders. However they have come to realise that continued survival of their regime depend on crushing the Islamic Trend. "

அதாவது,

"வெடிகுண்டு தாக்குதல்களில் இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களுக்கு எந்த வகையிலும் சம்பந்தமில்லை என்பதை துனீஸிய ஆட்சியாளர்கள் நன்றாகவே அறிவார்கள். அதேபோல் இந்த இயக்கத்தவர்கள் ஈரானின் ஏவுதலின் படியும் செயல்படவில்லை என்பதையும் ஆட்சியாளர்கள் நன்றாகவே அறிவார்கள். தங்களுடைய ஆட்சி தொடர்ந்திட வேண்டுமானால் இந்த இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தை நசுக்கியே ஆகவேண்டும் என்பதே அவர்களின் முடிவு."

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களை அழிக்காவிட்டால் தாங்கள் ஆட்சியில் நீடிக்க முடியாது என்பதுதான் அவர்கள் மீது வெடிகுண்டு அபாண்டத்தைச் சுமத்தியதற்கான காரணம்.

இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களை வேண்டும் மட்டும் சித்திரவதைச் செய்துமுடித்த பின்னர் நீதி விசாரணை என்ற ஓரங்க நாடகம் அரங்கேற்றப்பட்டது.

விசாரணையின் நோக்கம் (Judicial Murder of Islamists) இஸ்லாமிய இயக்கத்தவர்களை நீதிமன்றத் தீர்ப்பு என்ற போர்வையில் கொலை செய்வதேயாகும்.

## உங்கள் இல்லம் தேடி இஸ்லாம்
## 28/12/2021





அன்பகம் மதரஸா தாஃவா குழு சார்பாக 28/12/2021 அன்றுதஞ்சை மாவட்டம், முதலைமேடு, ஆச்சாள்புரம், செங்கமேடு ஆகிய இடங்களில் தாஃவா பணிகள் நடைபெற்றது. இதில் பல மக்கள் ஆர்வமுடன் இஸ்லாத்தைத் தெரிந்து கொண்டனர்.







மருத்துவம்

# குளிர் காலத்தில் இதய நோயாளிகள் கவனத்திற்கு...!

இதய நோயாளிகள் குளிர் காலத்தில் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள் இன்னும் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். ஏன்?

இதயத்தின் ரத்த நாளங்களில் - குறிப்பாக இதயத்துக்கு ரத்த ஓட்டமளிக்கும் தமனிகளில் அடைப்பு ஏற்பட்டு, அதனால் இதயத்துக்குச் செல்லும் ரத்த ஓட்டத்தில் குறைபாடு இருப்பவர்களை - அதாவது, இதய நாள இரத்த ஓட்டக் குறைபாட்டு நோய் இருப்பவர்கள் என்று கருதுகிறோம். இத்தகையோர் எழுந்து நடந்தாலும் மூச்சு வாங்கும், கொஞ்சம் ஓடினாலும் நெஞ்சுப்பகுதியில் கனமாக இருக்கும் மற்றும் வலி தோன்றும். இரண்டு கால்களின் கணுக்கால் பகுதிக்குக் கீழ் நீர் சுரந்து கொண்டு வீக்கம் இருக்கும். இத்தகைய அறிகுறிகள் தென்படுமாயின், அது இதய நோயின் அறிகுறிகள் என்று உடனேயே உணர்ந்து இதய நோய் சிறப்பு மருத்துவரிடம் சென்று முறையான சிகிச்சை எடுக்க வேண்டும்.

குறிப்பாக 60க்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு இதய ரத்த நாளங்களில் அடைப்பு மற்றும் ரத்த ஓட்டக் குறைபாடு இனம் காணப்படாமல் அமைதியாக ஒளிந்திருக்கும். முதியவர்கள் பொதுவாக தங்களது நடமாட்டத்தை சுருக்கிக் கொள்வதால் வெளியே தெரியாமல் இருக்கும்.

இத்தகையோர் குளிர்காலங்களில் அதிலும் அதிகாலைப் பொழுதில் வெளியே நடமாடினால்( வாக்கிங் செல்வது, வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வது, வழிபாட்டுக்கு முன்பு குளிர்ந்த நீரில் குளிப்பது அதிலும் குளிரான நீர் நிலைகளில் இறங்கிக் குளிப்பது) போன்ற காரியங்களில் அதிகம் ஈடுபடுவதைக் காணமுடிகின்றது.

குளிர்காலத்தில் தான் அதிகமான மக்கள் மாரடைப்புக்கு உள்ளாகின்றனர். மாரடைப்பு சார்ந்த மரணங்களும் குளிர் காலத்தில்தான் அதிகமாக பதிவாகின்றன. இதனுடன் சேர்த்து முதியோர்களுக்கு மூளை இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்பட்டு ஸ்ட்ரோக் எனும் பக்கவாதம் ஏற்படும் வாய்ப்பும் அதிகமாகிறது. இதற்கு என்ன காரணம்?



இதய ரத்த நாள அடைப்பு அல்லது குருதி ஓட்டக் குறைபாடு உள்ள ஒருவர் குளிர்ச்சி மிகுந்த காற்று அல்லது நீரில் தன்னை வெளிப்படுத்தும்போது உடல் குளிர்ச்சி அடைகிறது. இத்தகைய குளிர்ச்சி நிலையை நமது உடல் விரும்புவதில்லை. அதனால் உடலை சூடுபடுத்த உடலின் பாகங்கள் முழுவதும் - குறிப்பாக தசைகளுக்கு ரத்தம் பாய்ச்சப்படுகிறது. இதற்காக இதயம் கூடுதலாக பணிபுரிந்து துடிக்க வேண்டியிருக்கிறது. இதயத்தின் துடிப்பு விசை மற்றும் வேகம் இரண்டும் ஒருசேரக் கூடுகிறது.

ஏற்கனவே பழுதடைந்த இதயத்தை அதிக பணிசெய்யக் கட்டாயப்படுத்தும்போது பளுவை ஏற்க முடியாமல் துடிப்பை நிறுத்திவிடுகிறது அல்லது தாறுமாறாகத் துடிக்கிறது. இத்தகைய நிலையில் இதயம் திடீரென்று செயலிழக்கலாம். அல்லது இதய ரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படலாம். அல்லது மூளையின் ரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படலாம் அல்லது இதயம் தறிக்கெட்டுத் துடிக்கலாம்.

இறுதியில் முறையான அவசியமான அவசர சிகிச்சை கிடைக்காவிடில் மரணம் ஏற்படலாம்.

முதியோர்களுக்கும், இதய நோய்/ இதய ரத்த நாள அடைப்பு நோய்/ இதய ரத்த நாள ரத்த ஓட்டத்தில் குறைபாடு இருப்பவர்களுக்கும் பொதுவான பணிவான அறிவுரை இது....

குளிர்காலத்தில் வெதுவெதுப்பான சூழ்நிலையில் இருக்கும் வீடுகளை விட்டு வெளியே வராதீர்கள்.

அதிகாலை வெளியே செல்வதைப் பற்றி நன்கு சிந்தித்து முடிவெடுங்கள்.

குளிர்ச்சியான நீரில் குளிப்பதைக் காட்டிலும் வெதுவெதுப்பான நீரில் குளிப்பது சிறந்தது.

நீர்நிலைகளில் குளிப்பதைத் தவிர்க்கவும்.

குளிர்காலத்தில் வெதுவெதுப்பான பானங்களை பருகுவதில் நாட்டம் கொள்ளுங்கள்.


வெதுவெதுப்பாக உணரவைக்கும் உடைகளை அணியுங்கள்.

பரிந்துரைக்கப்பட்ட மாத்திரை மருந்துகளை தவறாமல் உட்கொள்ளுங்கள். மருத்துவரிடம் முறையான மறுசந்திப்புகளை வைத்துக் கொள்ளுங்கள்.

இதய நோயின் அறிகுறிகள் ஏற்பட்டால் உடனே அவசர சிகிச்சைப் பிரிவு உள்ள மருத்துவமனைக்கு விரைந்து செல்லுங்கள். புறநோயாளிகள் பிரிவிற்குச் சென்று காத்திருந்து பொன்னான நேரத்தை வீணடிக்காதீர்கள்.

- பாக்டர் அப்துல் அஜீஸ்

*மீரான் மருத்துவமனை, தென்காசி.*




Price: 50/-
[88 Pages]

8072773868

Vergal Pathippagam
8148129887

Author: M.Ghulam Mohamed

வேர்கள் பதிப்பகம்

கஷ்மீரின் பாதி விதவைகள்

பிப்ரவரி 23, 1991

டெல்லியில் ஒரு பெண்
கற்பழிக்கப்பட்டபோது.
இந்தியா முழுவதும் 15
நாள்கள் மெழுகுவர்த்தியைக்
கொளுத்தினார்கள். ஆனால்
ஒட்டுமொத்த கிராமமும்
கற்பழிக்கப்பட்ட போது எதுவுமில்லை.
எங்கே நமக்கு நியாயம் கிடைத்தது?




தொகுப்பு: மு.குலாம் முஹம்மது

விலை: 70/-

கொரியர் கட்டணம் தனி
140 Pages

For Order: 8148129887
8072773868

தலையங்கம்

# பலப்படுத்திக்கொள்ளுங்கள்

நாம் நேசிக்கின்ற நமக்கு சொந்தமான இந்திய நாட்டைவிட்டு, நம்மை வெளியேற்ற வேண்டும் அல்லது இந்நாட்டில் நம்மை இல்லாமல் ஆக்க வேண்டும் என ஒரு சிறு கூட்டம், பாசிச வெறிபிடித்த கூட்டம் பல ஆண்டுகளாக கடினமாக உழைத்துக்கொண்டே இருக்கிறது. அவர்கள் படிப்படியாக முன்னேறிக்கொண்டே இருக்கிறார்கள். எந்தளவுக்கு என்றால் இன்று வெளிப்படையாகவே எல்லா மீடியாக்களுக்கும் தெரியும் அளவில் பேட்டி அளிக்கின்றார்கள்.

இந்து ராஷ்டிராவை உருவாக்குவதற்கு நாம் நம்மை தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும். நம் உயிரைக் கொடுப்பதற்கும் தேவைப்பட்டால் இம்முயற்சியில் குறுக்கே வரும் எவராக இருந்தாலும் சரி, அது சிறுபான்மையினராக இருந்தாலும் சரி அல்லது நம் இனம், மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி அவர்களின் உயிரை எடுப்பதற்கும் தயாராக இருக்க வேண்டும் என உறுதி மொழி எடுத்துக் கொள்கிறார்கள்.

இதனை அரசாங்கம் வேடிக்கைப் பார்த்துக்கொண்டே இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அரசாங்கம் அவர்களுக்கு எல்லாவிதத்திலும் உறுதுணையாக இருக்கிறது. சிறுபான்மையினரின் உயிர் என்பது இவர்களுக்கு அற்பமாகிவிட்டது. ஒரு மாட்டின் இறைச்சித்துண்டே போதும் சிறுபான்மையினரின் உயிரை எடுப்பதற்கு. பல இடங்களிலும் அற்பக்காரணங்கள் கூறி பல கலவரங்களை நடத்திக் கொண்டே இருக்கிறார்கள். ஒன்றல்ல இரண்டல்ல இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான கலவரங்கள் நமக்கெதிராக நடத்தப்பட்டுள்ளது. இதில் பல்லாயிரம் உயிர்கள்,

மானங்கள், செல்வங்கள் அழிக்கப் பட்டுள்ளன. நமக்கெதிராக இவ்வளவு நடந்தும் இதற்கெதிராக செயல்பட வேண்டிய சமூகம் சரியான செயல்திட்டங்கள், அதற்கான முயற்சிகள் எதுவும் இல்லாமல் நாளுக்கு நாள் பின்னோக்கி நகர்கிறது. எதிரிகள் பற்றிய அறிவு இல்லாமலும், தம் நிலைகளை மாற்றிக் கொள்ளாமலும் அழிந்துபோன முஸ்லிம்களின் வரலாறு நமக்கு படிப்பினையாக உள்ளது. ஸ்பெயினில் முஸ்லிம்களின் ஆட்சி 780 ஆண்டுகள் அந்த மண்ணில் நீதி மிக்கதொரு ஆட்சியாக நிலைத்திருந்தது. 780 ஆண்டுகள் ஆட்சி செலுத்திய மண்ணில், ஆட்சி செலுத்திய மார்க்கத்தைச் சார்ந்த ஒருவரும் இல்லை. நீண்டகாலத் திட்டத்தை தீட்டி அதன் வழியில் அந்தச் சதி கும்பல் செயல்பட்டது.

தன் திட்டத்தை துல்லியமாக நிறைவேற்றியது. ஸ்பெயினில் முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிக்கத் தீட்டப்பட்ட நீண்டகாலத் திட்டத்தைப் போன்றதொரு திட்டம் இந்தியாவிலும் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட ஸ்பெயினை விட அதிகமான துல்லியமும் துரிதமும் கடைபிடிக்கின்றன.

எதிரிகளின் சதித்திட்டங்களை முறியடிக்க முஸ்லிம்கள் முன்வரவில்லை என்றால் அன்றைய ஸ்பெயினைப்போல இந்தியாவும் ஆகிவிடும் (அதிகமான விபரங்களுக்குப் படிக்கவும் முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிக்கத் திட்டம். ஆசிரியர் வி.டி.இராஜசேகர், வேர்கள் பதிப்பகம்.)

*மனிதனுக்கு முன்னாலும், பின்னாலும் தொடர்ந்து வரக்கூடிய (மலக்குகள்) இருக்கிறார்கள். அல்லாஹ்வின் கட்டளையால் அவர்கள் அவனைப் பாதுகாக்கிறார்கள்; எந்த ஒரு சமூதாயத்தவரும், தம் நிலையயைத் தாமே மாற்றிக் கொள்ளாத வரையில், அல்லாஹ் அவர்களை நிச்சயமாக மாற்றுவதில்லை; இன்னும் அல்லாஹ் ஒரு சமுதாயத்தாருக்குத் தீவினையை நாடினால், அதைத்தடுப்பவர் எவருமில்லை - அவர்களுக்கு அவனைத்தவிர துணை செய்வோர் எவரும் இல்லை. (அல்குர்ஆன்: 13:11)*

நம்மை காப்பாற்றிக் கொள்ளவும், இந்த பூமியில் நீதியை நிலைநாட்டவும் நம்மை நாமே எல்லா விதத்திலும் பலப்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கின்றோம்.

*அவர் (நிராகரிப்பவர்)களை எதிர்ப்பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும், திறமையான போர்க் குதிரைகளையும் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்; இதனால் நீங்கள் அல்லாஹ்வின் எதிரியையும், உங்களுடைய எதிரியையும் அச்சமடையச் செய்யலாம்; அவர்கள் அல்லாத வேறு சிலரையும் (நீங்கள் அச்சமடையச் செய்யலாம்); அவர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள் - அல்லாஹ் அவர்களை அறிவான்; அல்லாஹ்வுடைய வழியில் நீங்கள் எதைச் செலவு செய்தாலும், (அதற்கான நற்கூலி) உங்களுக்கு பூரணமாகவே வழங்கப்படும்; (அதில்) உங்களுக்கு ஒரு சிறிதும் அநீதம் செய்யப்பட மாட்டாது .(அல்குர்ஆன் : 8:60)*

*முஃமின்களே! பொறுமையுடன் இருங்கள்; (இன்னல்களை) சகித்துக் கொள்ளுங்கள்; (ஒருவரை ஒருவர்) பலப்படுத்திக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்; (இம்மையிலும், மறுமையிலும்) நீங்கள் வெற்றியடைவீர்கள்! (அல்குர்ஆன்: 3:200)*


இஸ்லாமிய நாகரிகம்



**ஆசிரியர்:** முஸ்தபா அல்ஸிபாஈ
**பக்கம்:** 208 பக்கங்கள்
**விலை:** 130/-

நமது கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் எத்துணை கீர்த்திமிக்கது என்பதை இங்கே இயன்ற மட்டும் எடுத்துக் காட்டியுள்ளேன்.

நமது நாகரிகத்தின், பண்பாட்டின் அனைத்து அம்சங்களையும் இங்கே சுட்டிக்காட்டுவது என்பது இயலாத ஒன்றுதான். நான் தொடங்கி வைத்திருக்கின்றேன். நீங்கள் தொடருங்கள்; முடித்தும் வையுங்கள்.

- முஸ்தபா அல்ஸிபாஈ

8072773868

Vergal Pathippagam | 8148129887



## குழந்தை வளர்ப்பு - தொடர்.....

# மனநலம் பேணுவோம்

குழந்தைகளை அளவுக்குமேல் கட்டாயப்படுத்தும் போது அவர்களுக்குள் ஒரு நோய் வளர்ந்து விடுகின்றதாம். இந்தப் புதுவிதமான நோய்க்கு ஆய்வாளர்கள் மன விசாரம் (Anaxity) எனப் பெயர் வைத்திருக்கின்றார்கள். இதனை மன உளைச்சல், மன அழுத்தம் என்றும் கூறலாம்.

இன்றைய சூழலில் சென்னையில் மட்டும் 40 சதவீதம் குழந்தைகள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நோயை முளையிலேயே கிள்ளி எறியவில்லை என்றால் இது குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையை ஏகமாய் பாதிக்கும்.

“நாம் எதுவும் முடியாத, கையாலாகாத ஒரு பிறவி” என்ற தாழ்ந்த மனநிலையை மக்களிடையே ஏற்படுத்துவதும் இதில் ஒன்றாகும். அத்தோடு எதிர்வரும் வாழ்க்கையில் எந்தப் பிரச்சனையைக் கண்டாலும் அதிர்ச்சி, ஆதங்கம் என்றொரு மனநிலை வளர்ந்துவிடுமாம்.

இத்தனைக்கும் காரணம், நாம் அவர்களை அவர்களது சக்திக்குமேல் படி, படி என அழுத்தம் தருவது தான்.

இதில் மிகவும் வேதனையான விஷயம் என்னவெனில், பெற்றோர்கள் தாங்கள் நினைத்ததைப் போலெல்லாம் குழந்தைகள் வளைய வேண்டும் என்று எதிர்பார்ப்பதுதான்.

சுருங்கச்சொன்னால்,பெற்றோர்கள் தங்கள் பேராசைகளையெல்லாம் குழந்தைகள் நிறைவேற்றிட வேண்டும், அதற்கான அறிகுறிகளை அந்தக் குழந்தைகள் சின்ன வயதிலேயே காட்டிட வேண்டுமென எதிர்பார்க்கின்றார்கள்.

இந்த எதிர்பார்ப்புக்கு ஈடுகொடுக்கவில்லை என்றால் அவர்களை திட்டுவதும் வசைபாடுவதும் அதிகரித்துவிடுகிறது.

இதனால் குழந்தைகளின் மனநிலை பாதிக்கப் படுகின்றது. இந்த மனநிலை பாதிப்பால் உடல் நிலையும் பயங்கர பாதிப்புகளுக்கு உள்ளாகிறது. வயிற்றுப்புண் (அல்சர்), மூச்சுத்திணறல், மூட்டு வலி, மூட்டுகளுக்குக் கீழ் கால்கள் மரத்துப்போதல், பீதி வயப்படுதல் அதனால் மாரடைப்பு

போன்ற பயங்கர பாதிப்புகளும் ஏற்படுகின்றன.

இந்த மன உளைச்சலுக்கு ஆளான குழந்தை அடிக்கடி தவறான முடிவுகளை எடுக்கும். காரணம் முடிவெடுப்பதில் அது முழு மனதையும் ஈடுபடுத்த முடியாமல் போவதுதான்.

ஒவ்வொரு முறை தவறான முடிவை எடுக்கும் போதும் அந்தக்குழந்தையின் தன்னம்பிக்கை பாதிக்கப்படும்.

தன்னம்பிக்கை பாதிக்கப்படும்போதெல்லாம் அதன் சுயமரியாதை பாதிக்கப்பட்டதாக அது தன்னை எடுத்துக் கொள்ளும்.

இதனால் அதிகமான மனக்குழப்பங்கள். இப்படி இஃது ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த நிலையில் குழந்தை எப்போதும் கோபப்படும் ; எரிச்சலடையும்.

இன்றைக்கு குழந்தைகள் இந்த நிலைக்கு வந்திட அல்லது இந்த மன விசன நோய்க்கு குழந்தைகள் ஆளாவதற்குக் காரணம் இன்றைய பாடமுறைகள் என எல்லோரும் ஒரே கருத்தாய் ஓங்கிச் சொல்கின்றார்கள்.

இன்னொரு காரணம் பெற்றோர்கள். இவர்கள் குழந்தைகளின் மன விசனத்தை மன உளைச்சலைப் புரிந்து கொள்ளாமல் நடந்துவிடுகின்றார்கள்.

பெற்றோர்கள் தங்களுக்குள்ளால் சண்டை போட்டுக் கொள்பவர்களாகவும் வீட்டை அடிக்கடி போர்க்களமாகவும் ஆக்கிடுபவர்களாக இருந்தால் குழந்தை நேரடியாக இந்தப் பாதிப்புக் குள்ளாகி விதற்பமாக நாம் எதிர்பார்க்காத அளவில் கடினமாக நடந்து கொள்ளும். பெற்றோர்கள் வேலைக்குப் போகும்போது குழந்தை இந்த நோய்க்கு இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படும்.

**இந்த நோயைக் குணப்படுத்த**

குழந்தைகளின் மனமறிந்து நடந்து கொள்ள வேண்டும். திறமைகளுக்கேற்ப அது படிக்கட்டும் வளரட்டும் என விட்டுவிட வேண்டும்.

குழந்தைகளுக்கென நாம் அதிக நேரம் ஒதுக்க வேண்டும்.

“நாம் அவர்களிடம் பேசுவதை நிறுத்திவிட்டு, நாம் அவர்களோடு பேச வேண்டும்.”

(Don't Talk to Them but Talk with Them)

இதன் பொருள், அவர்களுக்கு உத்தரவு போடுவதைப்போல பேசுவதை நிறுத்திவிட்டு, அவர்களை கடிந்துரைப்பதை நிறுத்திவிட்டு அவர்களின் மனநிலையை அறிந்து அவர்களோடு நடந்திட வேண்டும். பழகிட வேண்டும்.

பள்ளிக்கூடங்களில் குழந்தை எத்தகையதொரு சூழலில் இருக்கின்றது என்பதையும் பார்க்க வேண்டும். ஆசிரியர்களும் குழந்தைகளின் முழு சூழ்நிலையை புரிந்துகொண்டு பயிற்றுவிக்க வேண்டும். குழந்தைகளின் முழு சூழ்நிலைகளையும் புரிந்து கொள்ளும் அளவுக்கு அவர்களுக்கு அவகாசம் அளித்திட வேண்டும். இப்போது வழங்கப்படும் (Busy Schedule) அவசர அவசரமாக பாடங்களை முடிக்கும் நெருக்கடியில் அவர்கள் குழந்தைகளின் மன நலனைப் பற்றி எந்தக் கவலையும் கொள்ள முடிவதில்லை.

என் வகுப்பில் எந்தக் குழந்தையும் மன பிரம்மையால் பாதிக்கப்பட்டதில்லை. மன உளைச்சலோடு எந்தக் குழந்தையுமில்லை என்று ஆசிரியர்களால் சொல்ல முடியவேண்டும்.

அதேபோல் எங்களுக்கு ஆயிரம் கவலைகள் உண்டு. ஆனால் எங்கள் குழந்தைகளுக்கு எந்த மனக்கவலையும் இல்லை என்று பெற்றோர்களால் சொல்ல முடிய வேண்டும்.

இருதரப்பாரும் இதைச் செய்யவில்லை என்றேபடுகிறது என்கிறார் “சம்பூர்னா” என்ற குழந்தை மனநல மருத்துவர். ஏனெனில் அவரிடம் மனநிலை பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை பெருளவில் அதிகரித்திருக்கின்றதாம்.

குழந்தைகளின் மனமறிந்து மார்க்கம் காண்போம்.

ஒரு நல்ல எதிர்கால தலைமுறைக்கு அஸ்திவாரமிடுவோம்.

**MGM**

Courtesy : Shoba Menons, Easy in Metro Plus, The Hindu, 21.06.2003



# இந்தியாவில் முஸ்லிம்கள் - 03



Maulana Syed Abul Hasan Ali Nadwi, Chairman of the Board of Trustees

## இந்திய நாகரிக வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்கு

மூலம்:

**அபுல் ஹஸன் அலீ நத்வீ(ரஹ்)**



தமிழில்:

**மௌலவி. நியாசுதீன் புகாரி நத்வீ**

பல்வேறு மருத்துவமனைகள் ஏழைகளுக்கான வீடுகள் பொது பூங்காக்கள், சுற்றுலாதளங்கள் பெரிய நீர் தொட்டிகள் கால்வாய்கள் என அனைத்தும் உருவாக்கப்பட்டது. இந்தியாவில் இது போன்ற வளர்ச்சிப்பணிகளை முஸ்லிம்களுக்கு முன்னால் ஒருவரும் மேற்கொள்ளவில்லை என்பதே வரலாறு. வரலாற்று ஆய்வாளர் அப்துல் ஹை அல் ஹசனி அவர்கள் அல் ஹிந்து ஃபில் அஹ்தில் இஸ்லாமி என்ற தனது புத்தகத்தில் எத்துனை மருத்துவ மனைகள், தொண்டு நிறுவனங்கள் நிறுவப் பட்டன என்றும் எத்துனை வகையான வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்ற பெரிய பட்டியலையே ஹீததுல் ஹிந்து என்ற தலைப்பில் பதிவு செய்கிறார்.

அதேபோல இந்திய துணை கண்டத்தின் கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் வண்ணம் மிகநீண்ட விஸ்தாரமான நெடுஞ்சாலைகளை கட்டமைத்ததும் முஸ்லிம் மன்னர்களே. இவற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது சக்கரவர்த்தி ஷேர்ஷா சூரி அவர்களால் அமைக்கப்பட்ட தெற்கு ஆசியாவின் மிகத் தொன்மையான மற்றும் நீளமான நெடுஞ்சாலையாகும். பல நூற்றாண்டுகளாக இந்தியத் துணைக்கண்டத்தின் கிழக்கு மேற்கு பகுதிகளை இணைத்து வந்துள்ளது. இது கிழக்கே வங்காளத்திலிருந்து இந்தியாவின் வடக்கில் சென்று பாக்கிஸ்தானின் பெஷாவரில் முடிகிறது.இதன் பரப்பளவு 4832 கிலோமீட்டர்.

அந்த சாலைகளில் ஒவ்வொரு மூன்று கிலோமீட்டருக்கும் ஒரு சத்திரம் உருவாக்கப் பட்டது. அந்த சத்திரத்தில் இந்துக்கள், முஸ்லிம் களுக்கு உணவு விடுதிகள் தனித்தனியாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஒவ்வொரு மூன்று கிலோமீட்டருக்கும் ஒரு மஸ்ஜித்

நிறுவப்பட்டது. அந்த பள்ளிவாசல்களுக்கு தனித்தனி இமாம்கள் முஅத்தின்கள் நியமிக்கப்பட்டார்கள். சத்திரங்கள் தபால் நிலையங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு சத்திரத்திலும் இரண்டு குதிரை வீரர்கள் நியமிக்கப்பட்டார்கள் இவர்கள் நீலப்பிலிருந்து வங்காளம் வரைக்கும் செய்திகளை தபால்களை தினந்தோறும் எடுத்துச் செல்வார்கள்.

### சாலைகளின் இருபுறமும் நிழல்களில்

இளைப்பாறுவதற்கும் வழியில் பசித்தால் சுவைப்பதற்கும் நிறைய பழங்கள் கொண்ட மரங்கள் நடப்பட்டன. இவை அனைத்திற்கும் மேலாக முஸ்லிம்கள் இந்தியாவிற்கு சுமந்து வந்தது, சுத்தமும் ஒரு நேர்த்தியான வாழ்க்கை முறையும். உண்பதில், குடிப்பதில், கட்டிட கலைகளில் இந்தியர்களுக்கு முஸ்லிம்கள் அனைத்திலுமே ஒரு நேர்த்தியை கற்றுக் கொடுத்தார்கள்.

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது, இயற்கையான காற்றுவசதியோடு வெளிச்ச வசதியோடு கட்டிடங்களை எழுப்புவது என அனைத்தையும் முஸ்லிம்களே கற்றுக் கொடுத்தனர்.

இன்னும் ஏன் உணவுகளுக்கு பாத்திரங்கள் பயன் படுத்தப்பட வேண்டும் என்பதையும் கூட முஸ்லிம்களே கற்றுக் கொடுத்தனர். ஏனென்றால் பெரிய விருந்துகளில் கூட இலைகளையே உணவு உண்பதற்கு பயன்படுத்தி வந்தனர் (இன்றும் கூட). இவ்வாறு முஸ்லிம்கள் ஏற்படுத்திய தலைகீழ் மாற்றம் சமூகத்தில், இல்லங்களில் பயன்படுத்தக் கூடிய உபகரணங்களிலும் கூட அதன் பாதிப்பு வெளிப்பட்டது.

தனித்துவமிகுந்த கட்டிடக்கலையை இந்தியாவிற்குள் முஸ்லிம்கள் புகுத்தினர். அந்தக் கட்டிடக் கலையானது தோற்றத்தில் வடிவமைப்பில், அழகில், கட்டமைப்பில், நுட்பத்தில், கம்பீரத்தில் சிறந்து விளங்கியது. இந்த கட்டிடக்கலையின் வரிசையில் புகழ்பெற்ற மைல் கல்லாக இன்றும் தாஜ் மஹால் விளங்கிவருகிறது.

முஸ்லிம்களின் பொற்காலத்தை நினைவூட்டுகிறது. எந்தளவிற்கு கட்டிடக்கலையில் முஸ்லிம்கள் நுட்பமான ரசனையை, மெருகேற்றிய வேலைப்பாடை, கலையில் ஒரு புதுமைமையை கொண்டிருந்தார்கள் என்பதை எடுத்துச் சொல்லும் ஆதாரமாக விளங்குகிறது.

முன்னால் பிரதமர் ஜவஹர்லால் நேரு, தி டிஸ்கவரி ஆஃப் இந்தியா என்ற தனது புத்தகத்தில் இந்தியர்களது சிந்தனைகளில் சமூகத்தில் இந்த நாட்டின் கலாச்சாரத்தில் எந்தளவிற்கு முஸ்லிம்களது வருகை ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

இஸ்லாம் மற்றும் வெளியிலிருந்து வேறுபட்ட வழிமுறையும் சிந்தனையும் கொண்ட கணிசமானவர்களின் வருகை, நடப்பில் இருந்த நம்பிக்கைகளையும், கட்டமைப்பையும் பாதித்தன. அதனது அனைத்து தீங்குகளையும் மீறி ஓர் அந்நிய படையெடுப்பிற்கு ஓர் அனுகூலம் இருக்கிறது. அது மக்களின் மன ரீதியான வெளியை அகலமாக்குகிறது. தங்களது கூடுகளிலிருந்து வெளியே பார்க்க நிர்ப்பந்திக்கிறது.

அவர்கள் கற்பனை செய்ததை விட உலகம் மேலதிக பெரிதான, மேலதிக வேறுபட்ட வகைகளைக் கொண்ட இடம் என்று அவர்கள் உணர்கின்றனர்.

எனவே ஆஃப்கான் படையெடுப்பு இந்தியாவை பாதித்து, பல மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆப்கானியர்களைவிட மேலதிக நாகரீகமும், முன்னேறிய வாழ்க்கைமுறையும் கொண்ட முகலாயர்களின் படையெடுப்பு இந்தியாவிற்கு மேலதிக மாற்றங்களைக் கொண்டுவந்தது. குறிப்பாக ஈரான் எதற்காகப் புகழ்பெற்று இருந்ததோ அந்த நேர்த்திகளை அறிமுகப் படுத்தியது.

இதனை ஒப்புக் கொள்ளும் விதமாக விடுதலை போராட்டத் தலைவர்களில் ஒருவரும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னால் தலைவருமான பட்டபாய் சித்த ராமையா அவர்கள் ஜெய்பூரில் நடைப்பெற்ற 55ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நிகழ்த்திய தனது தலைமை உரையில் இவ்வாறு கூறினார்:

நிச்சயமாக முஸ்லிம்களே நமது கலாச்சாரத்தை வளமிகுந்த கலாச்சாரமாகவும், நாட்டு நிர்வாகத்தை சக்தி வாய்ந்த நிர்வாகமாகவும் உருமாற்றினர். (அவர்கள் ஏற்படுத்திய பிரம்மாண்ட சாலைகளின் மூலம்) நாட்டிலிருந்த தொலைவான நகரங்களை மிக அருகாமையில் ஏற்படுத்தியதும் அவர்களே.

### முஸ்லிம்களின் மருத்துவம் சார்ந்த தொண்டுகள்

இந்தியாவை தொடர் படியாக ஆட்சி செய்த முஸ்லிம்களின் மூலம் இந்தியா, வளமான நாகரீக உலகில் ஓர் உயர்ந்த அந்தஸ்தை பெற்றது. அறிவியல் சார்ந்த மருத்துவம் சார்ந்த பல்வேறு பயன்களை இவர்களின் மூலமே இந்திய திருநாடு பெற்றுக்கொண்டது.அதில் உள்ளடங்கியது தான் ஆங்கிலேயேரின் அலோபதி மருத்துவ முறைக்கு முன்னால் அன்றைய காலத்தில் இருந்த உயர்தரமான மருத்துவ முறை சிகிச்சை முறை இந்த நாட்டிலே பின்பற்றப்பட்டது.

இந்த மருத்துவ முறையானது சரியான முறையில் முறைப்படுத்தப்பட்டதாக தொகுக்கப்பட்டதாக அந்த காலத்தில் இன்னும் உலகில் பல்வேறு

பகுதிகளில் பரவியிருந்த மருத்துவ முறையில் ஒன்றாகும் அதுவே யுனானி என்ற மருத்துவ முறை.இதனை இவ்வாறு அழைப்பதை விட திப்புந் நபவி என்றழைப்பதே ஏற்றமானது. இந்த வகை மருத்துவ முறையானது வளர்ச்சியின் உச்சியை அடைந்த நேரத்தில் ஈரான், ஈராக், துருக்கிஸ்தானே இதன் தலைமைபீடமாக விளங்கியது.

மத்திய காலக்கட்டத்தில் இந்த நாடுகளிலிருந்தே இந்தத் துறை சார்ந்த திறன் வாய்ந்த மருத்துவர்கள் வல்லுநர்கள் உருவானார்கள்.

டெல்லி சுல்தான் ஆட்சியாளர்கள் யுனானி முறைக்கு ஆதரவு கொடுத்து, யுனானி மருத்துவ அறிஞர்களை வரவழைத்து அவர்களுக்கு செல்வங்களை வாரி இறைத்து ஊக்குவித்தார்கள். அரசு ஊழியர்கள், மருத்துவர்கள் ஆகியோரும் யுனானி முறையினை மேம்படுத்திட ஈடுபடுத்தப்பட்டார்கள்.

இதனை நோக்கியான மக்களது ஆர்வம் ஹிஜ்ரி ஏழாம் நூற்றாண்டிலிருந்து பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. ஆட்சியாளர்கள் இதற்களித்த அதிமுக்கியத்துவத்தால், அயல்நாட்டு மருத்துவ வல்லுநர்கள், அவர்களிடமிருந்து அந்தக் கல்வியைக் கற்று விற்பன்னர்களாக மாறிய அவர்களது மாணவர்கள் கைதேர்ந்த மருத்துவர்கள் இவர்கள் அனைவரின் விலைமதிப்பற்ற பங்களிப்பால் இந்த மருத்துவ முறையின் மீது அவர்கள் கொண்டிருந்த ஆர்வத்தால் அதன்மூலம் மக்களுக்கெல்லாம் தொண்டாற்ற வேண்டும் என்ற முயற்சியால் இந்த மருத்துவ முறை வளர்ச்சியின் உச்சத்தை அடைந்தது.

இதனால் அப்போது புழக்கத்தில் இருந்த அனைத்து மருத்துவ மற்றும் சிகிச்சை முறைகள் கரைந்து போனது எந்தளவுக்கென்றால் யுனானி மருத்துவர்கள் இல்லாமல் ஒரு நகரமோ ஒரு கிராமமோ கூட இல்லை என்ற நிலை வந்தது.

இந்த மருத்துவ முறையானது மலிவானதாகவும் அனைவருக்குமான எளிமையான மருத்துவ முறையாகவும் இந்தியாவின் இயல்பு நிலைக்கும் கால நிலைக்கும் ஏற்றார் போலவே இருந்தது. இதற்கும் மேலாக அந்த காலத்தில் உயர்தரம் வாய்ந்த மருத்துவ முறையாகவும் இது திகழ்ந்தது இதனால் சிறிது காலத்திலே மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

ஏழ்மையான போதுமான வசதிவாய்புகள் இல்லாத பெரும்பான்மையான மக்களை கொண்ட இந்தியா போன்ற நாட்டில் இந்த மருத்துவ முறையானது அளப்பரிய தொண்டையும், உதவிகளையும் புரிந்தது.

இந்திய மருத்துவர்களும் தங்களாளான முயற்சியை செய்து இந்தக் கலையை இன்னும் மெருகேற்றினர். இஸ்லாமிய ஆட்சியின் கடைசி காலத்தில் டில்லி மற்றும் லக்னோ இந்த இருநகரமே இதனது தலைமையகமாக விளங்கியது.இன்று இந்த மருத்துவ முறையின் மையமாக திகழ்வது இந்தியா மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.இந்த தொன்மையான மருத்துவ முறை உயிரோடு இருப்பதற்கு இந்திய நாடுதான் காரணம் என்றால் அது மிகையல்ல.

இந்திய இஸ்லாமிய சமூகத்தையும் அவர்களது இஸ்லாமிய உணர்வுகளையும் கடுமையாக விமர்சிக்கும் நபர்களில் ஒருவரான W.Hunter கூறுகிறார்:

இந்தியாவின் தெற்குப் பகுதியில் தாங்கள் விரும்பிய நிலங்களில் பல்வேறு குடியிருப்புகளை உருவாக்கினார்கள்.

அந்த நகரங்களையெல்லாம் சுற்றி வர ஒரு பிரயாணிக்கு வாய்ப்பு கிடைத்தால் அந்த நகரங்களில் உள்ள விவசாய நிலங்களுக்கான நீர் பாசனத்திற்காக கட்டப்பட்ட அணைகள், பள்ளிவாசல்கள், சத்திரங்கள், நீர்தொட்டிகள் ஆன்மீக மையங்கள் அனைத்துமே அவரது கவனத்தை ஈர்க்கத் தவறாது. அடர்ந்த காடுகளாக இருந்த இடங்களிலே தான் இது போன்ற ரம்மியமான நகரங்கள் உருவாக்கப்பட்டது.

முஸ்லிம்கள் அரிதாகவே வாளின் மூலமாக இஸ்லாத்தைப் பரப்பினார்கள். பலம்வாய்ந்த இரு உணர்வுகளின் மூலமாகவே பெரும்பாலும் இஸ்லாத்தைப் பரப்பினார்கள். முதலாவதாக கங்கை நதியோரம் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களை பிராமணர்கள் தங்களோடு சேர்த்துக் கொள்ளவே மாட்டார்கள். ஆனால் முஸ்லிம்களோ எல்லாம் மனிதர்களுக்குமான சமத்துவ கொள்கையை அறிமுகப்படுத்தினார்கள். அவர்களைப் பொறுத்த வரை பிராமணர்களும் சரி, சூத்திரர்களும் சரி அனைவரும் சமம்.

இரண்டாவதாக இந்த திரு மார்க்கத்தின் அழைப்பாளர்கள் எல்லா இடங்களில் சென்று இறைவன் ஒருவனுக்கு மட்டுமே நாம் கட்டுப்பட வேண்டும் என்றும் இறைவனிடத்தில் அனைவரும் சமம் என்றும் ஒரு மனிதன் மற்றொரு மனிதனை விட மேன்மை பெறுவது இறையச்சத்தை கொண்டு மட்டும் தான் என்றும் இறைவன் அனைவரையுமே மண்ணிலிருந்து தான் படைத்தான் என்றும் மக்களிடையே பிரச்சாரம் செய்தார்கள்.

இந்தியாவின் பிரபல வரலாற்று ஆசிரியர்களில் ஒருவரான சர் ஜதுநாத் சர்க்கார் பல்வேறு புத்தகங்களின் ஆசிரியர் அவரது புத்தகங்கள் பல்கலைக்கழகத்திலே பாடப்புத்தகமாக வைக்கப் பட்டுள்ளது இவர் கல்கத்தாவிலிருந்து வெளியாகும்

அல்ஹிந்துல் வாஇய்யா என்ற இதழில் இந்தியாவில் இஸ்லாம் என்ற தலைப்பில் எழுதிய ஆங்கில கட்டுரையில் முஸ்லிம்களிடமிருந்து இந்தியா பெற்றுக் கொண்ட 10 கொடைகளை அதில் பதிவுச் செய்கிறார். (இவற்றில் நான் கூறியவற்றிலிருந்து அதிகமாக ஆசிரியர் கூறியதை மட்டுமே இங்கே குறிப்பிட்டிருக்கிறேன்)

**அண்டை நாட்டோடு தொடர்பு**

முஸ்லிம்களின் மூலமே இந்தியா அண்டை நாட்டோடு தொடர்பை ஏற்படுத்தியது.

**சீரான தன்மை**

முஸ்லிம்களின் மூலமே அரசியலில், ஆடைகளில், கலாச்சாரத்தில் என அனைத்து விஷயங்களிலும் ஒரு சீரான தன்மையை பெற்றுக் கொண்டது. குறிப்பாக உயர்தட்டு மக்களின் வாழ்வில் இது நன்றாகவே வெளிப்பட்டது.

**மொழி**

ஆட்சி மொழியாக ஒரே மொழி கடைபிடிக்கப் பட்டது. அது எளிமையான உரைநடையைக் கொண்டிருந்ததால் அதனை இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்தே பண்படுத்தி வளர்ச்சி அடையச் செய்தனர்.

**பிராந்திய மொழிகளின் பாதுகாப்பு**

நாட்டில் அமைதி நிலவும் பொருட்டு பிராந்திய மொழிகளை அதன் இலக்கியங்களை வளர்ச்சி அடையச் செய்வதையும் பரப்புவதையும் அரசாங்கமே ஊக்குவித்தது.

**கடல் வழி வாணிபம்**

நெடுங்காலமாக தடைப்பட்டு போயிருந்த, பழங்காலத்திலிருந்தே தெற்கில் மேற்கொள்ளப் பட்டு வந்த கடல் வாணிபத்தை புதுப்பித்து அதனை துவங்கினார்கள்.

கப்பற்படை முதன் முதலாக நிறுவப்பட்டது.

இந்த சுருக்கமான முதல் தலைப்பை தற்கால எழுத்தாளரான N.C.Mehta I.C.S. Indian Civilization and Islam என்ற தனது புத்தகத்தில் கூறியதைக் கொண்டு நிறைவுச் செய்கிறேன்

இதில் மிகப்பெரிய துர்பாக்கியம் என்னவென்றால் இந்த பகுதியில் இஸ்லாமிய வரலாறு என்பது ஆட்சி அதிகாரத்தோடு பின்னி பிணைந்திருந்த காரணத்தால் இஸ்லாமிய மார்க்கத்தின் எதார்த்தம் திரைக்குப் பின்னால் மறைந்துபோனது. அதன் நல்ல விஷயங்கள், அழகிய வழிகாட்டுதல்கள் மக்களின் பார்வையிலிருந்து மறைந்து போனது."

- தொடரும்.


## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?




- அரபி மொழியில் முதல் பதிப்பை எகிப்தின் (RESEARCH TRANSLATION AND PUBLICATION IN EGYPT) ஆராய்ச்சி மற்றும் மொழிபெயர்ப்பு வெளியீட்டுக்கான அகாடமி 1950ல் கெய்ரோவில் வெளியிட்டது.
- உலகெங்கும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அரபுலகின் மிகச் சிறந்த சிந்தனையாளர்களெல்லாம் இந்த நூலிலிருந்து மேற்கோள் காட்டி எழுதவும் பேசவும் செய்தார்கள்.
- அடுக்கடுக்காய் மிகச்சிறியதொரு காலத்தில் ஆறு பதிப்புகள் வெளிவந்தன. அதே காலகட்டத்தில் பார்சி, துருக்கி ஆகிய மொழிகளிலும், இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டது. உருது மொழியில் 1954ல் வெளியிடப்பட்டது.

272 பக்கம் | 300/-

Vergal Pathippagam

# இசை முரசின் இனிய நினைவுகள்

குளச்சல் இ.இ. முன்னேற்ற சங்கம் தன் 25 வது ஆண்டு விழாவை சீரோடு கொண்டாடியபோது ஒவ்வொரு துறையிலும் சமுதாய ரீதியாக மேம்பட்டவர்களுக்கு விருதும், பாராட்டும் கொடுக்கப்பட்டது. அப்பொழுது இஸ்லாமிய இசைமுரசு ஹாஜி E.M.ஹனிபாசாஹிப் அவர்களுக்கு "தீன்வழிச் செம்மல்" விருதும் பாராட்டும் கொடுக்கப்பட்டது.

விழாவிற்கு தலைமை தாங்கி இசைமுரசுக்கு விருதுகொடுத்து பாராட்டியவர் இறையருட்கவிமணி பேராசிரியர் க.அப்துல் கஃபூர்சாஹிப். விழாவில் மாவட்டம் முழுவதும் உள்ள ஊர் மக்களின் பெருந்திரளான கூட்டம் அன்று நடைபெற்ற வெள்ளி விழா கூட்டமும்,இசைமுரசின் எழுச்சியும், உணர்ச்சிமிகு பாடலும் பாராட்டுக்குரியது. மேடையிலிருந்த என்போன்றோர் இசை முரசின் இசைமழையில் நனைந்து மெய்மறந்தோம். இசை கேட்க வந்த அருகில் உள்ள ஊராரும், மற்றோரும் அகமகிழ்ந்தனர். இசை முரசின் பாடல்கள் உயிரூட்டமுள்ள வசீகரமுடையது. வழமைக்கு மாறாக இசையை கேட்க வந்தோர் அன்றைய இசை முரசின் பாடல்கள் பற்றி பாராட்டியும்,மெச்சியும் பேசினர்.

இசைமுரசு ஏனைய இஸ்லாமியப் பாடகரைப் போலல்லாமல் அவருக்கென சில நெறிமுறைகள் படி, தன் இறுதிக்காலம் வரை பாடிய பாடகர். நம்நாடு,ஸ்ரீலங்கா,மலேசியா,சிங்கப்பூர், கத்தார்,துபாய்,பர்மா போன்ற பல்வேறு நாடுகளுக்குச் சென்று இஸ்லாமிய பாடல்கள் பாடிய நல்ல பாடகர். ஏன்? பெரியார்,தி.மு.க தலைவர் அண்ணா காலத்திலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பித்தபோது,தான் நாகூரில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உள்ளூர் தலைவர்களோடு கலந்து கொண்டதாகவும், அப்போது தான் டவுசர் போட்ட இளம்வயதுடையவனாக இருந்ததால் நாகூர் காவல் நிலைய போலீஸ் அதிகாரி தன்னிடம்,உனக்கு வயது குறைவு நீ வீட்டிற்குப் போ என லத்தியால் அடித்து போகச்சொன்னபோது மறுத்து, ஏனைய தி.மு.க ஊர் தலைவர்கள் என்னை வேண்டியதன் காரணமாக , நான் வேண்டா வெறுப்பாக இல்லம் வந்தேன் என என்னிடம் தி.மு.க தொடர்பு பற்றி நேரிடையே இருவரும் உரையாடும்போது குறிப்பிட்டார்கள். அவர் இளம்வயதிலேயே தி. க, தி.மு.கவில் தொடர்புடையவன் என குறிப்பிட்டார்.

தி.மு.க பிரச்சார பாடகரில் முன்னணிப் பாடகரில் ஒருவர். அவர் இசை பாடப்படாத தி.மு.க மாநாடும் கிடையாது. அவர் பாடலை எல்லா மதத்தவரும் விரும்பி கேட்பர். அவர் காலமானபோது அவரின் இறைவனிடம் கையேந்துங்கள் என்ற பாடலை மதுரை மடாதிபதி மதுரை ஆதீனம், தான் விரும்பும் பாடல் என இரங்கல் உரையில் குறிப்பிட்டார். இசைஞானி இளையராஜாவோடு இணைந்து அவர் பாடிய பாடல்கள் உண்டு. இசை முரசின் பாடலை சுப்புலட்சுமி ஒரு தடவை நாகூர் ஹனிபாவிடம் நேரில், உங்களின் குரல்வளம் இறைவன் உங்களுக்கு இயற்கையிலேயே தந்த வரம் என பாராட்டியுள்ளார். இசையைப் படிக்காமலேயே இயற்கையிலேயே பாடகரானவர் இசைமுரசு என்றால் அதுமிகையாகாது. இந்தியாவிலுள்ள பல மாநிலங்களில் சென்று தன் இன்னிசையால் மக்களை ஆனந்தத்தில் ஆழ்த்தியவர். கேரளா மாநிலம் பீமாபள்ளி தர்காவிற்கு ஆண்டுதோறும் விழாவின்போது சென்று இஸ்லாமிய இன்னிசை பாடல் மூலம் கேரள மக்களிடையே அறிமுகமான இஸ்லாமிய தமிழ் பாடகர். இவர் இடம் இன்றுவரை நிரப்பப்படவில்லை.



**ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்**
**குளச்சல்**

காலம்சென்ற காயிதே மில்லத் கலந்துகொள்ளும் எல்லா மாநாடுகளிலும்

இறையருட் கவிமணியின் நபிநாயகமே! என்னும் பாடலை நாகூர் ஹனிபாவை பாடவைத்து கேட்டார்கள். இசை முரசிற்கு நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் சொந்த வீடு இருந்தது. சங்க வெள்ளி விழாவிற்கு இசைபாடும் படியும், அன்னாருக்கு சங்க வெள்ளி 25 ஆவது ஆண்டுவிழாவில் இஸ்லாமிய இசைக்கு "தீன்வழிச்செம்மல்" பட்டமும் பாராட்டும் கொடுக்க அழைக்க நானும், நண்பர் குளச்சல் இப்ராஹீம்,தம்பி ஜி.அப்துல் ஆசிம் போன்றோர் போயிருந்தோம். எங்களிடம் வீட்டினுள் சென்றபோது உட்காருவதற்கு முன் இருக்கையை தன்கையிலிருந்த துணியால் துடைத்து பின் உட்கார வேண்டினார்.

இசைமுரசு அவர்கள் சொன்னார்,நீங்கள் என்னை நிகழ்வுக்கு அழைக்க வந்துள்ளீர்கள் உங்களுடன் என் வீட்டு தூளை எடுத்து செல்லக்கூடாதென நான் துணியால் துடைத்தேன் என தமாஷாக குறிப்பிட்டார் இசைமுரசு. தமிழ் வஃக்பு போர்ட் சேர்மனாக ஜனாப் வி.அப்துல் லத்தீப்சாஹிப் இருக்கும்பொழுது குற்றாலம் சீசனில் வஃக்பு போர்டு கூட்டம் அங்கே நடைபெறுகிறது. அப்போது தனியார் பங்களாவில் தங்கியிருந்த கேரள முஸ்லிம் அமைச்சரும் சவுதியைச் சார்ந்த இரு அரபிகளும் குற்றாலம் அரசு பங்களாவிலிருந்து ஜனாப் வி.அப்துல் லத்தீப்சாஹிப் அவர்களை பார்க்க வந்தனர்.

ஜனாப் வி.அப்துல் சாஹிப் இசைமுரசுடன் தமிழில் பேசினார். பிறகு கேரள அமைச்சரிடமும், கேரள மக்களிடமும் மலையாளத்தில் பேசினார். லத்தீப் சாஹிப் பின்னர் வஃக்பு போர்டு மேனேஜரிடம் உருதுவிலும், ஆங்கிலத்திலும் லத்தீப் சாஹிப் பேச்சைப் பார்த்த இரு அரபிகளும் வியந்தனர். மேலும் அரபிகள் அரபியில் பேசியதும் சரளமாக லத்தீப்சாஹிப் அரபியில் பேசியதைக் கண்டும் அரபிகள் வியந்தனர். இசைமுரசு லத்தீப் சாஹிப்பிடம் ஒரு மொழி பேசினால் ஒரு மனிதன், இரண்டு மொழி பேசினால் இரு மனிதன் என நபிமொழிந்த நபி மொழியை நினைவுபடுத்தினார்.

நபியின் இந்த நபிமொழிப்படி நீங்கள் பன்மொழிப்புலவரென இசைமுரசு பாராட்டினார்.இது பற்றி கேட்டறிந்த அரபிகள் தகுந்த நேரத்தில் இசைமுரசு, நபிமொழியை நினைவுபடுத்தியதை பாராட்டினர். மேலும் அவ்வரபிகளிடம் இசைமுரசுவை அறிமுகப்படுத்தி இவர் நபிபோதனையை தன் இசை மூலம் சமுதாயத்தவர்களிடையேயும் மாற்று சகோதரர்களுக்கும் அறிவிக்கும் ஓர் அறிவிப்பாளர் என பாராட்டினார். இது கேட்ட அரபியர் ஒரு பாடலை பாட வேண்டினர்.

"இறைவனிடம் கையேந்துங்கள்... அவன் இல்லையென்று சொல்லுவதில்லை!" என்ற பாடலையும் "மக்கத்து மலரே மாணிக்கச் சுடரே யாரசூலல்லாஹ்" என்ற பாடலை பாடினார். அந்த அரபிகள் மொழி புரியாவிட்டாலும் இசை முரசின் குரல்வளம் கேட்டு வியந்து இது இறையருள் என வியந்தனர். "இறைவனிடம் கையேந்துங்கள்" என்ற பாடலை அரபிகள் லத்தீப்சாஹிப் மூலம் அறிந்து பாடச்சொல்லி ரசித்து மர்ஹபா.... சுப்ஹானல்லாஹ்! அல்ஹம்துலில்லாஹ்! என புகழ்ந்து மகிழ்வெய்தினர். (இக்கட்டுரை ஜமாஅத்துல் உலமா நவம்பர் 2016 மாத இதழில் தென்காசி முகம்மது முஸ்தபா கமால்முஹைதீன் எழுதிய கட்டுரையிலிருந்து எழுதியது.)

**பன்மொழிப்புலவர் மர்ஹூம் அப்துல் லத்தீப்**

பன்மொழிப்புலவர் அப்துல் லத்தீப்சாஹிப் தமிழ்நாடு வஃக்பு போர்டு தலைவராக வந்தபோது (குமரிமாவட்டம்) அவருக்கு ஜமாஅத் சார்பாக ஓர் வரவேற்பு கொடுக்க அவரை அழைக்க ஜமா அத்தாரோடு நாங்கள் குமரி கேப்ஹோட்டலுக்குச் சென்றிருந்தோம். அப்பொழுது எங்களோடு நண்பர் ஜனாப்.வி.இப்ராஹீம் வந்திருந்தார். தமிழ்நாடு அரசின் சட்ட ஆய்வுக்கூட்டம் குமரி கேப்ஹோட்டலில் நடந்த நேரம். ஜமாஅத்தார் அவருக்கு வரவேற்பு கொடுக்க நாங்கள் அழைத்தபோது இன்முகத்தோடு சொல்லி வரவும் செய்தார்கள்.

குளச்சல் ஜிம்ஹாப் பள்ளியில் வஃக்பு போர்டு தலைவருக்கு வரவேற்பு கூட்டம் நடைபெற்றது. அன்று ஜமாஅத் துணைத்தலைவராக இருந்தேன். அன்னாரின் சட்டமன்ற செயல்பாடுகள் ஆங்கில,சமஸ்கிருத புலமைகள் பற்றி அன்று பேசினேன் . என்னோடு வியாபாரத் தொடர்பால் தொடர்பிருந்த அன்றைய சட்டமன்ற உறுப்பினர் ஜனதாகட்சி சட்டமன்ற குளச்சல் தொகுதி உறுப்பினர் திரு. ஆதிசுவாமி அவர்கள் ஜனாப் லத்தீப்சாஹிப்பின் சட்டமன்ற ஆங்கில உரைகளின் தன்மை பற்றியும், சமஸ்கிருத புலமை பற்றியும், சட்டமன்றத்தில் அன்னாரின் துறைசார்ந்த விவாதங்களின் தன்மை பற்றியும் மெச்சியும் என்னிடம் பேசியுள்ளார்கள்.

ஜமாஅத் சார்பாக பன்மொழிப்புலவரை பாராட்டிப் பேசும்போது அன்னாரின் சட்டமன்ற விவாதம் பற்றியும்,தமிழ் ஆங்கிலப் புலமை,சமஸ்கிருதப் புலமை, விவாதத் திறமை பற்றியும் என்னிடம் குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் ஆதிசுவாமி அவர்கள் சொன்ன நிகழ்வுகளை நினைவுபடுத்தி அன்னாரின் வரவேற்புக் கூட்டத்தில் பேசினேன். அதன்பிறகு எனக்கு அன்னாருடன் ஒரு தொடர்பு ஏற்பட்டது. குளச்சல் முஹைதீன் பள்ளி முன்பு உள்ள இடம் வாங்குவது பற்றிய விபரங்களை ஜமாஅத்தார் அன்னாரிடம் விளக்கினர். இதற்கிடையே கலைஞருக்கும் அன்னாருக்கும் கருத்துமாறுபாடால் வஃக்பு போர்டு தலைவர் பதவியை அவர் இராஜினாமா செய்தார்.



# உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும், வீழ்ச்சியும்

**நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, உலக நீதி மன்றங்களில் நடந்து கொண்டிருப்பதென்ன?**


*ஆங்கிலம்:*

**திரு.பிரஷாந்த் பூஷன்,**

*மூத்த வழக்கறிஞர்,உச்சநீதிமன்றம்.*

**தமிழ் வடிவம்:**

**மு.குலாம் முஹம்மது,**

*ஆசிரியர்.வைகறை வெளிச்சம்.*


நீதிமன்ற அவமதிப்புப் பற்றி நீதி அரசர் V.K. கிருஷ்ண ஐயர் அவர்களின் கருத்து:-

நீதிமன்றங்கள், இந்த அதிகாரத்தை, மிகவும் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திட வேண்டும்.

நீதி செலுத்துவதில் பிரச்சனைகளோ, தடைகளோ ஏற்படும்போது மட்டுமே இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திட வேண்டும். நீதிபதிகள் மீதும், நீதித்துறையின் மீதும் ஆதார மற்றக் குற்றச்சாட்டுகளைக் கூறிடும்போது மட்டுமே பயன்படுத்திட வேண்டும். அதனால், நீதி வழங்குவதில் ஆபத்து ஏற்படும்போது மட்டுமே செயல்படுத்திட வேண்டும். சாதாரணமாக வரும் எரிச்சல்களிலெல்லாம், இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திடக்கூடாது.

இதில் இரண்டாவது கொள்கை என்னவெனில், மக்கள் மன்றத்தின் ஊடகத்துறை உட்பட, சுதந்திர சிந்தனைகளையும், அவற்றை வெளிப்படுத்தும் உரிமைகளையும், பறித்திடக்கூடாது. சுதந்திரமான சிந்தனைகளுக்கும், அவற்றை வெளிப்படுத்துவதற்கும் போதிய அவகாசம் வழங்கப்பட வேண்டும். இதனை செய்தால் அந்த ஜனநாயகம் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனநாயகம் எனக்கொள்ளலாம்.

நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பின்னணியில் சொன்னால் சுதந்திரமான மக்கள்தாம் அச்சமற்று நீதி வழங்குவதற்கான உத்திரவாதத்தைத் தருபவர்கள். நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தின் அடித்தளமே அதுதான். இதற்கு உட்பட்டுத்தான் நீதிபதிகளின் நீதிமன்ற அவமதிப்பு, அதிகாரத்தில் இருக்கின்றது என்பதை நாம் உணர்ந்திட வேண்டும்.

ஒரு நீதிபதியின் மீது,அவர் ஒரு நீதிபதி அல்ல, ஒரு தனிமனிதன் என்றளவில் குறைகள், குற்றங்கள், அவதூறுகள் சொல்லப்படுமேயானால், அவர் அதனை நீதித்துறையின் மீது சொல்லப்பட்டதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. மாறாக ஒரு தனிமனிதன் என்ற அளவில், வழக்கமான அவதூறு, ஆதாரமின்றி குறைகூறுதல் ஆகிய குற்றப் பிரிவின் கீழ் (Libel

and Slander) புகார் தந்து வழக்கை நடத்தலாம்.

நீதிமன்றத்தின் புனிதத்தையும், கண்ணியத்தையும் நீதிமன்ற அவதூறு என்ற அதிகாரத்தை வைத்துப் பெற்றிட இயலாது. இவை மக்களிடம் நன்மதிப்பைப் பெறுவதன் மூலமே காப்பாற்றப்படும். அந்த நன்மதிப்பு, நீதிமன்றம் நடுவுநிலை நழுவாதது, அச்சங்களுக்கு அப்பாற்பட்டது என்ற எண்ணத்தையும், நம்பிக்கையையும் மக்களிடம் ஏற்படுத்துவதன் மூலமே பெறப்படும்.

நீதிமன்ற அவமதிப்பு அதிகாரம் என்பது தனிப்பட்ட நீதிபதிகளைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. நீதிபதிகள் எடுத்ததற்கெல்லாம் கருத்துச் சொல்பவர்கள் மீது பாய்ந்திட இயலாது. அவர்கள் நிதானத்தோடு செயல்பட்டிட வேண்டும். நிதானம் நிறைந்தவர்களாக இருந்திட வேண்டும். அவர்கள் மிகவும் கடினமான சூழல்களிலும் வாழ்ந்திடும், வளர்ந்திடும் ஆற்றல் பெற்றவர்களாக இருந்திட வேண்டும்.

(Douglas,J. Craig Vs Harney 1947 Scc Online Us Sc 79,Para 14 : 91 L.ED 1546 : 331 us 367,at p. 376(1947))

அதே நேரத்தில் நீதிபதிகள், நீதிமன்றங்களின் மேல் மக்களின் நம்பிக்கையை பெற்றுத் தருபவர்களாகவும் இருந்திட வேண்டும்.

நீதிமன்ற அவமதிப்பு என்ற அதிகாரம், நீதிமன்றங்களையோ, தனிப்பட்ட நீதிபதிகளையோ காப்பதற்காக தரப்பட்டதல்ல. இந்த அதிகாரம், நீதித்துறையில் நீதி வழங்குவதில் நீதியில் கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் அளவுக்கதிகமாகத் தலையிடுவதைத் தடுப்பதற்காகும். (Bowen J. J. Helmore V. Smith (2)(1886)35 ph. D 449 at.p.445(CA)


**அடிநாதம் மக்களின் நம்பிக்கை, நல்லெண்ணம்.**

நீதிமன்ற அவமதிப்பு அதிகாரம், எடுத்ததற்கெல்லாம் பயன்படுத்துவதற்கு அல்ல. மிகவும் அரிதாகவும், கட்டுப்பாடோடும் பயன்படுத்துவதற்கே! மிகவும் அதிகமாக நிர்பந்திக்கும், கட்டாயப்படுத்தும் சூழ்நிலைகளில் மட்டுந்தான், இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திட வேண்டும். என்பதை நீதிபதிகள் மனதில் நிறுத்திட வேண்டும்.

மேலே எடுத்துக்காட்டப்பட்ட தீர்ப்பில், பத்தி 70இல், இப்படி அறிவுறுத்தப்படுகின்றது. நல்ல எண்ணத்தில், நல்ல சொற்களில் சொல்லப்படும் விமர்சனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றை நீதிபதிகள் வரவேற்க வேண்டும். அவர்கள் தங்களைச் சுயபரிசோதனைக்கு உட்படுத்திட வேண்டும். ஏனெனில் அவர்கள், பலவீனங்களுக்கு அப்பாற்பட்டவர்களல்ல. பொதுமக்களின் நலனுக்காக நீதிபதிகள், பொதுவெளியில் கலந்து கொண்டு அங்கு செவியுறுபவை நீதிமன்ற அவமதிப்பாகாது.

இன்ஷா அல்லாஹ் தொடரும்...





# பெற்றோர்களின் பாதுகாப்பு

குழந்தை வளர்ப்பு என்றொரு பகுதியை “வைகறை வெளிச்சம்” வாசகர்களுக்குத் தந்து கொண்டிருக்கின்றோம்.

சில வாசகர்கள் நேரில் என்னிடம், குழந்தை வளர்ப்பை விட, இன்றைய நாட்களில் பெற்றோர்களின் பாதுகாப்பைப் பற்றி அதிகமாகப் பேசிட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள்.

அந்தவகையில் பெற்றோர்களின் பாதுகாப்பைப் பற்றிய அறிமுகம் ஒன்றை இங்கே தருகின்றோம்.

பெற்றோர்களின் பாதுகாப்பு என்பதில் அல்லாஹ்வின் வழிகாட்டுதல் எல்லாப் பிள்ளைகளுக்கும் மிகவும் ஏற்றதாய் அமைகின்றது அந்த வகையில், அல்லாஹ்வின் வழிகாட்டுதல்கள் சிலவற்றிலிருந்து இந்த விவாதத்தைத் தொடங்குவோம்.

குழந்தைகளைப் பேணி வளர்க்கும் பெற்றோர்கள், குழந்தை வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமைந்திட வேண்டும். அவர்களின் எதிர்காலம் வளப்பானதாக அமைந்திட வேண்டும், என்பதையே இலக்காக உழைக்கின்றார்கள்.

மேலைநாட்டுக் கலாச்சாரம், வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் இளைஞர்களையும், முதியவர்களையும் ஒன்றுபோலவே ஈர்க்கத் தொடங்கியது. அடுத்தடுத்து வந்த தலைமுறைகள் அந்தக் கலாச்சாரத்தின் புகழ்பாடவே, வளரும் தலைமுறைகள் எல்லாம் அந்தத் துதியைப் பாடிக்கொண்டிருந்தன.

அதனால் இளைஞர்களின் நெஞ்சங்களில் ஆழப்பதிந்த இந்தக் கலாச்சாரம், அவர்களை ஆட்டிப்படைக்கத் தொடங்கியது.

வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் அந்த மேலைநாட்டுக் கலாச்சாரத்தின் அடிப்படையில் கட்டி அமைத்தார்கள்.

அல்லாத கலாச்சாரங்களைப் பிற்போக்கானவை, என எண்ணினர். அதனால், நல்ல வழிகாட்டுதல்களைப் பெற்றவர்கள், நல்ல பாரம்பரிய கலாச்சாரங்களையும், பண்பாடு களையும் பெற்றவர்கள் அவற்றை தங்கள் இளைய தலைமுறைக்குத் தர முடியாதவர்களாக ஆனார்கள்.

இந்த கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக, வயோதிகர்களைச் சுமையாக எடுத்துக்கொள்ளும் நிலையும் சேர்ந்தே வந்தது.அதையும் இந்தப் பெற்றோர்களால் தடுக்க இயலவில்லை அவர்களே அதற்குப் பலியானார்கள்.

இந்தக் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக முதியோர் இல்லங்கள் உருவாகின. பெற்றோர்களை கனிவான வார்த்தைகள் பேசுவது அதன் மூலம் அவர்கள் பெறும் ஆறுதல் ,நாம் நமது குழந்தைகளால் கவனிக்கப்படுகின்றோம் என்ற உணர்வு, இவையெல்லாம் பெற்றோர்களுக்கு மிகவும் முக்கியம். அவர்களுக்கு ஊட்டப்படும் உணர்வுகள் ,அவர்களுக்கு ஊட்டப்படும் உணவைவிட உக்கிரமிக்கது.

இதையெல்லாம் ஓர் இல்லத்தில் முதியோர் இல்லத்தில் சேர்த்து விடுகின்றார்கள்.

இது அவர்களுக்கு அந்த வயோதிகர்களுக்கு நிவாரணம் என்பதைவிட நெஞ்சுழுத்தங்களையே அதிகரிக்கும் என்பதே முதியோர் நல மருத்துவர்களின் கருத்து.

முதியோர் நல மருத்துவர், இந்தத் துறையில் பல விருதுகளைப் பெற்றவர், பல சமூக சேவைகளை நடத்திக் கொண்டிருப்பவர் அவரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் சொன்னார்:

“பெற்றோர்களுக்காக நேரம் ஒதுக்குங்கள். அவர்கள் பேச, நீங்கள் கேளுங்கள். அவர்கள் சம்பந்தம்மில்லாதவற்றைப் பேசினாலும் கேளுங்கள். தலை அசையுங்கள். சில “சரி”களைப் போடுங்கள். அவர்கள் சொல்வதை அக்கறையுடன் கேளுங்கள். இந்தச் செயல் அவர்களுக்கு சிறந்த நிம்மதியைத் தரும். இதுவே சிறந்த முதியோர் நலம்.”

இதைத்தான் ஆங்கிலத்தில் Sharing and Caring அதாவது அவர்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது, அவர்களின் உணர்வுகளை கவனித்துக்கொள்வது. இதுவே சிறந்த முதியோர் பாதுகாப்பின் முதல் நடவடிக்கை.

அல்லாமல் முதியோர் இல்லங்களில் சேர்த்து மணி அடித்தால் சாப்பாடு, முடி முளைத்தால் மொட்டை என்பது முதியோர் பாதுகாப்பு ஆகாது என்பது முதியோர் நலனில் அக்கறை கொண்டவர்களின் ஒருமித்தக் கருத்து.

முஹம்மது குதுப்(ரஹ்) போன்றவர்கள் இந்த முதியோர் இல்லங்களை மனித மாண்புகள் இறந்து, குடும்பங்களின் ஒழுக்க விழுமியங்கள் சரிந்து வீழ்ந்துவிட்டது என்பதன் அறிகுறி என்றார்கள்.

இஸ்லாம் வளர்த்த குடும்ப அமைப்பு, பெற்றோர்களை, வயோதிகர்களை பாதுகாப்பதற்கு சிறப்பான நற்கூலிகளைப் பிரகடனப்படுத்தியது.

இறைவன் கூறுகின்றான்:

“அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான்; அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமை அடைந்து விட்டால், அவர்களை உஃப் (சீ) என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம் - அவ்விருவரையும் (உம்மிடத் திலிருந்து) விரட்ட வேண்டாம் - இன்னும் அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக!”

*(அல்குர்ஆன் : 17:23)*

இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக; மேலும், “என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்த போது, என்னை(ப்பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக!” என்று கூறிப் பிரார்த்திப்பீராக!

*(அல்குர்ஆன் : 17:24)*

நபிமொழி :

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் நவின்றார்கள் :

“அவன் மூக்கு மண்ணாகட்டும்! (அதாவது அவன் இழிவடையட்டும்!)” இவ்வாறு மூன்று முறை கூறினார்கள். மக்கள் வினவினார்கள் - “அல்லாஹ்வின் தூதரே, யார்?” (அதாவது யார் இழிவடையட்டும்? யாரை இப்படிக் கடிந்து கொள்ளுகிறீர்கள்?)“முதுமைப் பருவத்தில் தன் தாய் தந்தையரில் ஒருவரையோ - இருவரையுமோ பெற்றிருந்தும் (அவர்களுக்குப் பணிவிடை புரிந்து)சுவனம் புகாதவன். (முஸ்லிம்)

**MGM**

# இஸ்லாம் நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம்



## சித்தார்த் (இப்போது) ஷதாப்

2014ம் ஆண்டுக்கு பிந்தைய தற்போதைய மோடியின் பாசிச ஆட்சியில், வட மாநிலங்கள் முழுமையாக பாஸிஸ்டுகளின், இந்துத்துவவாதிகளின் கூடாரங்களாக மாறி நிற்கின்றது. நித்தம் ஒரு கலவரம், கொலை, கொள்ளை, கற்பழிப்புகள் என நாள்தோறும் பாஸிஸ்டுகள் தங்கள் வெறியாட்டத்தை வெளிப்படையாக நிகழ்த்தி கொண்டிருக்கின்றனர். குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் மீதான தாக்குதல்கள், கும்பல் வன்முறைகள், படுகொலைகள், மாட்டின் பெயரால் கொலை செய்யப்படுவது என, இந்தியாவின் வடமாநிலங்கள் முஸ்லிம்கள் வாழ்வதற்கு பாதுகாப்பற்ற பகுதிகள் என்று பேசப்படக்கூடிய அளவிற்கு அங்கே முஸ்லிம் சமூகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் வட மாநிலங்களின் நிலைமை இப்படியிருக்க, "இஸ்லாம் எங்கே அதிகமாக எதிர்க்கப்படுகிறதோ, அங்கேதான் அது வேகமாக வளரும்" என்ற வரலாற்றுக்கு ஏற்ப பாஸிஸத்தின் கூடாரமாக திகழும் இந்தியாவின் வட மாநிலங்களில் இஸ்லாத்தை நோக்கி மக்கள் வந்து கொண்டிருக்கின்றனர்.

ஏதோ, சாதாரணமாக இங்கொன்றும், அங்கொன்றுமாக இல்லாமல், படித்த சிந்திக்கும், இளைஞர்கள், பெண்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கின்றனர். அப்படி இந்த கோரமான, மோசமான இந்தியாவின் பாஸிச ஆட்சியில் வட மாநிலங்களில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் அனுபவங்களை இனி பதிவு செய்வது என முடிவெடுத்துள்ளோம். அதன்வழி முதல் அனுபவமாக சித்தார்த் எப்படி ஷதாப் ஆனார்? என்பதைப் பார்ப்போம்.......!

**சித்தார்த் (எ) ஷதாப்**

"நான் என் வாழ்நாளின் பெரும் பகுதியை முஸ்லிம்களை வெறுப்பதிலேயே கழித்துள்ளேன். ஆனால் இப்போது நானும் ஒரு முஸ்லிம் என்று நினைக்கும் போது எனக்கு பெருமையாக உள்ளது." என்று தனது அனுபவங்களை ஆரம்பிக்கின்றார் ஷதாப்.

பா.ஜ.க. ஆளும் பல மாநிலங்களில் "மதமாற்றுத் தடை சட்டத்தை" நிறைவேற்ற திட்டமிட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில், முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு வெறுப்புணர்வு அதிரித்தது. அதை மையமாக வைத்தே இஸ்லாத்தை நோக்கிய தனது பார்வையை திருப்பியிருக்கின்றார் ஷதாப்.

**இஸ்லாத்திற்கு முன் ஷதாப்**

ஷதாப் ஒரு பக்தியுள்ள இந்துவாக இருந்தார். வாரத்தின் செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் தவறாது கோவிலுக்குச் சென்றுவிடுவார். மேலும் செல்லும் போது இனிப்புகளை கடவுளுக்காக வாங்கிக்கொண்டு செல்வார். இந்து மதத்தின் ஷத்ரியர் பிரிவில் பிறந்த அவர், தனது மதம் போதித்த அனைத்து வழிபாடுகளையும் மிக நேர்த்தியாக கடைபிடிக்கக்கூடியவராக இருந்தார்.

அப்போது ஷதாப்-க்கு 19 வயது. தான் தீவிரமாக கடைபிடித்து வரும் இந்துமதத்தின் நம்பிக்கைகள் மீது அவர் கேள்விகளைத் தொடுக்க ஆரம்பித்தார். அதுகுறித்து அவர் கூறும்போது,

> "நான் எனது பெற்றோர்களிடம் எனது வழிபாடுகள் குறித்து கேள்வி எழுப்ப ஆரம்பித்தேன். குறிப்பாக, கோவிலுக்குச் சென்று அகல் விளக்கு ஏற்றுவது சம்பந்தமாக கேள்விகள் எழுப்பினேன். அதற்கவர்கள், இதுவெல்லாம் நம் முன்னோர்கள் நமக்கு கற்றுக்கொடுத்த பழக்கம். நமது கலாச்சாரம் என்று கூறி வாயடைத்து விட்டார்கள். அவர்களால் அதுகுறித்த தர்க்கரீதியான ஒரு பதிலை தரமுடியவில்லை."

இப்படியான சில சம்பவங்களுக்கு பிறகு அவர் இந்து மதத்தின் மீதான தனது நம்பிக்கைகளை இழக்க ஆரம்பித்தார். அது அவரை இந்து மதத்திலிருந்து தூரமாக்கியது.

இந்த நிலையில்தான் அவருக்கு குர்ஆனை படிக்கும் ஒரு வாய்ப்பு கிடைக்கின்றது. அதுகுறித்து அவர் கூறும் போது,

> "நாம் இறைவனை நோக்கி நடந்து சென்றால், இறைவன் நம்மை நோக்கி ஓடி வருகின்றான். நான் இறைவனை தெரிந்துகொள்ள ஊர்ந்துதான் சென்றேன். ஆனால் அல்லாஹ் எனக்கு, இஸ்லாத்தை கற்றுக்கொள்வதற்கும், புரிந்துக்கொள்வதற்கும், நடைமுறைப் படுத்துவதற்கும் வழிகளை திறந்துவிட்டான்."

இஸ்லாத்தில் உங்களை மிகழ்வும் கவர்ந்த விஷயம் எது என்று கேட்டபோது,

> "இஸ்லாத்தில் உள்ள சமத்துவும், சகோதரத்துவம் என்னை மிகவும் கவர்ந்தது. ஒரு ஏழையாக இருந்தாலும் சரி, வங்கி ஊழியராக இருந்தாலும் சரி தொழுகையின் போது ஒரே வரிசையில் அருகருகே நின்று தொழுகின்றார்கள். மேலும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் பிறந்துவிட்டதால் மட்டும் நீங்கள் கடவுளுக்கு நெருக்கமாகிவிட முடியாது. இஸ்லாத்தில் நிறத்தால், பொருளாதாரத்தால், சமூக அந்தஸ்தால் யாரும் உயர்ந்தவர் ஆகிவிட முடியாது. அல்லாஹ்வின் பார்வையில், இஸ்லாத்தின் பார்வையில் அனைவரும் சமமே" என்ற தத்துவம் என்னை மிகவும் கவர்ந்தது.

**சோதனைகள்**

ஷதாப் இஸ்லாத்தை மிக தீவிரமாக நேசிக்க ஆரம்பித்தார். அதனால் அவருக்கு நிறைய பிரச்சினைகளும் வந்தது. அவர் தனது வீட்டிலேயே இரகசியமாகத் தொழுவார். நோன்பும் ரகசியமாகத் தான் வைப்பார். அவரது குடும்பத்துடனேயே அவர் வாழ்ந்து வந்தாலும், அவரது உலகம் தனியாக இருந்தது.

ஷதாப்-ன் இந்த வித்தியாசமான நடவடிக்கையை அவரது குடும்பம் கண்காணிக்க ஆரம்பித்தது. அதன் விளைவாக ஒரு நாள், அவரது அறையை சோதனையிட்ட அவரது பெற்றோர்கள், தஸ்பீஹ் மணியையும், தொப்பியையும், சில பிரார்த்தனை புத்தகங்களையும் கண்டெடுத்தார்கள். மேலும் ஷதாப்-ன் சமூகத்தைச் சார்ந்த சில நபர்கள், "உங்கள் மகன் ஊரின் இந்த பள்ளிவாசலுக்குள் அடிக்கடி நுழைவதை நாங்கள் பார்த்தோம்" என்று வன்மையாக கடிந்து கொண்டனர். இதன் விளைவாக 2016ம் ஆண்டு தனது 23ம் வயதில் ஷதாப் வீட்டைவிட்டு வெளியேறினார். அதுகுறித்து அவர் கூறும்போது,

> "நான் இந்து மதத்தை விட்டு வெளியேறிவிட்டேன் என்பது குறித்து என் குடும்பத்தார்களுக்கு பிரச்சினையில்லை. ஆனால் "நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன்" என்பதுதான் அவர்களுக்கு பிரச்சினை" என்கிறார்.

அந்த நாட்கள் ஷதாப்-க்கு சோதனையாக அமைந்தது. வேலையில்லாமல், சாப்பிட உணவில்லாமல், சாலைகளில், பூங்காக்களில், மூடப்பட்ட கடைகளின் வாசல்களில் உறங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னர் ஷதாப்-ன் முஸ்லிம் நண்பர் ஒருவர் அவருக்கு அடைக்கலம் கொடுத்தார். அதன்பின் ஷதாப் தனக்காக ஒரு வேலையைத் தேடிக்கொண்டார். அது ஒரு கார்ப்பரேட் நிறுவனம். அங்கு வேலையில் சேர்வதற்கான நெறிமுறைகளை அவர் காணும் போது, அதுவும் ஒரு விதமான இஸ்லாமிய வெறுப்பாக(Islamophobia) தெரிந்தது என்கிறார் ஷதாப்.

**வடமாநிலங்களின் முஸ்லிம் வெறுப்பும் - ஷதாப்-ம்**

இதே காலகட்டத்தில்தான் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வுகளும் அதிகரித்தது. கும்பல் வன்முறைகள், மாட்டின் பெயரால் கொல்லப்படுவது, என முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள், வெறியாட்டங்கள் அதிகமாவதைக் கண்ட ஷதாப் தனது மத உரிமையை செயல்படுத்துவதில், தான் ஆழமாக பாதிக்கப்படுவதாக உணர்கின்றார்.

அலுவலகத்தில் பணியாற்றும்போது, சித்தார்த்தாகவும், அலுவலகத்திற்கு வெளியே ஷதாப்-ஆகவும் இருக்கக்கூடிய நெருக்கடி அவருக்கு ஏற்பட்டது. சாலைகளில் நடந்து செல்லும்போது தனது தொப்பியை பாக்கெட்டில் வைத்துக்கொள்வார். பாங்கு சொல்லும் நேரங்களில் தலையில் மாட்டிக்கொள்வார்.

ஷதாபின் இஸ்லாமிய நண்பர்கள் அவர் இஸ்லாத்திற்கு மாறியதை அறிந்ததும், அவர்களில் பலர் அவரது முடிவை "தனது கல்லறையைத் தானே தோண்டிக்கொண்டார்" என்று விவரித்தனர்.

அக்லக், ஜுனைத், தப்ரேஸ் மற்றும் பெஹ்லு ஏன் கொல்லப்பட்டார்கள் என்பதை அவர் உணர்ந்தபோது இந்தப் பேச்சு அவரை கடுமையாக பாதித்தது. அவர் கூறுகிறார்,

> "இந்திய முஸ்லீம்களின் யதார்த்தத்தை யாரும் புரிந்து கொள்ள மாட்டார்கள். அது தங்களது வீட்டிற்குள் வரும்வரை. முஸ்லிம்கள் முற்றிலும் பாதுகாப்பானவர்கள் என்று கூறி, பல இந்துக்கள் 'முசல்மான் கத்ரே மே ஹை' (முஸ்லிம்கள் ஆபத்தில் உள்ளார்கள்) என்ற கோஷத்தைப் பார்த்து சிரிக்கிறார்கள். முஸ்லிம்கள் இந்த நாட்டில் பாதுகாப்பாக இருக்கின்றார்கள் என்று கூறுகின்றனர். இது உண்மைக்குப் புறம்பானது. முஸ்லிம்கள் இரண்டாம் தர குடிமக்களாக வாழ்கின்றனர். நான் இதை உணர்ந்தேன், நான் அதை என் கண்களால் பார்த்தேன்."

குடியுரிமை திருத்தச் சட்டம் (சிஏஏ), தேசிய குடிமக்கள் பதிவேடு(என்ஆர்சி) போராட்டங்களில் அவர் தீவிரமாகப் பங்கேற்றார்.

> "காகாஸ் நஹி திகாயெங்கே (ஆவணங்களைக் காட்ட மாட்டோம்) என்பது எனக்கு வெறும் கோஷம் அல்ல. இது எனது சமூகம் ஒட்டுமொத்தமாக ஒதுக்கப்படும் அபாயத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது," என்று அவர் கூறுகிறார்.

அவர் ஒரு இந்துவாக இருந்தபோது, பெரும்பாலான இந்திய முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் யதார்த்தத்தை கவனிக்காமல் விட்டதாக கூறுகின்றார் ஷதாப். CAA/NRC-க்கு எதிரான போராட்டங்கள், இந்தியர்கள் என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் முஸ்லிம்களை ஒன்றிணைத்து, தற்போதைய ஆட்சியின் மதவாத தேசியவாதத்திற்கு எதிராக நிற்க வைத்தது என்று அவர் கூறுகிறார்.

> மேலும் அவர், "நாளை, எனது மதமாற்ற ஆவணங்கள் காரணமாக, எனது குடியுரிமையை ரத்து செய்ய ஆளும் ஆட்சி எந்த சட்ட ஓட்டையைப் பயன்படுத்தும் என்று யாருக்குத் தெரியும்?" என்கிறார்.

எட்டு ஆண்டுகள் இஸ்லாத்தை கடைப்பிடித்த பிறகு, டெல்லி கலவரத்தின் போது திட்டமிட்ட வன்முறையின் மூலமாக பாஸிஸ்டுகள் முஸ்லிம்களின் வீட்டைத் தாக்கியதை பார்த்த நான், "மக்கள் இந்த முஸ்லிம் சமூகத்தின் மீது காட்டும் வெறுப்பைக் கண்டு, ஒரு முஸ்லிமாக நான் வியப்படைந்தேன்," என்கிறார்.

இந்தத் தாக்குதல்கள் நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டதாக அவர் கூறுகிறார். அவர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது, பணக்கார முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள், கலவரக்காரர்கள் கொண்டிருந்த ஒருவித பழிவாங்குதலை அடையாளப்படுத்துவதாக அவர் கூறுகின்றார்.

மோடியின் இந்த பாஸிச ஆட்சியில் இஸ்லாம் மதத்திற்கு மாறுவது ஒரு கொடிய பாவமாக மாற்றப்படுவதாக ஷதாப் கூறுகிறார். இஸ்லாத்தில் புதிதாக தனது வாழ்க்கையைத் தொடங்குவதற்கு ஒரு பெரிய போராட்டத்தை சந்தித்தாலும், தான்

ஒரு பெண்ணாக இருந்திருந்தால் அதையெல்லாம் தாண்டி வந்திருக்க முடியுமா என்று கற்பனை செய்துபார்க்க முடியவில்லை என்று அவர் கூறுகிறார். 'லவ் ஜிஹாத்' சட்டங்கள் பெண்களின் சுய உரிமையையும், மத உரிமையையும் பறிப்பதாக அவர் கருதுகிறார்.

இந்து பெண்களை கட்டாயப்படுத்தி இஸ்லாத்திற்கு மாற்றுகின்றனர் என்ற சங்கபரிவாரத்தினரின் சதிகோட்பாட்டை, ஆளும் பாஸிச பா.ஜ.க. அரசு வலுப்படுத்திவரும் சூழ்நிலையில், சித்தார்த் என்ற இந்து இளைஞர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு, வட மாநிலங்களில் நடக்கும் முஸ்லிம் வெறுப்பு, இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்புகளுக்கு எதிராக பல கேள்விகளை எழுப்பி வருகின்றார்.

"எந்த மதத்தையும் கடைப்பிடிப்பது அல்லது பிரச்சாரம் செய்வது என்பது ஒருவரின் சட்டப்பூர்வ உரிமை மற்றும் தனிப்பட்ட விருப்பம் என்றாலும், அரசியல் ரீதியாக தூண்டப்பட்ட வகுப்புவாத சூழல், முஸ்லிம்கள் தங்கள் அடையாளத்தை மறைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற சூழலை ஏற்படுத்தியுள்ளது" என்று ஷதாப் கூறுகிறார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 25, ஒரு இந்திய குடிமகன், தான் விரும்பும் மதத்தை ஏற்றுக்கொள்ள, பின்பற்ற, பிரச்சாரம் செய்ய உரிமை வழங்கியுள்ளது. அதன் மீது நம்பிக்கை வைத்தவராக ஷதாப் இஸ்லாத்தில் நிலைத்து நிற்கின்றார். (The Wire - March 14 - 2021)

**Ashraf Alee**

# உங்கள் இல்லம் தேடி இஸ்லாம்

# 29/12/2021



அன்பகம் மதரஸா தாஃவா குழு சார்பாக 29/12/2021 அன்று மயிலாடுதுறை மாவட்டம், ஆயங்குடி பள்ளம், காலனி மற்றும் திருமைலாடி ஆகிய இடங்களில் தாஃவா பணிகள் நடைபெற்றது. இதில் பல மக்கள் ஆர்வமுடன் இஸ்லாத்தைத் தெரிந்து கொண்டனர்.









# வாசகர்கள் எண்ணங்கள்!

Mr. Hussain • 2 weeks ago
அருமையான பதிவு
Translate to English (United Kingdom)
4

மாற்றம் • 2 weeks ago
இது போன்ற Chennel களுக்கு அனைத்து தரப்பினரும் அதிகமாக ஆதரவு தர வேண்டும்
Translate to English (United Kingdom)
4

Basmeen M • 5 days ago
Ilhan Omar, brave and courageous women keeps on voicing for Muslims be it Palestine, or uighur or even against US for arms deal support to Israel. Recently Michigan State fully comprised of Muslim leaders voted by people. People are waking up from listening to Bogus media propoganda. May Allah Almighty bless the righteous one to standstrong against hypocrites.
4

S. MOHAMED MUSTHAFA • 4 days ago (edited)
தொடர்ந்து செய்யுங்கள் உங்கள் பணியை தொடர்ந்து செய்யுங்கள் ஆசிரியர் அவர்களே அல்லாஹ் உங்களுக்கு உதவியும் அருளும் புரிவானாக உங்களோடு இணைத்து எங்களுக்கும் அருள் புரிவானாக
Translate to English (United Kingdom)
6 2

Arafath Hamas Aks • 13 days ago
கண்விழித்து இருந்தால் போதாது, அந்த விழிப்பில் உணர்வு வேண்டும் (எதை பார்க்கிறோம் என்று )அது தான் "விழிப்புணர்வு" அதை செய்வதில் முதன்மையானது வைகறை வெளிச்சம். அல்ஹம்து லில்லாஹ்...
Translate to English (United Kingdom)
4 1

UMAR FAROOK • 1 day ago
🖤🖤🖤

மாற்றம் • 2 days ago
பாசிஸ்ட்டுகளை பற்றி உங்களைவிட யாரலும் இவ்வளவு தெளிவாக பதிவிட முடியாது...! Vaigarai velicham முஸ்லிம் சமுகத்தின் Velicham
Translate to English (United Kingdom)
6

Mohamed Rafi • 3 weeks ago
உங்களின் செய்திக்காக காத்திருந்தேன் 👍
Translate to English (United Kingdom)
4

S. MOHAMED MUSTHAFA • 6 days ago

அல்லாஹ் நாடியவாரே
அல்லாஹ் நாடியவாரே
அல்லாஹ் நாடியவாரே

சத்தியத்தை பேசிய ஹீரோ (நான் என் வீட்டில் உங்களை இப்படித்தான் அறிமுக செய்து வைத்து பேசுவேன்). உண்மையில் இப்போது உள்ள இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும் தாங்கள் சரியான வார்த்தைகளை உதித்திருக்கிறீர்கள் மேலும் உங்கள் பணிக்கு அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிவானாக .

Translate to English (United Kingdom)

அஸ்ஸலாமு அலைக்கும்

அன்புள்ள ஆசிரியருக்கு...

வைகறை வெளிச்சம் டிசம்பர் 2021 இதழ் கண்டேன்.

இதழில் உள்ள கட்டுரைகள் அனைத்தும் மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன; அனைத்தும் காலத்திற்கேற்றவை.

பல்வேறு உண்மைகளை வெளியே கொண்டு வருகின்றீர்கள்.

உங்கள் சிறப்பான பணி தொடரட்டும். வாழ்த்துகள்.

- Dr. E.அப்துல் ஹாதி பாகவி
இமாம் மதீனா மஸ்ஜித்
பட்டினப்பாக்கம் சென்னை - 28

# புத்தக விமர்சனம்

ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு".
இந்நூலின் ஆசிரியர் மூத்த பத்திரிக்கையாளர் M.முகம்மது தாஹா அவர்கள் ஆரம்பத்தில் சமரசம் இதழில் தொடராக வெளிவந்தது பின்னர் வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க I F T வாயிலாக நூலாக வெளியிடப்பட்டது. வேர்கள் பதிப்பகத்தில் வெளிவரும் இந்நூல் இது வரையிலும் 4 பதிப்புகள் 9000 பிரதிகள் வரை விற்ற நூல்..

இன்று முஜாஹித்தின்கள் என்றாலே அவர்கள் அவர்கள் தீவிரவாதிகள் என்ற ஒரு பிம்பம் உருவாக்கப்பட்டிருக்கிறது ஆனால் உண்மையில் முஜாஹித்தின் என்பவர்கள் 1976ல் ஆப்கானிஸ்தானை ரஷ்ய படை ஆக்கிரமித்தது. ரஷ்யா என்ற வல்லரசை எதிர்க்க எவரும் இல்லை என்ற நிலையில் இருந்த போது தமது தாய்நாட்டை ஆக்கிரமித்து அட்டூழியங்களை செய்து கொண்டிருந்த ரஷ்யா என்ற வல்லரசை எவ்வித நவீன ஆயுதங்களும் போர்க் கருவிகளும் முறையான போர் பயிற்சிகளும் இல்லாத ஒரு சிறிய இளைஞர் கூட்டம் முறையாக பயிற்சி பெற்ற ஒரு வல்லரசின் படையை எப்படி ஈமானிய மன உறுதியுடனும் வீரத் தீரமாகவும் எதிர்த்து வென்றது என்ற வியப்பூட்டும் வினாவிற்கு பதிலே இந்நூல்..

"சாம்ராஜ்யங்களின் சமாதி" என்று அழைக்கப்படும் ஆப்கானிஸ்தானில் தங்களுடைய கம்யூனிச சித்தாந்தத்தை திணித்து மக்களை அடக்கி ஆளலாம் என்று மனப்பால் குடித்த ரஷ்யா என்ற வல்லரசை எதிர்த்ததில் ஆப்கானிஸ்தானின் அனைத்து தரப்பு மக்களின் ஆண்கள் பெண்கள் மாணவ மாணவிகள் என அனைவரின் பங்களிப்பும் இருந்தது.

அநீதிக்கு எதிராக நியாயத்தை நிலைநிறுத்த ஆயுதம் தாங்கி போராட வேண்டிய கட்டத்திலும் கூட கொஞ்சமும் அஞ்சாமல் இறை உறுதியுடன் எதிரிகளை நெருக்க நேர் களத்தில் எதிர்த்து வெற்றி அல்லது வீரமரணம் என்று முஜாஹித்தின்கள் செய்த போர்களும் இறைவனின் புறத்தில் இருந்து அந்த போராளிகள் பெற்ற உதவிகளையும் அறியும் போது ஆரம்ப காலத்தில் இக்கட்டான சூழ்நிலையில் முஸ்லீம்கள் இறைவனின் புறத்திலிருந்து பெற்ற உதவிகளை வரலாற்றின் வாயிலாக நாம் அறிந்த பல நிகழ்வுகள் நம் கண் முன் தோன்றும்.

இந்த ஆக்கிரமிப்பு நாட்களில் ஆப்கானிய பெண்களின் பங்களிப்பு என்பது மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது.. ஆப்கானிஸ்தானில் ரஷ்யர்கள் கால் வைத்த நாள் முதல் பள்ளி கல்லூரி மாணவிகள் வீதிகளில் குழுமினர்.

இந்த போராட்டங்களில் ரஷ்ய கம்யூனிஸ்ட்களுக்கு எதிராக முழக்கமிட்டனர்.பல மாணவிகள் இந்த போராட்ட களங்களிலேயே வீரமரணம் அடைந்தார்..

இதையெல்லாம் விட ஆண்களை போராட்ட களங்களுக்கு அனுப்பி வைப்பதில் பெண்களின் பங்கு முதன்மையானதாக விளங்கியது..


நாஹீத் என்ற சகோதரி ரஷ்ய படையினருக்கு எதிரான போரில் தனது கணவனை இழந்தார் மனம் தளராத அந்த சகோதரி தனது மகனையும் போர்க்களத்திற்கு அனுப்பி வைத்த போது தன் மகனிடம் அந்த தாய் கூறினார்

"அல்லாஹ் இருக்கின்றான் என்னைக் காப்பாற்ற! அவனே என்னைக் காப்பாற்ற விரும்பவில்லை என்றால் அப்போது உன்னாலும் இயலாது. போய் வா மகனே அல்லாஹ்வின் பாதையில்! சந்திப்போம் மறுமையில்! எல்லோரையும் அல்லாஹ் ஒன்று சேர்ப்பான்",

கண்களில் கண்ணீர் கரை புரண்டோடியது தாய்க்கும் மகனுக்கும் மட்டுமில்லை வாசிப்போருக்கும் தான்!!

இத்தகைய அறப்போரை இந்த இருபதாம் நூற்றாண்டில் தீரமுடன் நடத்தி ஆக்கிரமிப்பாளரை விரட்டியடித்தனர் ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள்..

ரஷ்யா எனும் மாபெரும் வல்லரசை வீழ்த்திய போராளிகளின் வரலாறு, ஆப்கான் பெண்களின் பங்களிப்புகள், ஈமானை வலுப்படுத்தக்கூடிய பல சம்பவங்கள் என உயிரோட்டமான எழுத்து நடையில் பல ஆதாரங்களை திரட்டி இந்த அரிய வரலாற்று நூலை நமக்கு அளித்திருப்பர் இந்நூலின் ஆசிரியர்.பல படிப்பினைகளை நமக்கு வழங்கக்கூடிய இந்நூலை ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்க வேண்டிய முக்கியமான நூல்..








முஹம்மது தாஹா
மங்களக்குடி

செப்டம்பர்-2021 இளையோர் முரசு 10

மாற்றம் • 2 weeks ago

Congress யை சார்ந்தவர்கள் இந்த பதிவை பார்க்க வேண்டும்....! இதில் இருந்து பாடம் கற்றுகொள்ள வேண்டும்

Translate to English (United Kingdom)

4

Arafath Hamas Aks • 2 weeks ago

கதர் கிழிந்தாள் தைக்க முடியாது காங்கிரஸ் காரன திருத்தவே முடியாது..

Translate to English (United Kingdom)


Imam Ali • 11 days ago

ஐயா உங்களுடைய அறிவு திறமை வியக்க வைக்கிறது... உங்களைப் போன்ற அறிவு ஜீவிகளை நம் சமுதாயம் பயன்படுத்திக் கொள்ளாதது வேதனை

Translate to English (United Kingdom)

8 1

# NIA/UAPAக்கு எதிரான மக்கள் இயக்கம்



மாண்புமிகு திரு.

## மதன்.பி.லோக்கூர்

உச்சநீதிமன்ற நீதிபதி(ஓய்வு)

## அவர்களின் உரை

நீண்ட காலம் சிறையிலிருந்த பிறகு விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஓர் அமைப்புத் தேவையா? என்பதுதான் நான் உரையாற்றுவதற்கு முன் எனக்கு வைக்கப்பட்டுள்ள கேள்வியாகும். இந்தக் கேள்விக்கு ஒரே சொல்லில் பதில் கொடுக்க வேண்டுமென்றால், ஆம். அப்படிப்பட்டதோர் அமைப்பு கட்டாயம் தேவை என்பதுதான். ஆனால் இந்தத் தலைப்பைக் கடந்து, மேலும் செல்வதற்கு நான் விரும்புகிறேன். விடுதலை செய்யப்பட்டதோடு சிறையில் இருந்ததற்கு இழப்பீடு பெறுவது எனும் கேள்வி மட்டுமல்ல,நமது குற்றவியல் நீதி முறையில் எண்ணற்ற பிற நிகழ்வுகளுக்கும் கட்டாயம் இழப்பீடு தரவேண்டும்.

கொடுங்கோன்மைச் சட்டங்களான அரச விரோதச் சட்டம் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் ஊபா (UAPA) ஆகியவை நீக்கப்பட வேண்டுமென அனைத்துச் சொற்பொழிவாளர்களும் சுட்டிக்காட்டினார்கள். இத்தகைய சட்டங்கள் எங்கும் போகப்போவதில்லை, மாறாமல் நமது சட்டப்புத்தகத்திலேயே அவை தொடர்ந்து இருக்கும் என்பதுதான் எனது கண்ணோட்டமாக இருக்கிறது. இதற்கு மாறாக தேசியப் பாதுகாப்புச் சட்டம் NSA இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே மணிப்பூரில் NSA பயன்பாட்டில் உள்ளது. உத்தரப்பிரதேசத்தில் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 90 க்கும் அதிகமான தடுப்புக்காவல் ஆணைகளை அலகாபாத் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. ஆகவே அரச விரோதச் சட்டம் மற்றும் ஊபாச் சட்டங்கள் மட்டுமல்ல, மாற்றுக் கருத்தை அடக்கி ஒடுக்கவும், அரசின் கருத்திற்கு இணங்காத மக்களைத் தடுக்கவும் சட்டத்தை அதிக அளவில் பயன்படுத்தப் போவதை நாம் இனிமேல் பார்க்கப் போகிறோம்.

இழப்பீடு குறித்த வரலாற்றிற்குள் சிறிதளவு போக விரும்புகிறேன். நமது நீதி பரிபாலனத்தில் மனித உரிமைகளுக்காக இழப்பீடு வழங்குவது குறித்து இன்றைய காலகட்டத்தில் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வந்தாலும் அது ஒன்றும் புதிதல்ல. இதுகுறித்து உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஐந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளைச் சுருக்கமாகக் குறிப்பிட நான் விரும்புகிறேன்.

முதலாவதாக,1983ஆம் ஆண்டு நடைபெற்ற ரூடுல் ஷா வழக்கு.1978 ஆம் ஆண்டு விசாரணைக்குப் பிறகு அவர் விடுவிக்கப்பட்டார். ஆனால் கெடுவாய்ப்பாக விடுதலை செய்யப்பட்ட பிறகும், அவர் சிறையில் அடைக்கப்பட்டு 14 ஆண்டுகளுக்குப் பிறகுதான் 1982 ஆம் ஆண்டுதான் வெளியே அனுப்பப்பட்டார். எனவே அவருக்கு இழப்பீடாக ரூ.30,000 உச்ச நீதிமன்றம் வழங்கியது. அந்தக் காலகட்டத்தில் அது ஒரு கணிசமான தொகையாக இருந்தது. மேலும் கூடுதல் இழப்பீடு பெற, சிவில் வழக்குத் தொடரும் உரிமையையும் உச்ச நீதிமன்றம் வழங்கியது.

செபாஸ்டியன் ஹான்கிரே என்பவரும் வேறு சிலரும் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு, பிறகு அவர்கள் காணாமல் போய்விட்டார்கள். அவர்களை நேர் நிறுத்துமாறு உச்சநீதிமன்றம் கோரியது. ஆனால் அப்படிப்பட்ட நிகழ்வு நடைபெறவே இல்லை என மறுக்கப்பட்டுவிட்டது. இருப்பினும் அவர்கள் இராணுவத்தின் பிடியில்தான் உள்ளனர் என்று ஆதாரங்களை சுட்டிக்காட்டின. ஆனால் அவர்கள் நேர் நிறுத்தப்படாததால், அவர்கள் இறந்து போய்விட்டதாகவோ அல்லது காணாமல் போய்விட்டதாகவோ கருதப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபாயை உச்சநீதிமன்றம் இழப்பீடாக வழங்கியது.

1985 ஆம் ஆண்டில் ஜம்மு-காஷ்மீர் சட்டப்பேரவையின் உறுப்பினராக இருந்தவர் பேராசிரியர்.பீம்சிங்.

அவர் சட்டப்பேரவைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காகப் பயணம் செய்து கொண்டிருந்தார். ஆனால் வழியிலேயே அவர் கடத்தப்பட்டதால், பேரவை நிகழ்வில் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை. பேராசிரியராகவும், வழக்கறிஞராகவும் இருந்ததால், அவர் ஒரு வழக்கைத் தொடுத்தார். இப்படி ஒருவரைக் கடத்திக் கொண்டுபோவது எவ்வாறு சாத்தியமாகிறது என்பதை அறிய உச்சநீதிமன்றம் விரும்பியது. அவருக்கு ரூ.50,000 இழப்பீடாக வழங்கப்பட்டது.

1989ஆம் ஆண்டு சஹேலி எனும் தன்னார்வ அமைப்பு,போலீஸ் காவலில் நிகழ்ந்த ஒரு மரணத்திற்கு எதிராக வழக்கு தொடுத்தது. உச்சநீதிமன்றம் இவ்வழக்கில் 75,000ரூபாய் இழப்பீடாக வழங்கியது.

1993 ஆம் ஆண்டில் நிலாபட்டி பெஹேராவின் மகன் போலீஸ் காவலில் மரணமடைந்தது குறித்து உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது.ஓர் இரயில் தண்டவாளத்தின் அருகே அவரது உடல் பின்னாளில் கண்டெடுக்கப்பட்டது. இவ்வழக்கிக் அந்தப் பெண்ணுக்கு 1,50,000ரூபாய் இழப்பீடாக உச்ச நீதிமன்றம் வழங்கியது.

எனவே இழப்பீடாகப் பணம் தருவது என்பது புதிதானது அல்ல. ஒருவர் காணாமல் போகும் பொழுதும், கடத்தப்படும் பொழுதும், போலீஸ் காவலில் இறக்கும் பொழுதும் உச்சநீதிமன்றத்தால் இழப்பீடு வழங்கப்படுகிறது.1993 ஆம் ஆண்டு நிலாபட்டி பெஹேரா வழக்கிற்குப் பிறகு, இத்தகைய சட்டவிரோதமான கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.மேலும் மனித உரிமைகள் மீறப்படும் பொழுது, இழப்பீடு வழங்குவது நீதி பரிபாலனத்தில் அனேகமாக இல்லாமலேயே போய்விட்டது. இதற்கான காரணம் எது என்பது எனக்குத் தெரியவில்லை.

மீண்டும் ஒருமுறை இத்தகைய சிக்கலை நாம் எதிர்கொள்கிறோம். திறமைமிக்க விஞ்ஞானியாகிய நம்பி நாராயணன் வழக்கு இப்பொழுது வந்துள்ளது. சட்டவிரோதமாக அவர் அடைத்து வைக்கப்பட்டார்.எனவே உச்ச நீதிமன்றம் அவருக்கு 50 இலட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்க ஆணையிட்டது. இது சில ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றதாகும்.

அண்மையில் அகில் கோகாய் கைது செய்யப்பட்டு, ஊபாச் சட்டத்தின்கீழ் ஓராண்டிற்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டார். குற்றச்சாட்டுப் பதிவு செய்வதற்காக அவரது வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது, விசாரணை நீதிபதி ஊபாச் சட்டத்தின் கீழ் எந்த ஒரு குற்றம் செய்யப்படவில்லை என அவரை விடுதலை செய்தார். வழக்கிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு மட்டுமல்ல, வழக்கிலிருந்து குற்றமற்றவர் என முழுமையாக விடுதலை செய்யப்படுபவருக்கும் இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

எனினும் அவருக்கு இழப்பீடு ஏதும் வழங்கப்படவில்லை.ஊபாச் சட்டத்தின் கீழும், அரசு விரோதச் சட்டத்தின் கீழும் வழக்குப் பதிவு செய்வதற்கு வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க வேண்டியதின் தேவை குறித்து அப்பொழுது வலியுறுத்தப்பட்டது. ஆனால் எதுவும் நடக்கவில்லை.

மிக அண்மையில் முனவார் பரூக்கி உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். ஏன்? காவல்துறை அவரைக் கைதுசெய்த பொழுது, 2014 ஆம் ஆண்டு அர்னேஷ் குமார் வழக்கில் உச்சநீதிமன்றம் உருவாக்கிய வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதுதான் அதற்குக் காரணம். உரிய வழிகாட்டு நெறிமுறைகளை உச்சநீதிமன்றம் வகுத்திருந்தாலும், அவற்றைப் பின்பற்ற வேண்டியதில்லை எனக் காவல்துறை தீர்மானித்தால், அவை பின்பற்றப்பட மாட்டாது.முனைவர் பரூக்கி சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டிருந்தாலும், இழப்பீடு எதுவும் அவருக்கு வழங்கப்படவில்லை.

திரிபுராவைச் சேர்ந்த முகமது ஹபீப், ஊபாச் சட்டக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பெங்களூருவில் கைது செய்யப்பட்டார். அவர் நான்கு ஆண்டுகள் சிறையில் இருந்தார். அதன்பின் அவருக்கு எதிராக உரிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தால், அவர் விடுவிக்கப்பட்டார். அவர் விடுவிக்கப்பட்டார் எனினும்,

குற்றமற்றவர் என விடுதலை செய்யப்படவில்லை எனும் வழக்கிற்கு இதுவும் கூட ஓர் எடுத்துக்காட்டாகும். இருப்பினும் அவருக்கு எந்த ஓர் இழப்பீடும் வழங்கப்படவில்லை.

பல நபர்களை விடுதலை செய்யுமாறு நீதிமன்றங்கள் அறிவுறுத்தினாலும், அவர்கள் விடுதலை செய்யப்படுவது இல்லை. 25 ஆண்டுகளுக்கு முன்பு திகார் சிறையில் உள்ள சில நபர்களை விடுதலை செய்யுமாறு தில்லி உயர்நீதிமன்றம் வழிகாட்டி இருந்தது. ஆனால் உயர் நீதிமன்றத்தின் ஆணையை மீறக்கூடிய வகையில்,15 நாட்கள் அவர்களைத் திகார் சிறை விடுதலை செய்யவில்லை. சட்டவிரோதமாக அடைத்து வைத்திருந்ததற்காக அவர்களுக்கு உரிய இழப்பீடு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று பிறகு வலியுறுத்தப்பட்டது.

உச்சநீதிமன்றத்தால் சஞ்சய் தத்துக்குப் பிணை வழங்கப்பட்டது. ஆனால் புனேவில் உள்ள எரவாடா சிறையில் மேலும் இரண்டு நாட்கள் அவர் அடைத்து வைக்கப்பட்டிருந்தார். ஏன்?ஏனென்றால், உச்ச நீதிமன்றத்தின் ஆணை உரிய நேரத்தில் பூனாவிற்கு வந்து சேரவில்லை.

புதுதில்லி நீதிமன்றத்தால் மூன்று செயல்பாட்டாளர்களுக்கு அண்மையில் பிணை வழங்கப்பட்டது. காவல்துறையும் குற்றம் சாட்டுபவர்களும் என்ன கூறினார்கள்?

அவர்கள் கைது செய்யப்பட்ட பொழுது, அவர்களது

ஆதார் அட்டையையோ அல்லது அவர்களுடைய முகவரியையோ காவலர்கள் எப்படிச் சோதனை செய்யாமல் விட்டார்கள்? இங்கே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது?

இரண்டு வாரங்களுக்கு முன்பு குழந்தைகள் என தங்களை உரிமை கொண்டாடுபவர்கள், சிறையில் 14 மற்றும் 22 ஆண்டுகள் சிறையில் இருந்திருக்கின்றனர். உச்சநீதிமன்றம் அவர்களை விடுதலை செய்ய ஆணையிட்டது. ஆனால் உச்சநீதிமன்றம் உரிய பரிகார நடவடிக்கைகளை எடுக்கும் என அறிவிக்கும் வரை, ஆக்ரா சிறை அவர்களை விடுவிக்கவில்லை. அதன் பிறகுதான் அதை ஏற்றுக்கொண்டு, ஆக்ரா சிறை அவர்களை விடுவித்தது.

இவை அனைத்தின் விளைவுதான் என்ன? இதன் விளைவு என்னவென்றால், மணிப்பூர் செயல்பாட்டாளர் வழக்கில் அவரை விடுதலை செய்யுமாறு உச்ச நீதிமன்றம் இறுதி நேரத்தில் மாலை ஐந்து மணிக்கு வலியுறுத்த நேரிட்டது. இத்தகைய இடத்திற்குத்தான் நாம் வந்து சேர்ந்து இருக்கின்றோம் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

நீதிமன்றம் ஒரு நபரை விடுதலை செய்யுமாறு கூறினால், சிறை நிர்வாகமும், காவலர்களும் அவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும் என்பது அவர்களது கடமையாகும். இல்லை இல்லை, நான் எப்பொழுது நினைக்கிறேனோ அப்பொழுது அவரை நான் விடுதலை செய்வேன் என்று அவர்கள் கூற முடியாது.

சட்டவிரோதமாக அடைத்து வைத்ததற்காக ஒரு நாளைக்கு 1000 ரூபாய் வீதம் 15 நாட்களுக்கு திகார் சிறையில் இருந்தவருக்குத் தரப்பட்டது தவிர,வேறு எந்த வழக்குகளில் இழப்பீடு ஏதும் தரப்படவில்லை.

போலி மோதல் கொலை என்பது கவலைக்குரிய மற்றொரு பகுதியாகும். போலி மோதல் கொலைகளுக்கு இழப்பீடு ஏதும் தரப்படுவது இல்லை. மணிப்பூரில் 12 வயதுச் சிறுவன் ஒருவன் தீவிரவாதி எனவும், தப்பியோட அவன் முயற்சித்தான் என்ற அடிப்படையிலும் அவனை பின்புறத்தில் சுட்டதாக வந்த ஒரு வழக்கினை நானும் நீதிபதி.தீபக் குப்தா அவர்களும் கையாள நேரிட்டது. திறமையானதோர் நீதிபதியாகிய சந்தோஷ் ஹெக்டே அந்த சமயத்தில் ஓய்வு பெற்றிருந்தார். இந்த வழக்கினைக் கவனிக்குமாறு முன்னதாக அவர் கேட்டுக் கொள்ளப்பட்டு இருந்தார்.

இது ஒரு போலி மோதல் கொலை எனவும், அந்தச் சிறுவனுக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டதைப்போல எந்த ஒரு நிகழ்ச்சியும் நடைபெறவில்லை எனவும் அவர் அறிக்கை சமர்ப்பித்தார்.நாங்கள் குறுக்கீடு செய்யும் வரை அதில் எவ்வித இழப்பீடும் வழங்கப்படவில்லை.

உத்தரப்பிரதேசத்தில் தொடர்ந்து 119 பேர் போலி மோதல் கொலைகளில் கொல்லப்பட்டனர்.

119 பேர் படுகொலை! அவர்கள் அனைவரும் தப்பியோட முயன்றனர் எனவும், அவர்கள் அனைவரும் காவலர்களிடம் இருந்து துப்பாக்கிகளைப் பறிக்க முயன்றனர் எனவும், அவர்கள் அனைவரும் பயங்கரமான கிரிமினல் குற்றவாளிகள் எனவும் குற்றம் சாட்டப்பட்டது. இது எவ்வாறு சாத்தியமானது? ஏதாவது ஒரு விசாரணை நடத்தப்பட்டதா? அல்லது காவலர்கள் அவர்களைச் சுட்டுக் கொல்லலாம் எனவும், அவர்கள் அனைவரும் அஞ்சத்தக்க கிரிமினல் குற்றவாளிகள் எனவும் கூறுவார்களா?

இதைப்போலவே அசாமிலும் ஒரு சிறைக்கைதி தப்பித்து ஓட முயற்சித்ததால், அவர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். போலி மோதல் கொலையில் ஏற்கனவே ஐந்து நபர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்கான இழப்பீடு என்ன?

குற்றமற்றவர் என விடுதலை செய்யப்படும் வழக்குகளில் மட்டுமல்ல, வேறு பல வகையான வழக்குகளிலும் இழப்பீடு கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும்.

சூரத்தில் 19 ஆண்டுகளுக்குப் பிறகு 122 நபர்கள் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்டதாக அறிக்கைகள் உள்ளன. அவர்கள் அனைவரும் அவ்வளவு நாட்கள் சிறையில் இருக்கவில்லை. அவர்களில் சிலர் மட்டும் சிறிது காலம் சிறையில் இருந்திருக்கின்றனர்.பல ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டதற்கு இந்த வழக்கு ஒரு எடுத்துக்காட்டு. ஆனால் யாருக்கும் எவ்வித இழப்பீடும் வழங்கப்படவில்லை.

பஷீர் அகமது பாபா என்பவர் காஷ்மீரில் வாழ்ந்து வருபவர். புற்றுநோய் எதிர்ப்பு முகாமில் பங்கேற்பதற்காக அவர் குஜராத்துக்குப் பயணம் செய்து கொண்டிருந்தார்.அவர் ஒரு தீவிரவாதி என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டு, 11 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த முரண்பாட்டைப் பாருங்கள்!அவர் என்ன செய்யப் போகிறார்? காஷ்மீரில் உள்ள மக்களுக்கு உதவுவதற்காகவும்,புற்றுநோயைக் குணப்படுத்துவது எவ்வாறு என்பதைப் புரிந்து கொள்வதற்காகவும், புற்றுநோயை எவ்வாறு கையாளவேண்டும் என்பதை அறிவதற்காகவும்,புற்றுநோய் எதிர்ப்பு முகாமில் பங்கேற்க அவர் போய்க்கொண்டிருந்தார். ஆனால் அவர்கள் அவரைச் சிறையில் அடைத்தார்கள். பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டார்.ஆனால் எவ்வகையான இழப்பீடும் அவருக்கு வழங்கப்படவில்லை.

(காவல் சித்ரவதைகளுக்கு எதிரான கூட்டியக்கம் - தமிழ்நாடு - புதுவை வெளியிட்ட, "கொடுங்கோன்மைச் சட்டங்களுக்கு எதிரான நீதியின் குரல்" நூலிலிருந்து)

தொடரும்......

# வெறுப்புப் பேச்சுக்கள், ஹரித்துவார்

## டெல்லி உச்ச நீதிமன்றம் தானாகவே முன்வந்து நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

To
The Hon'ble Mr.Justice N.V.Ramana
The Chief Justice of India
Supreme Court of India
Tilak Marg
New Delhi-110001

Dated: 26.12.2021

**Subject – Prayer for taking of *Suo Moto* Cognizance of hate speeches calling for the genocide of Muslims given in Haridwar and Delhi**

This is to bring to your kind notice that between the 17th & 19th of December 2021 at two separate events organized in Delhi (by the Hindu Yuva Vahini) and Haridwar (by Yati Narsinghanand), hate speeches consisting of open calls for genocide of Muslims in order to achieve ethnic cleansing, were made by the following:

1. Yati Narsinghanand Giri
2. Sagar Sindhu Maharaj
3. Dharamdas Maharaj
4. Premanand Maharaj
5. Sadhvi Annapoorna alias Pooja Shakun Pandey
6. Swami Anand Swaroop
7. Ashwani Upadhyay
8. Suresh Chavhanke
9. Swami Prabodhanand Giri

The aforementioned events and the speeches delivered during the same are not mere hate speeches but amount to an open call for murder of an entire community. The said speeches thus, pose a grave threat not just to the unity and integrity of our country but also endanger the lives of millions of Muslim citizens.

In view of the seriousness and gravity of the aforementioned events it is most humbly prayed that Your Lordship may take *suo-moto* cognizance of the same and direct that action be taken against the guilty persons under Sections 120B, 121A, 153A, 153B, 295A and 298 of the Indian Penal Code, 1860.

It is also pointed out that the recent speeches are a part of a series of similar speeches that we have come across in the past. It may be noted that no effective steps have been taken under the provisions of 153, 153A, 153B, 295A, 504, 506, 120B, 34 of IPC in respect of the earlier hate speeches. Thus, urgent judicial intervention is required to prevent such events that seem to have become the order of the day. We have also been informed that in this regard a few Petitions under Article 32 of the Constitution of India are also pending for consideration before the Hon'ble Supreme Court.

We are writing to your Lordship hoping for prompt action in your capacity as the head of the judicial wing of the State and knowing your Lordship's commitment to both the independence of Judiciary as also the constitutional values that are fundamental to the functioning of a multicultural nation such as ours.

அண்மையில் ஹரித்துவார் மற்றும் டெல்லியில் பேசப்பட்ட வெறுப்புப் பேச்சு, இனச் சுத்திகரிப்பிற்கான அறிவிப்புகள், ஆகியவற்றிற்கு எதிராக மக்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றார்கள்.

இதில் உச்சநீதிமன்றத்தைச் சார்ந்த மூத்த வழக்கறிஞர்கள், நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காப்பதில் அக்கறை உள்ள ஆர்வலர்கள் ஆகியோர் நமது தலைமை நீதிபதி அவர்களுக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்கள்.

அதனை இங்கே தருகின்றோம்.

**பெறுநர்**

மேதகு நீதிபதி.N.V.ரமணா அவர்கள்,
இந்தியாவின் தலைமை நீதிபதி,
உச்சநீதிமன்றம்,
திலக் மார்க்,
புதுச்சேரி - 110001.

**பொருள்:** தானாகவே முன்வந்து வெறுப்புப் பேச்சுக்களின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை. இந்தப் பேச்சுக்கள், முஸ்லிம்களை பூண்டோடு அழிக்க, அணிதிரட்ட அழைப்புவிடப்பட்டவை.

உங்களுடைய மேலான கவனத்திற்கு இதனைக் கொண்டு வருகின்றோம். கடந்த 17, 19 (2021) ஆகிய நாட்களில் இரண்டு தனித்தனியான நிகழ்ச்சிகள் நடந்தன. டெல்லியில் ஒன்றும், ஹரித்துவாரில் ஒன்றும் நடந்தது. டெல்லியில் “இந்து யுவ வாகினி” என்ற அமைப்பு நடத்தியது. ஹரித்துவாரில் யாத்தி நரசிங்கானந்த் என்பவர் நடத்தியது. இந்த இரண்டு இடங்களிலும் முஸ்லிம்களை இனப்படுகொலைக்கு உள்ளாக்கிட வேண்டும், என அறைகூவல் விடப்பட்டது.

**பின் வருபவர்களால்,**

1.யாத்தி நரசிங்கானந்த் கிரி
2.சாகர் சிந்து மகாராஜ்
3.தரம்தாஸ் மகாராஜ்
4.பிரேமானந்த் மகாராஜ்
5.சாத்வி அன்னபூர்ணா - பூஜா ஷாக்குன் பாண்டே
6.சுவாமி ஆனந்த் ஸ்வரூப்.
7.உதித்யா தியாகி
8.அஷ்வினி உபாதையா,
9.சுரேஷ் சாவ்கான்ங்கி
10.சுவாமி பிரபோதானந்த் கிரி

மேலே சொன்ன நிகழ்வுகளில் பேசிய, பேச்சுக்களை, வெறும் வெறுப்புப் பேச்சுக்கள் என எடுத்துக் கொள்வதற்கில்லை. அவை ஒரு சமுதாயத்தை முழுமையாகக் கொலை செய்வதற்கு விடப்பட்ட பகிரங்கமான அணிதிரட்டல். அந்தப் பேச்சுக்கள், நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் வைத்த

வேட்டு. அத்தோடு லட்சக்கணக்கான முஸ்லிம் குடிமக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாகும்.

சூழ்நிலையின் அவசரம், ஆபத்து இவற்றைக் கருத்தில் கொண்டு, இந்தியாவின் தலைமை நீதிபதியாகிய நீங்கள், நாங்கள் மெத்த பணிந்து வேண்டுவது என்னவெனில் தாங்களாகவே முன்வந்து இந்தக் குற்றத்தின் மேல், நடவடிக்கை எடுக்க வேண்டும்.அந்த நடவடிக்கை இந்திய தண்டனைச் சட்டம் *(1860)* பிரிவுகள் 120B,121A,124A, 153A/153B, 295A/ 298.

இங்கே நாங்கள், இன்னொன்றையும் சுட்டிக்காட்டிட விரும்புகின்றோம். இந்த (வெறுப்பு) பேச்சுக்கள்போல் பல பேச்சுக்கள், இதற்கு முன்னரும் பேசப்பட்டுள்ளன. அந்தப் பேச்சுகளில் தொனித்த குற்றங்களுக்கு இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 153, 153A,153B,295A,504,506,120B, 34 of IPC ஆகியவற்றின் கீழ் எந்த உருப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை.

நாங்கள் இந்தக் கடிதத்தை மிகப்பெரிய நம்பிக்கை, எதிர்பார்ப்பு இவற்றின் கீழ் எழுதுகின்றோம். நமது நாட்டின் நீதித்துறையின் தலைவர் என்ற அடிப்படையிலும், நீங்கள் நீதித்துறையின் செயல்பாடுகளின் சுதந்திரத்திற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் என்ற அடிப்படையிலும் பல கலாச்சாரங்களைக் கொண்ட நாட்டின், பன்முகத்தன்மையைக் காப்பாற்றிடுவதற்கு இது அவசியம் என்பதாலும் இதை எழுதுகின்றோம்.

மதிப்புடன்,

1.அஞ்ஜனா பிரகாஷ் - மூத்த வழக்கறிஞர், முன்னாள் நீதிபதி!

2.பிரசாந்த் பூஷன் - வழக்கறிஞர்

3. இராஜூ இராமச்சந்திரன் - மூத்த வழக்கறிஞர்

4.ஹூஸாபா அஹமதி - மூத்த வழக்கறிஞர்

5.சித்தார்த் தேவ் - மூத்த வழக்கறிஞர்

6. ஃபூசைல் செய்யீத் அஹ்மதி - மூத்த வழக்கறிஞர்

7.அமித் ஆனந்த் திவாரி - வழக்கறிஞர்

8. ஈஜாஸ் மக்பூல் - வழக்கறிஞர்

9. ஷதான் ஃபராபித் - வழக்கறிஞர்

10.அமிகா ஜோசப் - வழக்கறிஞர்

11.ஷோமானா கன்னா - வழக்கறிஞர்

12. அனுஜ் பிரகாஷ் - வழக்கறிஞர்

13. இராஜேத் திவாரி - வழக்கறிஞர்

14.பயோலி - வழக்கறிஞர்

இதுபோல் இன்னும் பல நூறு வழக்கறிஞர்கள், பல ஆயிரம் மனித உரிமை ஆர்வலர்கள் இவர்களெல்லாம் நீண்ட நெடியதொரு காலம் நீதிக்காக போராடிக் கொண்டிருக்கின்றனர்.

ஆபத்துகளும், அநீதிகளும், சொல்லொண்ணா அழிவுகளும் முஸ்லிம்களை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன.

அவர்கள்,முஸ்லிம்கள் ஒரு பெரும் போரை எல்லா நிலையிலும் எதிர்கொண்டு நிற்கின்றார்கள். ஆனால் அவர்கள் இந்தப் போரில் தனித்துவிடப்பட்டவில்லை. மனித மாண்பாளர்கள் பலர் துணை நின்றிட தயாராக இருக்கின்றார்கள்.

இதனையும் கருத்தில் கொண்டே அவர்கள் களத்தில் வரும் சவால்களைச் சந்தித்திட வேண்டும். நாடாளுமன்ற தாக்குதலின் டிசம்பர் *13/2001* மூல மூளை எனக் குற்றம்சாட்டப்பட்ட SAR.ஜீலானி அவர்களுக்காகவும், ஏனையவர்களுக்காகவும் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன், இராம்ஜெத் மாலினி ஆகியோர் வாதாடினர். இவர்கள் முன்னாள் ஒன்றிய அரசின் சட்ட அமைச்சர்கள் என்பது குறிப்பிட்டத் தக்கது.

அருந்ததிராய், நந்தித்தா காஸ்கர், சுதபத்ரா சென் குப்தா, நிர்மலாங்ஷூ முர்ஜி, பிரஃபூல் பிட்வெ, அசோக் மித்ரா,சோனியா ஜாப்ர், மிகிர் சிரினிவஸ்தவா, இந்திர ஜெய்சிங் ஆகியோர் எடுத்த முயற்சிகள் அகில உலகையும் அதிரவைத்தது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**-MGM**


வேர்கள் பதிப்பகம்

## கஷ்மீரின் பாதி விதவைகள்

**பிப்ரவரி 23, 1991**

டெல்லியில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டபோது, இந்தியா முழுவதும் 15 நாள்கள் மெழுகுவர்த்தியைக் கொளுத்தினார்கள். ஆனால் ஒட்டுமொத்த கிராமமும் கற்பழிக்கப்பட்ட போது எதுவுமில்லை. எங்கே நமக்கு நியாயம் கிடைத்தது?




**தொகுப்பு: மு.குலாம் முஹம்மது**

**விலை: 70/-**

கொரியர் கட்டணம் தனி

140 Pages

For Order: 8148129887

8072773868

Vergal Publications



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002